
தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை



Acc. No: 2099
R65
23

கோ. அருட்கலை

52-2
2099

தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை

கோவிலூர் ஆதீனம்
2099
R65
கோவிலூர்-630307

கோ. அருட்கலை, எம்.ஏ., எம்.ஃபில்.,

வெளியீடு
அருள்நிலைப் பதிப்பகம்,
52, மூன்றாவது தெரு,
வெங்கட்டநகர்,
புதுச்சேரி-605011

1995 -
30/-

This Book is Published with the Financial Assistance of Government of Pondicherry.

Bibliographical Data

Title of the book	:	Thamizhar Panpaattil Nambikkai
Subject	:	A treatise on faith and belief among the Tamils
Language	:	Tamil
Author	:	G. Arutkalai
Date of Publication	:	December 1995
Copy right	:	G. Arutkalai
Paper used	:	10.7 kg. Crown
Size of the Book	:	18 × 12 cm.
Printing types used	:	10, 12 point
Number of pages	:	158
Publisher	:	Arul Nilai Pathippagam 52, Third Street Pondicherry — 605 011
Price	:	Rs. 30
Printer	:	Gajendra Printers. 57, South Car Street Chidambaram - 608 001
Binding	:	Section Binding

52-2

உள்ளுறை

'தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை'

அணிந்துரை

க. ப. அறவாணன்.
தமிழியல் துறைத் தலைவர்,
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி-605 014.

செல்வி. கோ. அருட்கலை கைவண்ணத்தில் உருவான இரண்டு நெடும் ஆய்வுத் தொகுப்பு முயற்சிகள் நூல் வடிவம் பெற்றுள்ளன. தமிழர் தம் வாழ்வில் வெற்றி பெறாமைக்குக் காரணம் அவரிடம் இருந்த பல்வேறு பிடிவாதமான நம்பிக்கைகள். நம்பாமையும், எதனையும், எப்படி, ஏன் என்று வினவுதலும் நேர்முகமாகத் தரவுகள் சேகரித்தலும், முடிவுரைத்தலும் ஐரோப்பியர் கிரேக்கரிடமிருந்து பெற்ற பண்பு. இதனாலேயே அறிவியல் மேற்கே வளர்ந்தது; கிழக்கே போதிய அளவு வளரவில்லை. இந்நூலில் நம் மக்களிடையே பரவியிருக்கும் நம்பிக்கைகளைத் தொகுத்து வகைப்படுத்திப் பார்ப்பது நம்மை அடையாளம் காட்டுவதாகும். இம்முயற்சியில் செல்வி. அருட்கலை குறிப்பிடத் தக்க அளவு வெற்றி பெற்றிருக்கிறார்.

நூலின் முதல் பகுதி பண்டைய தமிழர்தம் நம்பிக்கையையும், நூலின் இரண்டாம் பகுதி இன்றைய மக்களின் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகின்றன. எனவே, தமிழர் அன்றும், இன்றும் நம்பிக்கைகள் மேல் வைத்த நம்பிக்கையில் இருந்து விடுபடவில்லை என்பதை அருட்கலையின் ஆய்வேடு மெய்ப்பிக்கிறது. இதுவே ஆய்வேட்டின் வெற்றி.

ஆர்வமும், துடிப்பும் உடைய அருட்கலையின் முதல் படைப்பு இது. தொடர்ந்து இது போன்று பல படைப்புகளைத் தமிழுக்கும், தமிழர்க்கும் வழங்குவாராக.

11-12-95,
பாரதி பிறந்த நாள்.

க.ப. அறவாணன்

அணிந்துரை

முனைவர். T.B. சித்தலிங்கையா
புதுவைப் பல்கலைக்கழகம்

கடவுள் உண்டா, இல்லையா என்னும் கேள்வி மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்து தொடர்ந்து வருகிறது. இரு சாராரும் பல்வேறு காரணங்களையும் வாதங்களையும் எடுத்துக் கூறுகின்றனர். நம்பிக்கையும் கடவுளைப் போலத் தான். உண்டா, இல்லையா என்னும் கேள்விகள் சிறிது மாற்றத்துடன் நம்பிக்கைக்கு அடிப்படை உண்டா, இல்லையா என்று அமைகின்றன. இங்கே அடிப்படை என்பது எல்லோரும் மாறுபாடின்றி ஒப்புக்கொள்ளக் கூடிய அறிவியல் ஏற்கக்கூடிய அடிப்படை என்பதைக் குறிக்கிறது. காரண—காரியத் தொடர்பைக் காட்டினால் அது அனை வரும் ஏற்கும் அடிப்படையாக அறிவியல் விதிப்படி உரு வானதாக அமைகிறது.

பட்டறிவு (அநுபவ அறிவு) பல புதிய செய்திகளை வெளிப்படுத்துகிறது; புதிய எண்ணங்களைத் தோற்று விக்கிறது. இந்த எண்ணங்கள் வலுப்பெற்று நம்பிக்கைகளாக உருமாறுகின்றன. அந்த அநுபவங்களை வாய்க்கப் பெறாத வர்கள் அந்த நம்பிக்கைகளை ஏற்க மறுக்கிறார்கள்; அவற்றை 'மூடநம்பிக்கைகள்' எனக் குறிப்பிடுகிறார்கள். மூடநம்பிக்கை என்பதே தவறான சொல்லாட்சி (misnomer) ஒருவருக்கு நம்பிக்கையாக அமைவது, மற்றவரின் அநுபவத்துக்கே வாராததால் அதுபற்றிய 'அறிவே' அவருக்கு ஏற்படுவதில்லை. அந்த நிலையில் அது 'மூட' நம்பிக்கை யாவது எப்படி? அவருக்குத் தெரியவாராத நம்பிக்கை என்று வேண்டுமானால் சொல்லலாம். யாவும் மூடமாக (மூட்டமாக) இருக்கிறது என்று மக்கள் வழங்குவதை அறிவோம். அந்த வகையில் தெளிவாகத் தெரியாத விளக்க முடியாத

நம்பிக்கை, என்னும் பொருளிலும், மூடநம்பிக்கை என்ற தொடரைக் கொள்ளலாம்.

நம்பிக்கைகளையே ஆய்வுப் பொருளாகக் கொண்டு அலசிப்பார்க்க முற்பட்டிருக்கிறார், செல்வி கோ. அருட்கலை. இது நல்லதொரு முயற்சி. நாம் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், ஏற்றுக்கொண்டாலும், மறுத்தாலும், நம்பிக்கைகள் வாழ்வில், பண்பாட்டில் கலந்து விரவியுள்ளன. எனவே அவற்றைப் பற்றி அறிய-ஆராய-முற்படும் முயற்சியைப் பாராட்ட வேண்டும்.

நம்பிக்கைகளின் மூலங்கள் பற்றிய சிந்தனைகளை நிரல் படுத்தலில் நூல் தொடங்குகிறது. 'கால மாற்றத்தால் நம்பிக்கைகள் மடியவில்லை; வேறு வடிவில் வகைகளில் தொடர்கின்றன' (ப.5) என்று கூறி, 'மாந்தனின் இயலாமை இறவாதவரை மாந்தனிடமுள்ள நம்பிக்கைகளும் இறவா' (ப 5) என்று காரணம் காட்டுதல் சிந்தனையைத் தூண்டுகிறது.

தமிழ்நாட்டைப் பொருத்தவரை எந்தபொருளுக்கு வரலாறு காண வேண்டுமானாலும் தமிழ் இலக்கியத்தைத் தான் நாடவேண்டும். தமிழ்மொழியின் தொன்மை இதனை இன்றியமையாததாக்குகிறது. எனவே நம்பிக்கைகளின் வரலாற்றுக்கும் ஆட்சிக்கும் தொல்காப்பியமும் சங்கநூல்களும் சான்றுகாட்டுகின்றன. இலக்கியங்களில் காணப்படும் நம்பிக்கைகளை வகைப்படுத்தி நிமித்தம் (பக்.24-28), ஆழியிழைத்தல் [(இருவகையால் அமைதல்) பக். 28-30], புள் நிமித்தம் (பக் 30-33), பல்லி நிமித்தம் (பக் 35-36), மங்களச்சொல் கேட்டல் (பக் 37-40), மாந்தர் உறுப்புக்கள் (பக் 44-47), வழிபாடு (பக் 48-52) அழகாகவும், தொடர்பு காட்டியும் விளக்கி இருக்கின்ற பாங்கு பாராட்டுக்குரியது.

தனிமனிதனுடைய நம்பிக்கை வளர்ந்து, விரிந்து, பரவி, சமுதாய நம்பிக்கைகளாக மாறுகிறது. அதே போல, சமுதாயத்தின் பல நம்பிக்கைகள் தனிமனிதனைத் தாக்கு கின்றன. சமுதாய நம்பிக்கைகளுக்கு, கல்வியறிவு நிலை, பழக்க வழக்க மரபு நிலை முதலியவை காரணமாக அமை கின்றது என்பதைச் 'சமுதாயப் பின்புலனும், நம்பிக்கை களும்' என்னும் பகுதி திறம்பட நிறுவுகிறது.

இரண்டாம் பகுதியாக அமைந்த 'இராகுகால பூசையும், நம்பிக்கையும்', அண்மையில் தோன்றியதாகக் கருதப்படும் இராகுகால பூசைபற்றிய பலச் செய்திகளை வரிசையாக அமைத்து விளக்கம் தருகிறது. இராகுவைப் பற்றிய இலக்கியச் செய்திகளும் அந்தப் பூசையின் வகைகளும் பயன்களும் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. நூல்களில் கிடைக்கும் செய்திகளைத் தொகுப்பது ஓர் எளிய செயல் என்றே தோன்றும். ஆனால் அதில் புகும் போதுதான் அதில் உள்ள இடர்ப்பாடு புலனாகும். வழக்காற்றில் வேறு விதமான தகவல் கிடைக்கும். எனவே கள ஆய்வையும் மேற்கொண்டு இந்த நூலைத் திறம்பட யாத்திருக்கிறார், நூல் ஆசிரியர்.

தமிழ்ப் புலமையும், பற்றும் உயர்ந்த குடிமையும், பண் பாடும் மிகுந்த குடும்பத்தைச்சேர்ந்த செல்வி. அருட்கலை இத்தகைய நல்லதொரு நூலை அளித்திருக்கிறார். இந்த முயற்சியை மனதாரப் பாராட்டுகிறேன். இம்முயற்சி தொடர்ந்து வேறு பல நல்ல நூல்களைத் தரவேண்டும் என விரும்புகிறேன்; வாழ்த்துகிறேன்; அதற்கு இறையருள் துணை நிற்க என வழுத்துகிறேன்.

சித்தலிங்கன்

புதுவை
19—12—95

ஒரு வாழ்த்துரை

கி. ராஜநாராயணன்
13/21 ஆவது குறுக்குத் தெரு,
அவ்வை நகர்,
புதுச்சேரி—605 008.

நம்பிக்கைதான் மனுசவாழ்க்கையை நகர்த்திக்கொண்டு போகிறது. எதிலும், எப்பவும் இவனுக்கு நம்பிக்கை இருந்து கொண்டேயிருக்கணும். நம்பிக்கையில்லை ....—செத்தான்! சாவுகூட நம்பிக்கையைக் கைவிட்ட பிறகுதான் நம்மை நெருங்கும் என்பார்கள்.

படுக்கையைவிட்டு காலையில் எழுந்திருக்கும்போதே இன்று நல்ல நாளாக அமையணும், அமையும் என்று நம்புகிறான். அதனுடைய உள்விளைவுதான் இவன் மற்றவரைப் பார்த்ததும் நல்காலை (“குட் மார்னிங்”) சொல்லுகிறான். நல்மாலை, சுபராத்திரி போன்ற வாழ்த்துக் களும் ஆசிகளும் சொல்லுவதெல்லாம் நம்பிக்கையின் அடிப்படையில்தான். மானுட நம்பிக்கைகளிலெல்லாம் உச்சம் கொடுமுடி—கடவுள் தான்.

கற்பனை செறிந்த, இவனை ஆட்டிப்படைக்கும் பெரும் நம்பிக்கை இந்தக் கடவுள். அதனால்த்தான் கடவுளை இவன், “நம்பன்” “நம்பி” என்கிறான்.

“நம்பனே எங்கள் கோவே” (தேவா. 95.1) நம்பிக்கை உண்டாவதற்கு அடிப்படை உண்மை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்பிக்கைக்கு உண்மை என்றும் ஒரு பொருள் உண்டு! ஆனால், எல்லா நம்பிக்கைகளுக்கும் உண்மைதான் அடிப்படை என்றும் சொல்லிவிட முடியாது.

பிறப்பிலிருந்து சாவுவரை உள்ள நம்பிக்கைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். நம்பிக்கைகளைத்திரட்டி, வகைப்படுத்தி, அவைகளுக்குப் பொருள் கூறி, உண்டானதுக் கான கதைகளையும் காரண காரியங்களையும் சொல்லி ஒரு அகரமுதலியையே உருவாக்கலாம். மானுடவியல் ஆய்வுக்கு இது பெரிதும் பயன்தரும்.

பிறந்தது பெண்குழந்தையா; அதைச் சுற்றிப் பல நம்பிக்கைகள். ஆண் குழந்தைக்கும் அப்படியே.

சாவுக்குப் பின்னால் கூட — சாவைப் பற்றியும் — நம்பிக்கைகள் இருக்கின்றன. பிறந்த நேரத்துக்குத்தான் பலன்கள் உண்டு என்றில்லை; செத்த நேரத்துக்கும் அதே போல்ப்பலன் சொல்லக் கேட்டிருக்கிறேன்!

ஆகாத வேளையில் செத்தால் அந்தக் குடும்பத்துக்கு என்னென்ன கேடுகள் வரும் என்று சொல்லுவார்கள். அவற்றிற்குப் பரிகாரங்களும் உண்டு! இறந்து போனவர் வீட்டினுள்ளே கிடந்த இடத்தில் ஆறடி நீளத்தில் மூன்றடி அகலம் மூன்றடி உயரத்தில் திண்ணையைப் போல மண்ணி னால் ஒரு "மூட்டம்" எழுப்புவார்கள். இதற்கு "அடைப்பு" என்றும் சொல்வதுண்டு.

"ஆறுமாத்த அடைப்பு, மூனுமாத்த அடைப்பு, நாப்பதுநா அடைப்பு" இப்படிப் பலவகை உண்டு; குற்றத் துக்குத்தக்கன சிறைத் தண்டனைப்போல! "மூட்டம்" பிரிக்கும்போது சொந்தக்காரர்கள் அதை ஒரு "விசேசம்"

போலவே செய்வார்கள். அந்த அடைப்பை அல்லது மூட்டத்தைக் கட்டும்போதே புதுமண் குடங்களில் நிறைந்த குடிதண்ணீர் வைத்து உலைமூடிகளால் மூடி அக்குடங்களை உள்ளே வைத்தே கட்டுவார்கள். பிரிக்கும் அன்றைக்கு அக்குடங்களில் தண்ணீர் இருக்கிறதா என்று பார்ப்பார்கள். சிலசமயம் சொட்டுதண்ணீர்கூட இருக்காது. அந்த ஆத்துமாவுக்கு அவ்வளவு தாகம் ("தகை") இருந்திருக்கிறது என்று சொல்லுவார்கள். தண்ணீர் நிறைய அப்படியே இருந்தால் நிம்மதியாக மனநிறைவோடு செத்திருக்கிறார்கள் என்பார்கள்! எல்லாம் நம்பிக்கைகள் தாம்.

* * *

நம்முடைய மக்களிடம், நம்பிக்கைகளிலெல்லாம் சிறந்த(!) நம்பிக்கை—அதிஉச்சம்—சாதிகள் இருப்பதாகக் கொள்ளும் நம்பிக்கைதான். ரத்தத்திலேயே ஊறிப்போன அருதப் பழசு இந்த நம்பிகை. நம்மிடையே வாழும் அறிவுக் குலக்கொழுந்துகளெல்லாம்கூட இந்த "மூடத்தனத்தின் முடைநாற்றத்திலிருந்து விடுபட முடியவில்லை. இதில் விழுந்தால் விழுந்தது தான்; எழுந்திருக்கவே முடியாது.

* * *

நம்புதலும் நம்பிக்கையும் ஒன்றல்ல. நம்புதல் என்பது நினைப்பைச் சார்ந்தது.

"இப்போது போய்க் கொண்டிருக்கும் வேகத்தில் போனால் அந்த ஊர்போய்ச் சேர்ந்து விடலாம் என்று நம்புகிறேன்"

இது நம்புதல்.

"புறப்படுகிற போதே எதிரே ஒரு ஒற்றைப் பார்ப்பனன் வந்தான். அதேபோல் காரியமும் கெட்டது"
இது நம்பிக்கை.

* * *

செய்முறை நம்பிக்கை என்பது ஒரு வகை.

எடுத்துக்காட்டாக வாசல்படிகள் (ஏணிப்படிகளுக்கும்) ஒற்றை இலக்கத்தில் இருக்கவேண்டும் என்பதும், பந்தியில் உட்காருகிறவர்க்கு இடதுபக்கமாக இருக்கும்படி வாழைஇலையைப் போடவேண்டும், என்பன. இதன் காரணங்களை அறிந்து கொள்ளும்போது வியப்பும் நிறைவும் ஏற்படும்.

வலதுகாலை எடுத்து வைத்து வீட்டினுள் நுழைய விரும்புகிறவர்களுக்கு ஒற்றை எண்ணிக்கையிலுள்ள படிகள் வசதி. முதல் ஆரம்பப்படியில் வலதுகாலை எடுத்துவைத்துப் படியேறினால் வீட்டினுள்—படிவாசலில் வைக்கும் காலும் வலதுகாலாகவே இருக்கும். இதில் இன்னொரு முக்கிய விஷயம்' வாசப்படியைத் மிதிக்காமல் தாண்டித்தான் கால் வைப்பார்கள்! அப்படியென்னாலும் இது சரியாகவே வரும். வீட்டை விட்டு வெளியேறக்கூடாது என்பதை "படியைத் தாண்டப்படாது" என்றும் "படிதாண்டாப் பத்தினி" என்பதும் இதிலிருந்துதான் வருகிறது.

வாழை இலையை அதன் நுனியை இடதுபக்கம் வரும்படியாகப் போடுவதிலுள்ள வசதி என்னவென்றால்,

இலையின் நடுவில் இருக்கும் காம்புக்கு அந்தப்பக்கம் இலை மெல்லிசாக—குறுத்திலையின் வெண்மை நிறத்தில்—இருக்கும். காம்பின் இந்தப்பக்கம் திண்மையாக பச்சை நிறத்தில் இருக்கும். பந்தி பரிமாறப்படும்போது சாதம் மட்டுமே சூடாக இருக்கும். பதார்த்தங்கள் ஆறித்தான் இருக்கும். மெல்லிசான இலையிடத்தில் பதார்த்தங்களை வைக்கலாம். சூடான சாதம், சாம்பார், ரசம் வகைகளைப் பரிமாற, பிசைந்து உண்ண திண்ணமான இலைப்பகுதியே நல்லது. ஆகவே இந்த ஏற்பாடு.

அனைத்து நம்பிக்கைகளுக்கும் இப்படி காரிய காரணங்களைச் சொல்லிவிட முடியாது. சிலது ஏற்பட்டதுக்கான காரணத்தை மட்டும் சொல்ல முடியும். பேய் தோன்றுவதுக்கு பயம் காரணம்; இந்த அளவில் அது உண்மை. ஆனால் அதுவே அந்தப் பேய் மெய் என்று சொல்ல முடியாது.

* * *

"தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை" எனும் இந்த நூலைப் படித்துப் பார்த்த போது என்னுள் எழுந்த சில சிந்தனைகளை இங்கே சொன்னேன்.

செல்வி. கோ. அருட்கலை அவர்கள் இளம் முனைவர் பட்டத்திற்காகப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற போது ஆய்வு செய்து எழுதிய இந்நூல் சிறப்பானது.

நூலின் எழுத்து நடை மிக உயர்ந்தது. சாதாரண வாசகனுக்கு எட்டாத அளவுக்கு உயர்ந்தது! கள ஆய்வின், சேகரிப்பின் போது மக்களிடமிருந்து பெற்ற விசயங்களை, எப்படி ஆய்வு செய்திருக்கிறார் என்று மக்களால் படித்துப் பார்க்க முடியாத ஒரு எழுத்து நடை. பல்கலைக்கழக ஆய்வேடுகளை வாசிக்கும் பாக்கியம் "படித்த பாமரனுக்கு" இல்லை.

அய்ந்து நட்சத்திர ஓட்டல்களில் விலைவாசி மிக உயர்ந்திருப்பது போல பல்கலைக்கழகங்களின் தமிழ்நடையும் மக்கள் அணுகச் சிரமப்படும்படி தான் இருக்கிறது.

இதற்குநாம் யாரையும் குற்றம் சொல்ல முடியாது. தமிழின் தலை எழுத்து அப்படி. தலைஎழுத்தும் ஒரு நம்பிக்கைதான்.

அவ்வை நகர்,
புதுவை—8

இப்படிக்கு
கி. ராஜநாராயணன்

முனைவர். க. பஞ்சாங்கம்
காஞ்சி மா முனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
புதுச்சேரி

செல்வி. கோ. அருட்கலை எனக்குச் சில நாள் மாணவி! அந்தச் சில நாட்களிலேயே தேடல் குணம் மிக்க, ஈடுபாடு நிறைந்த ஒரு மாணவியாக நான் அருட்கலையை அடையாளம் கண்டு கொண்டேன்; இந்த நூல் மூலம் நான் கண்டு கொண்ட அடையாளம் சரியே என்பது உறுதியாகி இருக்கிறது! தொடர்ந்து இத்தகைய முயற்சிகளில் அவர் ஈடுபட வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்! ஏனென்றால் நமக்கென்று வந்து சேர்ந்த பணிகளில் தொடர்ந்து ஈடுபடமுடியாமல் பலர் பலவாறு சிதறிப் போய் விடுகின்றனர்; வாழ்க்கை அப்படிப் படுத்துகிறது; அதையும் வென்று, தன் 'திசையில்' தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ளும் உள்ளத்துணிவைப் பெற்றுவிட்டால் போதும்; பல நன்மைகள் கூடி வரும்! இது அனுபவ உண்மை!

மனித உறவுகளுக்கே அடிப்படையான "நம்புதல்" என்ற ஒரு மனநிலையின் தன்மையைப் பல கோணங்களில் இங்கே ஆராய்ந்துள்ளார் அருட்கலை! முதலில் நம்பிக்கைகளின் தோற்றம், விளக்கம், வரையறை என்று பல அறிஞர்களின் கருத்துக்களைத் திரட்டித் தந்துள்ளார்; தொடர்ந்து, தமிழ் இலக்கியங்களில் காணக்கிடக்கும் நம்பிக்கைகளைத் தொகுத்துத் தந்துள்ளார்! இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி அல்லவா? மேலும் இன்று தமிழரிடையே காணப்படும் நம்பிக்கைகளையும் விளக்கி உள்ளார்! இறுதியாக ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை (இராகுகாலப்பூசை) தொடர்பாகக் கள ஆய்வு செய்து, பல உண்மைகளை வெளிக் கொணர்ந்துள்ளார்! மனிதன் இந்த வாழ்க்கையை எதிர்கொள்ள எத்தனை விதமான நம்பிக்கைகளை எல்லாம் மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது என்று நமது அறிவு வியக்க நேர்கிறது!

அருட்கலையிடம் உள்ள அறிவுத்தாகம் தொடர்ந்து பல ஆய்வுகளை நடத்தித் தமிழ் ஆராய்ச்சி உலகம் சிறக்க அவரை இயக்கும் என நம்பிக்கை ஏற்படுகிறது! அந்த அளவிற்கு ஆய்வுக்கே உரிய முறையியல் அவருக்குச் சரியாகப் பிடிபட்டுள்ளது!

மற்றொரு செய்தியையும் இங்கே கூறத்தான் வேண்டும். மானுடவியல், உளவியல், சமூகவியல், பண்பாட்டியல் முதலிய துறைகளில் கூடத் தமிழ்வழிக்கல்வி இல்லாமையால் எந்த அளவிற்கு அந்தத் துறைகள் சார்ந்த அற்புதமான சிந்தனை வளங்கள் இன்னும் நம் சொத்தாக மாறாமல், அந்நியப்பட்டுக் கிடக்கின்றன என்பது இத்தகைய ஆய்வு முயற்சிகளின் மூலம் வெளிப்படுகிற ஓர் உண்மை ஆகும்! தமிழ் ஆய்வு இன்னும் ஆழமாகச் சிறக்க வேண்டுமென்றால், உலகத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள அத்தனை அறிவும் தமிழிலும் கிடைக்கும் படியான சூழலை உருவாக்க வேண்டும்; அப்படியொரு சூழல் உருவாகும் போது, தமிழ் ஆய்வுத்துறை மட்டுமல்ல, தமிழனின் வாழ்க்கைத் தரம், சக மனிதனோடு கொள்ளும் உறவுமுறையின் தன்மை, சுற்றி நிகழும் நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் பாங்கு, படைப்பாக்கத் திறமை, முதலிய அனைத்திலும் பெரிய முன்னேற்றம் பாய்ச்சல் போல அமையும்! இந்த வழிமுறையைப் பாரதி நமக்குச் சுட்டிக்காட்டி ஒரு நூற்றாண்டு ஆகப் போகிறது; ஆனாலும் அத்திசை நோக்கி நாம் நகர்ந்திட வில்லை என்பது மிகப் பெரிய சோகமான செய்தியாகும்!

செல்வி அருட்கலை தனக்கு வாய்த்துள்ள தமிழ்ச் சூழலை எந்த அளவிற்கு அதிகமாக உழைத்து, அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்குப் பாடு பட்டுப் பயன்படுத்தி உள்ளார்! உழைப்பு இருக்குமானால் உயர்வு உண்டு! அருட்கலை உயர்வார்! வளர்வார்! வாழ்த்துக்கள்!

புதுச்சேரி–8 முனைவர். க. பஞ்சாங்கம்
29—12—95

என்னுரை

உலகத்து மக்களினங்கள் தத்தமக்குரிய தனித்த பண்பாட்டுக் கூறுகளையும் பொதுமைப் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டு விளங்குவன. அப்பண்பாட்டுக் கூறுகளில் சூழலுக்கேற்பப் பல்வேறு பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் அமைகின்றன. மனித இன வரலாற்றில் தொன்மைக் காலம் தொட்டு இன்று வரை ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்கள் பல. இம் மாற்றங்களுக்கேற்ப மானுடவினம் கடந்து வந்த பாதையில் ஏற்பட்ட அல்லது நலங்கருதி ஏற்படுத்திக் கொண்ட மரபு அல்லது சடங்குகள் நாடு, மொழி, இனம் என்ற அளவிலே வேறுபட்டுக் காணப்படுகின்றன.

விலங்கு நிலையில் இருந்து மாறி மனிதன் நாகரிக நிலையில் அடியெடுத்து வைத்த காலம் முதல் அவனுடைய சிந்தனை ஆற்றல் மெல்ல வளரத் தொடங்கியது. தொடக்கத்தில் இயற்கையின் சீற்றங்களுக்குக் காரணம் தெரியாமல் அஞ்சிய மனிதன் அவற்றை வணங்கத் தலைப்பட்டான். அவற்றை மெல்ல உணரும் நிலைக்கு வந்தபோது அவற்றை வணங்கித்தனது நன்றியினைக் காட்டுவதற்காக சில வகைச் சடங்குகளை ஏற்படுத்திக் கொண்டான்.

தன்னை அச்சுறுத்திய அல்லது நன்மை செய்த இயற்கை உலகைத் தன் வயப்படுத்த முயன்றான். அச்சம் வரும்போது அதிலிருந்து தன்னைக்காப்பாற்றிக் கொள்ளவும் நன்மை விளையும் போது நன்றி சொல்லவும் மனிதன் பல்வேறு விதமான சடங்குகளையும் ஏற்படுத்திக் கொண்டான்.

தனி மனிதனுடைய பண்பாட்டு நடைமுறைக்கேற்பவும் தன்னைச் சுற்றி உள்ள புற உலகைப் புரிந்து கொண்டதன்

தன்மைக்கேற்பவும் நம்பிக்கைகள் அமைகின்றன. இத்தகு நம்பிக்கைகள் காலப்போக்கில் ஒரு குழு அல்லது இனம் சார்ந்த நம்பிக்கைகளாகின்றன.

இயற்கையின் நிகழ்வுக்குக் காரணம் அறியாத வரை அது நம்பிக்கையாகவும், காரணங்களை அறிவார்ந்த வழியில் அறிந்த பொழுது அது அறிவார்ந்த தெளிவாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மானுட வரலாற்றில் நம்பிக்கையும் அறிவார்ந்த தெளிவும் ஒரு சுழல் வட்டம். நம்பிக்கையில் முகிழ்த்த நிகழ்வும் அறிவார்ந்த நிகழ்வாக மலர்தலும் உண்டு. அறிவார்ந்த நிகழ்வுகளும் உணர்வு நோக்கில் நம்பிக்கை களாகவும் மலர்ந்து வெளிப்படுதலும் உண்டு. நிலையாக இருக்கும் ஞாயிறு கீழைக்கடலில் எழுந்து மேலைக் கடலில் முழுகுகிறான் என்பது இத்தகையது.

சங்க காலம் தொடங்கி இன்று வரை, தமிழர் வாழ்வில் இடம் பெற்றுள்ள நம்பிக்கைகள் கணக்கில. அவரவர் சாதி நிலை, வாழுகின்ற வட்டாரச் சூழல், செய்கின்ற தொழில் இவைகளுக்கேற்ப நம்பிக்கைகள் அமைகின்றன.

தொன்மை மிக்க வரலாற்றிலும் பண்பாட்டிலும் சிறப்புற்று விளங்குகின்ற தமிழ்ச் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற நம்பிக்கைகள் எவை என்பனவற்றை பற்றி அவ்வக்கால இலக்கியங்கள் புலப்படுத்தும். தமிழ் இலக்கியங் களில் காணப்படும் நம்பிக்கைகள், இன்றைய நடைமுறை வாழ்க்கையில் தமிழரிடையே காணப்பெறுகின்ற நம்பிக்கை கள், நம்பிக்கைகள் வாழ்க்கையில் இடம் பெறுவதற்கான சமூகப் பின்புலம் போன்றவற்றை விளக்கிக் காட்டுவதாக இந்நூலின் முதல் பகுதி அமைகின்றது.

இரண்டாம் பகுதி நம்பிக்கையின் வழிப்பட்ட வழிபாடுகளில் ஒன்றான 'இராகுகால கால பூசையும் நம்பிக்கையும்' எனும் தலைப்பில் இப்பூசை எச்சூழலில் தோன்றியது, இப்பூசைக்குரிய கதைகள், நம்பிக்கைகள், விதிமுறைகள் பற்றியும் இராகு என்ற கடவுளின் செயல், குணம், வடிவம் இராகுவைப் பற்றிய இலக்கிய செய்திகள் பற்றியும் நூல்களின் வாயிலாகவும் களஆய்வின் அடிப்படையிலும் கூறுகின்றது.

தமிழ்மக்கள் இந்நூல் படித்து நிறை குறைகள் தெரிவித்து என்னை ஊக்குமாறு வேண்டுகிறேன்.

இடம் : புதுச்சேரி
நாள் : 25—12—96

கோ. அருட்கலை

நூலாக்கத்திற்குத் துணை நின்ற சான்றோர்க்கு நன்றி மலர்கள்

அணிந்துரை, வாழ்த்துரைகள் வழங்கியுள்ள,

1. முனைவர். க.ப. அறவாணன் அவர்கள்
2. முனைவர். T.B. சித்தலிங்கையா அவர்கள்
3. கி. ராஜநாராயணன் அவர்கள்
4. முனைவர். க. பஞ்சாங்கம் அவர்கள்

நூலாக்கத்திற்குத்துணை நின்றவர்கள்:

1. முனைவர். நா. ஆறுமுகம் அவர்கள்
2. முனைவர். அ. அறிவுநம்பி அவர்கள்
3. முனைவர். எஸ். ஆரோக்கியநாதன் அவர்கள்
4. முனைவர். அரங்க. நலங்கிள்ளி அவர்கள்
5. முனைவர். ஆ. திருநாகலிங்கம் அவர்கள்
6. முனைவர். திருமதி. இளமதி ஜானகிராமன் அவர்கள்
7. முனைவர். கலைமாமணி மன்னர்மன்னன் அவர்கள்
8. முனைவர். தாயம்மாள் அறவாணன் அவர்கள்
9. திரு. அரிமளம் எஸ். பத்மநாபன் அவர்கள்
   முனைவர். சிலம்பு. நா. செல்வராசு அவர்கள்
10. நாட்டுப் புறவியல் அறிஞர்கள்:
    முனைவர். ஆறு. இராமநாதன் அவர்கள்
    முனைவர். சு. சக்திவேல் அவர்கள்
11. உடன் பயின்ற ஆய்வாளர்கள், தகவலாளர்கள், புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அலுவலர்கள்.
12. சிதம்பரம் கஜேந்திரா அச்சக உரிமையாளர், அலுவலர்கள்.

பகுதி—I

தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை

[illegible]

[illegible]

'தமிழர் பண்பாட்டில் நம்பிக்கை'

ஆய்வு முகப்புரை

முகப்புரை:

பேரண்டத்தின் எல்லை வரம்பில்லாதது. அதற்கு இன்னும் எல்லை வரையறுக்கப்படவில்லை. அண்டத்தில் உள்ள ஞாயிறு மண்டிலங்கள் பல; நாம் வாழும் வையம் சுற்றும் ஞாயிறு மண்டிலம், அவற்றுள் ஒன்று.

பேரண்டம் நோக்க ஞாயிறு மண்டிலம் சிறுகூறு; ஞாயிறு மண்டிலத்தில் வையம் மிகச்சிறியது. வையத்தில் மாந்தன் நுண்ணிய சிறுமையன்.

"எத்தனை பெரிய வானம்!
எண்ணிப் பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு;
நீ அதில் சிற்றெறும்பே"[1]

மாந்தனின் பருப்பொருட் சிறுமையை விளக்கப் பாவேந்தரின் முயற்சி இது.

தொல் பழங்காலத்தே – விலங்கு நிலையிலிருந்து மாந்தன் அறிவு நிலைக்கு மாறுந் தொடக்க நிலையில், இயற்கையின் செயற்பாடுகள் கண்டு – துன்புறுத்துங்கால் அஞ்சினான்; துணையாகுங்கால் மகிழ்ந்தான். கடுமழைக்கு அஞ்சியவன் அளவான மழைக்கு மகிழ்ந்தான், கடுங்காற்றுக்குக் கலங்கியவன் மென்காற்றுக்கு மகிழ்ந்தான்.

இயற்கையை உற்றுநோக்கினான்; பன்னெடுங் காலம் நோக்கியபின் ஒருவகைக் கருத்துக்கு வந்தான்.

ஞாயிறும் திங்களும் ஒருவகை நெறியிலே எழுகின்றன; மறைகின்றன. பருவங்கள் ஒருவகைச் சுழற்சிநெறியிலே நிகழ்கின்றன. குறிப்பிட்ட மரஞ்செடி கொடியினங்கள், பயிரினங்கள், குறிப்பிட்ட பருவங்களில் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் தருகின்றன; குறிப்பிட்ட பருவங்களில் தழைகள் பழுத்து உதிர்ந்து சருகாகின்றன என்பனவற்றை அறிந்தான்.

எல்லையற்ற இயற்கையின் ஆற்றல் மாந்தனுக்குத் திகைப்பூட்டியது; அச்சுறுத்தியது; வியப்பூட்டியது. அவ்வாற்றலின் இயக்கத்தில் கட்டுண்டு அதற்கு ஏற்ப வினையாற்ற வேண்டிய நிலையையினை உணர்ந்தான்.

இயற்கையின் போக்கால், தீமைகட்கு ஆளாகும்பொழுது அச்சம் முகிழ்த்தது; நலன்கள் பெற்ற பொழுது மகிழ்ச்சி பூத்தது. நன்றியுணர்வு இதயத்தில் துளிர்விட்டது.

ஒரொரு பொழுதில் இயற்கை சீறுகின்றது; பின்னர் தணிகின்றது சீற்றமிகுங்கால் தீமைகள் கூத்தாடுகின்றன. சீராக இருக்கும்பொழுது நலன்கள் சொரிகின்றன.

சீறுதலையும் தணிதலையும் கண்ட மாந்தன், சீறுதலைத் தணிக்க முடியும் எனும் கருத்தேற்றம் கொண்டான். சீற்றம் தணிய இயற்கையை வேண்டினான்; வேண்டியது கிட்டிய பொழுது நன்றியுணர்வுப் பெருக்கினால் காணிக்கைகள் படைத்தான்.

மாந்த இனத்தில் நம்பிக்கைகளின் தோற்றம், தொன்மைக் காலத்தில் இவ்வகை உணர்வின் அடிப்படையில் தோன்றியிருத்தல் வேண்டும்.

காலப்போக்கில் மாந்த இனத்தின் அறிவும் ஆற்றலும் வளர்ந்தன; விரிந்தன. இயற்கையின் பல்வகைப் போக்குகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து, எதிர்பார்க்கும் வகையில் நலன் விளையச் செய்தன.

இயற்கையின் ஆற்றல் எல்லையில்லாதது போன்றே இயற்கைத்தாயின் குழந்தையாகிய மாந்தனின் ஆற்றலும் எல்லையற்றதாக வளர்ந்து கொண்டே செல்கின்றது.

"செஞ்ஞா யிற்றுச் செலவும்,
அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇயகாயமும், என்றிவை"[2]

பற்றி அறிவார்ந்த வகையில் ஆய்ந்து தெளிந்தான்; நலன் பல பெற்றான்.

"மண் திணிந்த நிலனும்,
நிலன் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை"[3] யை

ஆராய்ந்து ஏவல் கொள்ளத் தலைப்பட்டான்.

'வளிதொழிலாண்ட' உரவோனாயினான்.
'வலவன் ஏவா' வானூர்தி காணும் ஆற்றல் பெற்றான்.

என்றாலும் இயற்கையின் ஆற்றல் முழுமையையும் தன் கட்டுக்குள் கொணர்வதில் மாந்தன் முழு வெற்றி பெற இயலவில்லை. அறிவாற்றலை வளர்த்துவரும் மாந்தனுக்கு, இயற்கையின் பேராற்றல், இன்னும் தொடுவானமாகவே இருந்து வருகிறது.

இயற்கை ஆற்றலின் ஒரு பகுதியைக் கட்டுக்குள் கொண்டு வந்து வைய நலனுக்குப் பயன்படுத்தும்போது, தன் ஆற்றலில் நம்பிக்கை கொள்கிறான்; இயலாத போது திகைக்கிறான். இயற்கையின் பேராற்றலை — உணர்கிறான்: இறையாற்றலாக உணர்கிறான்; நம்புகிறான்.

மாந்தனின், அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப அவனுடைய நம்பிக்கைகள் அமைகின்றன. காலப்போக்கில் அறிவாற்றல் வழிப் பெற்ற கருவிவளர்ச்சிக்கு ஏற்ப, நம்பிக்கைகளும் மாறின. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' நம்பிக்கைகள் மாறுதற்கும் ஏற்புடையன.

'எல்லாம் செயல்கூடும்' எனும் வல்லானாதல் நிலை, மாந்தனுக்குக் கிட்டும் வரை அவன் தன் வரம்புணர்ந்து, வரம்பில் (எல்லையற்ற) ஆற்றலுடையவனை நம்புதல் என்பது என்றும் நிலவும் நிலையாகும்.

தனிமனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப, இயற்கையின் ஆற்றலைப் புரிந்து கொண்டதற்கு ஏற்ப,

அவனுடைய நம்பிக்கைகள் அமைகின்றன. மாந்தர்கள் பலரின் ஒப்பிய நம்பிக்கைகள் சமுதாய நம்பிக்கைகளாயின.

காலமாற்றத்தால் சமுதாயத்திடை நம்பிக்கைகள் மாறினவே தவிர, அறவே நீங்கவில்லை. வேறு வடிவில், வகைகளில் தொடர்கின்றன.

மாந்தனின் இயலாமை இறவாதவரை மாந்தனிடமுள்ள நம்பிக்கைகளும் இறவா.

இறவாத் தன்மையுடைய நம்பிக்கைகள், பழந்தமிழர் பண்பாட்டில் நிலவிய தன்மையினையும் வாழும் தமிழர் பண்பாட்டில் நிலவும் தன்மையினையும் காணமுயல்கிறது இந்நூல்.

நம்பிக்கைகள் எண்ணில. காலந்தோறும் தோன்றி, நிலவி மாறி வழக்கொழிந்தும் வழக்கொழியாமலும் உள்ள நம்பிக்கைகள் மிகப்பல.

பழந்தமிழர் பண்பாடு, காலம்காட்டும் கண்ணாடியாகத் திகழும் தமிழிலக்கியங்கள் பல; அவை வழி அறியலாகும் நம்பிக்கைகள் மிகப்பல. எனவே இலக்கியங்கள் சிலவற்றில் காணலாகும் நம்பிக்கைகள் சிலவும் வாழும் தமிழர் பண்பாட்டில் காணும் நம்பிக்கைகள் சிலவும் மட்டுமே ஆய்விற்குரிய பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

புதுவை உழவர்கரை கொம்யூனில் உள்ள வெங்கட்டநகர்ப் பகுதி, ஆய்வுக்குரிய களமாகத் தேர்வு செய்யப்பெற்றது. ([redacted]).

ஆய்வு மூலங்கள்:

அனைத்துப் பிரிவினரிடையேயும் நம்பிக்கைகள் இருந்தாலும் ஆய்வாளர் வாழும் பகுதி வெங்கட்டநகர் என்பதால் இப்பகுதியே முதன்மை ஆதாரமாகத் தேர்வு செய்யப்பட்டது. இப்பகுதியில் வாழும் மக்களிடையே நிலவும் நம்பிக்கைகள் குறித்து உரையாடல் மூலமும் வினா நிரல் மூலமும் தொகுக்கப்பட்ட தகவல்கள் முதன்மை ஆதாரங்கள் ஆகும். நம்பிக்கைத் தொடர்பான நூல் களும், பிற செய்திகளும் துணைமை ஆதாரங்களாகும். இலக் கியங்களில் மிகுதியான நம்பிக்கைகள் இருப்பதால் குறிப்பிட்ட சிலவகையான நம்பிக்கைகள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டன.

1. சங்க இலக்கியங்கள்
2. சிலப்பதிகாரம், மணிமேகலை
3. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

இவற்றிலிருந்து சில பாடல்களும், பாடற்பகுதிகளும் ஆய்வுக்கு ஆளப்பட்டுள்ளன.

விரிவு அஞ்சி இலக்கியங்களில் வரும் அனைத்துவகை நம்பிக்கைகளையும் கூறாது சிலவகைகள் மட்டுமே கூறப் பட்டுள்ளன.

ஆய்வு அணுகுமுறை:

இவ்வாய்வில் சிறப்பாகச் சமூகவியல் அணுகுமுறையும் தேவையான இடங்களில் ஒப்பீட்டுமுறையும், சிற்சில இடங்களில் விளக்கமுறையும், ஊடே உளவியல் அணுகுமுறையும் கையாளப் பட்டுள்ளன.

இவ்வாய்வேட்டின் இயல்கள் ஆறு. அவை:

1. ஆய்வு முகப்புரை
2. நம்பிக்கைகள் ஓர் அறிமுகம்
3. தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள்
4. வாழும் தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள்
5. நம்பிக்கைகளின் சமூகப் பின்புலம்
6. முடிவுரை

இயல் விளக்கங்கள்:

1. 'ஆய்வு முகப்புரை'

ஆய்வு செய்யப்புகும் முறை, ஆய்வின்நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு மூலங்கள், ஆய்வு அணுகுமுறை, இயல் பகுப்பு, பகுப்பின் விளக்கம், தகவலாளர், பின்னிணைப்பு, மொழிநடை போன்றவற்றைக் கூறுவதாக அமைகின்றது.

2. 'நம்பிக்கைகள் ஓர் அறிமுகம்'

நம்பிக்கை என்பதன் பொருள், நம்பிக்கையின் தோற்றம், நம்பிக்கைகள் பற்றி அறிஞர்தம் கருத்துக்கள், நம்பிக்கையில் ஏற்பட்ட மாற்றம், நம்பிக்கையின் வகைகள், நம்பிக்கைகளைத் தேர்வுசெய்யும் முறை என்பன பற்றி ஓர் அறிமுகம் எனும் இயலில் தரப்படுகின்றன.

3. 'தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள்'

இவ்வியலில் நிமித்தம், நிமித்தத்தின் சொற்பொருள், வகை, நாள், ஆழியிழைத்தல், புள், காக்கை, ஆந்தை, பல்லி, மங்கலச்

சொற்கள், மங்கலப் பொருட்கள், தாலி, மாந்தர், மாந்த உறுப்புகள், வழிபாடு ஆகியவை பற்றி இலக்கியங்கள் குறிக்கும் நம்பிக்கைகள் பற்றி பாடல் வரிகளுடன் விளக்கங்கள் கூறுவதாக அமைகின்றது.

4. 'வாழும் தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள்'

முற்குறித்த இயலில் கூறப்பட்டுள்ள நம்பிக்கைகள் வாழும் தமிழ்ச் சமுதாயத்தில் எவ்வாறு உள்ளன என்பதனைக் கள ஆய்வு செய்து, தொகுத்தும் வகுத்தும், விழுக்காடுகளுடன் விளக்குவதாக அமைகின்றது.

5. 'சமுதாயப் பின்புலனும் நம்பிக்கைகளும்'

இவ்வியல், கல்வி அறிவு, அறியாமை, வளமை, வறுமை முதலிய காரணங்களினால் பெரும்பான்மையான நம்பிக்கைகள் உருவாயின; நிலவத் தொடங்கின என்பது பற்றி இயம்புகின்றது.

6. முடிவுரை:

இவ்வியலில் மேற்கூறிய இயல்களிலிருந்து கண்ட முடிவுகள் தொகுத்து அளிக்கப்படுகின்றன.

பின்னிணைப்பு:

பின்னிணைப்பில் [redacted], ஆய்வுத் தொடர்பான சில செய்திகள், [redacted], நம்பிக்கைகளின் தொகுப்பு (இன்று உள்ள நம்பிக்கைகள்), துணை நூற்பட்டியல் முதலியன அமைகின்றன.

தகவலாளர்:

இவ்வாய்விற்கு அளித்த வினாநிரல்கள் அய்ம்பது: ஆய்வாளருக்குக் கிடைத்தவை இருபத்தைந்து. ஆடவர், பெண்டிர்; மாணவர், மாணவியர், அனைவரும் அடங்குவர். கல்வி கற்றவர்; கல்லாதவர் எனும் இருவகையினரும் உள்ளனர். வேலைக்குச் செல்லும் மகளிரும், இல்ல மகளிரும் உள்ளனர். அறுபத்தாறு வயதிலிருந்து பதினாறு வயது வரை தகவலாளர்கள் உள்ளனர்.

மொழிநடை:

இலக்கியப் பகுதிகளில் ஓரளவு தூய தமிழ்நடை கையாளப்பட்டுள்ளது. களப்பகுதியில் தகவலாளர் அளித்த மொழிப் பாங்கிலேயே கொடுக்க முற்படுகின்றது. சுருங்கச் சொல்லின், செறிவும், நெகிழ்வும் எளிமையும் விரவப்பெற்ற தமிழ்நடையில் அமைந்துள்ளது இவ்வாய்வேடு.

அடிக்குறிப்புகள்:

1. பாரதிதாசன், அழகின் சிரிப்பு, பா.10:1–4
2. புறநானூறு, பா.30:1-5.
3. மேலது., பா.2:1–6.

நம்பிக்கைகள் ஓர் அறிமுகம்

முகப்புரை:

மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நம்பிக்கைகள் மிகப்பல. இந்நம்பிக்கைகளே தனிமனித வாழ்வையும் ஒரு சமுதாய வாழ்வையும் நடத்திச் செல்வனவாக விளங்குகின்றன.

நம்பிக்கை – சொற்பொருள் விளக்கம்:

நம்பிக்கை வாழ்க்கையில் முதன்மை பெறுகின்றது. அதனுடைய சொல்லாட்சியைப் பற்றி அறிதலும் தேவை. இரண்டு கைகள், கால்கள், கண்கள், காதுகள், ஒரு தலை, மூக்கு, வாய் போன்றவையுடன் அறிவும் பரிவுணர்வும் பெற்றவனே மனிதன் என்கிறோம். அதேபோன்று நம்பிக்கை என்பதற்கு,

"விசுவாசம், ஆணை, நம்பியொப்புவிக்கப்பட்டது. உண்மை"[1] என்றும் "சத்தியம், நிசம், உறுதிப்பாடு"[2] என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருள்களைத் தெரிவிக்கின்றது.

நம்பு என்பதற்கு "விருப்பம், நாவல்"[3] பற்று, நாகை[4], 'ஆசை'[5] என்றும், "அருச்சகம், நம்பென்னேவல்"[6] என்றும், அகராதிகள் பொருள் தருகின்றன.

தொல்காப்பியத்தில் "நம்பும் மேவும் நசையாகும்மே"[7] என்று வருகின்றது. நம்பு என்ற சொல்லிற்கு 'நசை' அல்லது 'விருப்பம்' எனும் பொருளைத் தருகின்றது.

நற்றிணை 327–ஆம் பாடலில் 'நம்புதல்' என்ற சொல்லாட்சி நம்பிக்கை என்னும் பொருளில் வந்துள்ளது. 'நம்பிக்கை' என்ற பொருளிலேயே நற்றிணையில் பயின்றுவந்துள்ளமையை அறிய இயலுகின்றது.

"சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
சுடுவான் போல நோக்கும்"[8]

இவற்றிலிருந்து நம்பு என்ற சொல், தொடக்கத்தில் 'விருப்பம்' என்ற பொருளிலும் பின்னர் 'நம்பிக்கை' என்ற பொருளிலும் வருவதை அறியமுடிகின்றது. இப்பொழுது நம்பிக்கை என்ற பொருளே வழக்கில் உள்ளது.

Faith, belief என்ற இரு சொற்களுக்கும் தமிழில் நம்பிக்கை என்ற ஒரே பொருள் உள்ளது.

Faith எனும் சொல் பெரும்பாலும் சமயஞ்சார்ந்த நம்பிக்கையைக் குறிக்கும்; Belief எனும் சொல் சமயஞ்சார்ந்த நம்பிக்கை மட்டுமின்றி ஏனைய சமூக வாழ்வியல் நம்பிக்கையையும் குறிக்கும்.

நம்பிக்கையின் தோற்றம்:

நம்பிக்கைகள் எப்பொழுது தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற இயலாது எனினும் மனிதன் இயற்கையின் தாக்கத்திற்கு மிகுதியாக ஆட்பட்டிருந்த, அறிவு வளர்ச்சியின் தொடக்க நிலையிலே, நம்பிக்கைகள் தோன்றின எனலாம்.

அச்சம், அவா, அறியாமை என்பன போன்ற காரணங்களால் நம்பிக்கைகள் தோன்றின எனலாம்.

நம்பிக்கையின் தோற்றம் பற்றிப் பின்வருமாறு க. காந்தி விளக்குகிறார்.

"மனிதனுடைய மனத்தில் விருப்பத்தால் நம்பிக்கைகள் தோன்றின என்பதே அடிப்படைக் காரணங்களில் ஒன்று.

இயற்கையின் சீற்றங்களுக்குத் துவக்க நாட்களில் காரணம் புரியாதபொழுது இறைநம்பிக்கை உருவாயிற்று. நன்மை அடைய வேண்டியும் நம்பிக்கைகள் தோற்றம் கொண்டன"[9]

நம்பிக்கை குறித்து அறிஞர்தம் கருத்து:

நம்பிக்கை என்பது பற்றி அறிஞரிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவை வருமாறு:

"மனிதன் செயல்களுக்கு ஆக்கம் தேடும் நிலையிலும் அதில் வெற்றிபெற வேண்டுமென்ற ஆவலிலும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கவனித்துத் தன் செயலின் வெற்றி தோல்விகளை முன்னரே நிச்சயிக்க முனைகின்ற அவாவினால் நம்பிக்கைகள் தோன்றுகின்றன"[10] என்கிறார் க. காந்தி.

"கண்ணால் பார்க்காமலும் அறிவு ஆராய்ச்சி செய்யாமலும் சில செய்திகள் காரணகாரியம் கருதாமல் மக்கள் அவ்வாறே ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயலாற்றப்படுகின்றன. முன்னோர் வழங்கியதை அப்படியே ஏற்றுக்கொள்வர். ஏன், எதற்கு என்ற வினாக்கள் எழுப்பப்படுவதில்லை. அவை உண்மையான கட்டுக் கதையா எனக் கருதிப் பார்க்கப்படுவதில்லை. இயற்கையில் ஏற்படும் எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் கருத்துகள் கற்பித்து அப்படியே நம்பப்படும். இவற்றை நம்பிக்கைகள் என்பர்"[11] என்று தமிழ்நாட்டு வரலாறு எனும் நூல் கூறுகின்றது.

"மெத்தப்படித்த மேதாவிகளும் பெருஞ்செல்வர்களும் அதிகாரத்தின் உச்சியில் உட்கார்ந்திருப்பவர்களும் சில சமயம் நம்பிக்கைகளை அரங்கேற்றுவார்கள்; பிறகு அடுத்தடுத்து அறிவின் அடிப்படையில் ஆராய்ந்து காரணம் காட்டமுடியாது.

கடைசியாக அவர்களும் பாமரர்கள் போல இந்த நம்பிக்கை களுக்கு அடிமை ஆகிவிடுவார்கள். அப்போது அவர்கள் இந்தச் சடங்குகளில் காட்டும் வேகம், பாமரர்களின் ஈடுபாட்டைப் போல பன்மடங்காக மிளிரும்"[12] என்கிறார் சோமலெ.

"தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்" எனும் நூலின் ஆசிரியர் நம்பிக்கை பற்றிக் கூறும் விளக்கம்:

"இயற்கையின் புதிரான செயல்களை உணர இயலாத போதும் மனித வாழ்வில் நிகழும் ஊறுகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத நிலையிலும் மனித மனம் சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக்கொள்கின்றது. அவை நம்பிக்கைகளாக உருப்பெறுகின்றன."[13]

"எதையும் காரணகாரிய அடிப்படையில் எண்ணிப் பார்க்காமல் பரம்பரையாகச் சொல்லப்பட்டுவந்த கருத்துக்களை அவ்வாறே ஏற்றுக்கொள்வது நம்பிக்கையாகும்"[14] என்று யோகீசுவரன் கூறுகிறார்.

"என்ன நடக்குமோ, எப்படி நடக்குமோ என்ற நியாய நிலையில் மனித வாழ்வு நம்பிக்கையைப் பற்றுக்கோடாகக் கொண்டு திகழ்கிறது. அறிவியல் முறைப்படி எண்ணிப் பாராத தால் எதிர்பார்ப்பும் ஆசையும் கொண்ட உள்ளத்திற்கு நம்பிக்கை ஊன்று கோலாகவும் அமைகிறது. அறிவியல் முறைப் படி சிந்திக்காதபொழுது, இயற்கையின் ஆற்றலையும் செயலை யும் (இயக்கம்) அறிந்துகொள்ளாதபொழுது, நம்பிக்கை ஒன்றே மனித வாழ்வினை நடத்திச் செல்லும் சாரதியாகவும் விளங்கு கிறது."[15]

"மனிதன் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த காலங்களில் எவ்வித நம்பிக்கையும் அவனிடம் குடிகொள்ளவில்லை. கூட்டமாக வாழத் தலைப்பட்டபோது இயற்கையோடு போராட வேண்டிவந்தது. இப்போராட்டத்தில் வெற்றிபெற்றபோது தன்னம்பிக்கை பிறந்தது. தோல்வியுற்றபோது அச்சம் பிறந்தது. வெல்லமுடியாதவற்றைக் குறித்து வேறுவிதமாகச் சிந்திக்கத் தொடங்கினான். இயற்கையின் ஆற்றல், தன்னிலும் வலிமையானது என்று அறிந்தபோது, இவனது இயலாமை புதிய நம்பிக்கைகளைப் படைத்தது. இயற்கையின் அதிவல்லமையே இவனது உள்ளத்தில் அச்சத்தைத் தோற்றுவித்து நம்பிக்கைகளை உருவாக்கியது."[16] என்கிறார் மீ.அ.மு. நாசீர்அலி.

முற்கூறியவற்றிலிருந்து நம்பிக்கைகள் தோன்றுவதற்கான அடிப்படைகள் பின்வருவனவென ஒருவாறு தெளியலாம்.

1. அச்சம்
2. அவா (விருப்பம்)
3. தன்னலக்காப்புணர்வு
4. ஆராய்ந்துபாராமல் பின்பற்றும் போக்கு

நம்பிக்கைகள்பற்றி அறிஞர்கள் சொல்லும் பாங்கு மாறுபடுகின்றது; ஆனால் அடிப்படைக் கருத்துக்கள் ஒன்றாகவே உள்ளன.

நம்பிக்கையின் மாற்றம்:

நம்பிக்கைள் வழிவழியாக வந்து மக்கள் மனதில் பதிந்துவிடுகின்றன. எனவே, இந்த நம்பிக்கைகளின் கரு மாறாது

இருக்கின்றது. புறவடிவங்கள் மட்டுமே மாற்றம் கொண்டிருக்கின்றன.

வான்மீன் (நட்சத்திரம்) வீழின் வேந்தன் வீழ்வான் என்று பழங்காலத்தில் நம்பினர். இன்றோ வான்மீன் வீழ்வதைக் காண்போர் மறதிக்கு ஆளாவர் என்று நம்புகின்றனர்.

மக்களிடையில் வழிபாட்டு நம்பிக்கைகள் பல. அவற்றுள் காவு கொடுத்தல் அல்லது பலிகொடுத்தல் அல்லது உயிர்ப்பலியிடல் என்பதும் ஒன்று. அன்று ஆடு, மாடு, கோழி என்பன பலிப்பொருட்கள்; மனிதனும் பலிப்பொருள் ஆவது உண்டு. இன்றோ எலுமிச்சம்பழத்தைக் காவு கொடுத்தால் போதும் என்ற மனநிலையில் மக்கள் உள்ளனர். இருவகைச் செயல்களிலும் இறைவனின் கோபம் நீங்கும் என்ற நம்பிக்கை அடிப்படையாகும்.

நம்பிக்கைகள் பெரும்பாலும் வழிவழியாக மரபாக வருவதினால் மக்களிடம், தம்மையும் அறியாமல் நம்பிக்கைகள் வேரூன்றி விட்டன. இவை, காலச் சூழலுக்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்ப மாறியும் வழக்கொழிந்தும் போய்விடுகின்றன.

நம்பிக்கையின் வகைகள்:

நம்பிக்கைகள் பல்வகையின; பிறப்புமுதல் இறப்புவரை மனித வாழ்வில் பல்வகை நம்பிக்கைகளும் இடம்பெறுகின்றன. அவற்றுள் சில:

1. இறை நம்பிக்கை
2. ஊழ் பற்றிய நம்பிக்கை
3. சோதிடத்தில் நம்பிக்கை
4. சகுனத்தில் நம்பிக்கை

5. தன்னம்பிக்கை
6. சடங்கு நம்பிக்கை
7. கனவு நம்பிக்கை
8. வேறுபிற

நம்பிக்கைகளுள்

1. வழக்கொழிந்தவையும்
2. வழக்கொழியாதவையும் உள.

நம்பிக்கைகளை

1. மரபு வழி நம்பிக்கை
2. வாழ்க்கைக்குப் பொருந்திய நம்பிக்கை
3. பிற நம்பிக்கைகள்

என்றும் பிரிக்கலாம்.

அனைத்தையும்:

1. காரணகாரியத் தொடர்புக்குட்பட்டவை,
2. காரணகாரியத் தொடர்புக்குட்படாதவை (அ) மூடநம்பிக்கை

எனும் இருவகைப் பிரிவுகளுள் அடக்கலாம்.

“மூடநம்பிக்கை அல்லது கண்மூடித்தனமான நம்பிக்கை என ஒன்றைக் கூறல் பொருந்தாது; நம்பிக்கைகள் என்பன மானுட வாழ்க்கையின் அடைவுகளில் (அனுபவங்களில்) எழுந்த எண்ணங்களாம். அவற்றை ‘ஆய்வுக்குட்படுத்தப்பட்டு மெய்ப்பிக்

கப்பட்ட நம்பிக்கைகள்,' 'ஆய்வுக்குட்படுத்தப்படாத நம்பிக்கைகள்' என்று பிரிக்கலாம்''[17] என்று தத்துவத்துறைப் பேராசிரியர் க. நாராயணன் அவர்கள் கூறினார்கள். மூடநம்பிக்கை பற்றிய இவரது கருத்துகள் மேலும் ஆய்தற்கு உரியன.

நம்பிக்கையைத் தேர்வு செய்தல் (அல்லது) அடையாளம் காணுதல்:

க. காந்தி அவர்கள் நம்பிக்கையைத் தேர்வு செய்தலுக்கு மூன்று வகையான அடிப்படைகளைத் தருகிறார். அவை:

''1. சந்தேகித்தல் (Surmising or Suspecting)
2. நம்பிக்கை பற்றிய கருத்து (Opinion)
3. நம்பிக்கை பற்றி முடிவெடுத்தல் (Conviction)''[18] என்பனவாம்.

ஞா. வெர்ஜின்சிகாமணி என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.

''ஒரு நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ தகுந்த பகுத்தறிவான ஆதாரம் காட்டமுயலுதலே நம்பிக்கையைத் திறனாய்வு செய்து மதிப்பிடலாகும். நூல்இயல் (அறிவியல்) ஒரு நம்பிக்கையை விளக்கிக்கூற முயலும்போது தத்துவம் அதை நேர்மையான ஒரு நம்பிக்கை என்று காட்ட முயலுகிறது. இரண்டுமே (அறிவியலானாலும் சரி தத்துவமானாலும் சரி) ஒரு நம்பிக்கைக்குச் சார்பாக அல்லது எதிராக உள்ள ஆதாரங்களைத் தான் ஆராய்கின்றன.

அறிவியல், ஒன்று நிகழ்வதற்கான காரணம் பற்றிய நம்பிக்கையான கருத்திற்குச் சார்பாகவோ எதிராகவோ உள்ள

நேர்மையான ஆதாரங்களை மட்டுந்தான் ஆராய்கிறது. ஆனால், தத்துவமோ, எல்லாவித நம்பிக்கைக் கருத்துகளுக்கும் சார்பாக வும் எதிராகவும் உள்ள நேர்மையான ஆதாரங்களை ஆராய் கின்றது.

தத்துவஞானிகள் ஒவ்வொரு நம்பிக்கையையும் ஆராய்வதாக எண்ணுவது தவறு. பழையதொரு நம்பிக்கையை மறுக்கவல்ல புதியதொரு நம்பிக்கை தோன்றும் பொழுதுதான் அவர்கள் அந்த நம்பிக்கைக்குச் சார்பாகவோ அல்லது எதிராகவோ உள்ள நேர்மையான ஆதாரங்களை ஆராய முயலுகின்றனர்.

ஒரு நம்பிக்கையைப் பகுத்தறிவால் காரணம் காட்டி விளக்க வேண்டுமானால் இரண்டு காரியங்களை அறிவதற்காக அந்த நம்பிக்கையைப் புடமிட்டுப் பார்க்கவேண்டும்.

1. அந்த நம்பிக்கையில் முன்பின் இணைவு இருக்கின்றதா என்று அறிய வேண்டும்.
2. நம்பிக்கையானது உண்மைகளின் அடிப்படையில் இருக் கிறதா என்று அறியவேண்டும்.

தத்துவஞானிகள் தர்க்கவியல் (Logic) மூலமாக நம்பிக்கை யில் முன்பின் இணைவு இருக்கிறதா என்று சோதிக்கின்றனர்''[19] என்கிறார். ஆனால் இவரே நம்பிக்கையானது உண்மைகளின் அடிப்படையில் இருக்கிறதா என்று தெரிந்துகொள்வது கடினம் என்ற முடிவினைத் தருகிறார்.

டாக்டர் கைலாசபதி அவர்கள் ''நம்பிக்கைகளுக்குக் காரணம் காணுதல் இலகுவன்று''[20] என்ற கருத்தைத் தெரி வித்துள்ளார். எனவே,

1. நம்பிக்கை என்பது முதலில் 'விருப்பம்' என்ற பொருளிலும் பின்னாளில் 'நம்பிக்கை' என்ற பொருளிலுமே பின்பற்றப்பட்டது; பின்பற்றிவரப்படுகிறது.

2. நம்பிக்கையின் தோற்றத்திற்கு அச்சம், அறியாமை, தன்னலக்காப்புணர்வு, அவா போன்றவையே அடிப்படைக் காரணங்கள்.

3. அறிஞர்கள் பலரும் நம்பிக்கைக்கு அடிப்படையான காரணங்கள் அச்சம், விருப்பம், தன்னலக்காப்புணர்வு இவற்றையே கூறுகின்றனர். அவர்களுடைய சொல்லும் பாங்கில்தான் மாற்றம்; கருத்தில் மாற்றமில்லை.

4. நம்பிக்கைகளில் மாற்றம் என்பது நம்புவோரின் புறச்செயல் மாற்றத்தையே குறிக்கின்றது. அடிப்படை மாற்றத்தையன்று; ஏனெனில் அடிப்படையில் மாற்றம் இல்லை.

5. மனித சமுதாயம் உள்ளவரையில் நம்பிக்கைகள் இருந்து கொண்டுதான் இருக்கும்; அவை இறவாத்தன்மையன.

6. நம்பிக்கைகள் பல்வகையெனினும் அவற்றை

   1. காரணகாரியத் தொடர்புடைய நம்பிக்கை
   2. காரணகாரியத் தொடர்புக்குட்படாத நம்பிக்கை

எனும் இருவகைப் பிரிவுகளுள் அடக்கலாம்.

7. மூடநம்பிக்கை என்று கூறாது மெய்ப்பிக்கப்படாத (அல்லது) பரிசோதனைக்குட்படுத்தாத நம்பிக்கை என்று கூறலாம்.

8. நம்பிக்கைகளை அடையாளம் காணுதல் என்பது எளிதன்று. இனம் காணினும் காரணம் காணுதல் எளிதன்று.

அடிக்குறிப்புகள்:

1. Tamil Lexicon, Vol-IV, P. 2155
2. மதுரைத்தமிழ்ப் பேரகராதி, இரண்டாவது பாகம், ப. 10.
3. கோனார் தமிழ்க்கையகராதி, ப. 329.
4. மணிமேகலைத் தமிழ்ச் சொல்லகராதி.
5. தற்கால தமிழ்ச் சொல்லகராதி.
6. கழகத் தமிழ் அகராதி.
7. தொல்காப்பியம்; சொல்லதிகாரம், நூ. 329.
8. நற்றிணை, பா. 175.
9. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், பக். 103-104.
10. க. காந்தி, தமிழர் எண்ணங்கள், ப. 181.
11. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு, ப. 115.
12. சோமலெ, தமிழ்நாட்டு மக்களின் மரபுப் பண்பாடு, ப. 64.

13. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,
14. பி. யோகீசுவரன், தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், ப. 86.
15. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், ப. 171.
16. மீ.அ மு, நாசீர் அலி, நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப. 29.
17. தகவல். திரு.க. நாராயணன், வயது 52, புதுவை, நாள்: 15—04—90.
18. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 109.
19 ஞா. வெர்ஜின்சிகாமணி, அடிப்படை அரசியல் கோட்பாடுகள், பக். 8-9.
20. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 44.

தமிழ் இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள்

முகப்புரை:

நம்பிக்கைகள் மனித மனங்களின் உள்ளோட்டத்தையும் வன்மை மென்மைகளையும் தெளிவையும் புலப்படுத்தத் துணை செய்வன. நம்பிக்கைகளைக் கொண்டே அறிவுத் தரத்தைக் கண்டறியலாம்.

இலக்கியங்கள் சுட்டும் நம்பிக்கைகள் மட்டுமே அக்காலத்தி லிருந்தன என்று கூறுவதைவிடச் சிறப்புமிக்க சிலவகை நம்பிக் கைகளே இலக்கியங்களில் இடம்பெற்றன என்று கூறலாம்.

நிமித்தமும் நம்பிக்கையும்:

அலாவுதல் (ஆசைப்படுதல்) மாந்தன் இயற்கை; அவாவுதல் தான் மாந்தனைச் செயலில் ஈடுபடுமாறும் ஊக்கங்கொள்ளுமாறும் தூண்டுகின்றது. செயலின் இறுதியில் எதிர்பார்த்த பயன் கிடைத் தால் மகிழ்கிறான்.

முயற்சிக்கும் பயன் பெறுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் உள்ளத்தெழும் வேணவாவினாலும் பதைப்பினாலும் எதிர்பார்ப் பினாலும் மாந்தன் பல்வகை நம்பிக்கைகள் எழுவதற்கு இட மளித்து விடுகிறான்.

எம்மனிதனும் தன்னுடைய வருங்காலம் எவ்வாறிருக்கும் என்பதை அறியும் ஆவலுடையவனாக இருப்பான். தான் வாழ் வில் முன்னேறவேண்டும்; மேன்மையான நிலையை அடைய வேண்டும் என்று எண்ணுவான். இதன் விளைவால் அவனிடம் நம்பிக்கையும் ஊக்கமும் பிறக்கும். இப்படி வாழ்வில் வளம்

தேடுதல் பொருட்டுஅவனையும் அறியாமல், யாதேனும்ஒன்றில் நம்பிக்கை வைத்தல் இயல்பாகிவிடுகிறது. மேலும், அச்சத்தின் காரணமாகவும் சில நம்பிக்கைகள் தோன்றும்; வாழ்வில் தனக்கு வரும் இன்னல்களிலிருந்து காப்பாற்றிக்கொள்ளச் சிலவகை நம்பிக்கைகள் தோன்றும்.

பண்டுதொட்டு இன்றுவரை, பெரும்பாலான நம்பிக்கைகளுக்கு அச்சமே அடிப்படையாக இருக்கின்றது. அச்சத்திலும் அவாவிலும் தோன்றிய நம்பிக்கைகளுள் ஒன்று நிமித்தம். அச்சத்தின் காரணமாகத் தோன்றிய நிமித்தம் பாதுகாப்புணர்வால் வளர்க்கப்படுகின்றது.

நிமித்தம் – சொற்பொருள்:

நிமித்தம் என்ற சொல்லுக்குத் தமிழ் லெக்சிகன் "காரணம், நிமித்தம், சகுனம், அடையாளம், பொருட்டு"[1] எனும் பொருள்களைத் தருகின்றது.

"சங்க இலக்கியத்திலோ பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிலோ 'நிமித்தம்' என்ற சொல்லாட்சி வரவில்லை; சிலப்பதிகாரத்தில்தான் 'நிமித்தம்' என்ற சொல்லாட்சி வந்துள்ளது" என்று க. காந்தி அவர்கள் கூறியுள்ளார்.

'புள்' என்ற சொல்லே இலக்கியப் பாடல்கள் பல[2] வற்றுள் பயின்றுவந்து.

"அச்சமும், உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்[3]"

எனும் தொல்காப்பிய நூற்பாவில் நிமித்தம் எனும் சொல் வந்துள்ளது.

நிமித்தம் என்பது தமிழ்ச்சொல், 'சகுனம்' என்பது வட சொல். பெரும்பாலோர் இன்று சகுனம் என்னும் வடசொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

நிமித்தம் உருவான வகை:

நம்பிக்கைகளுள் ஒருவகை, நிமித்தங்கள். "மனிதன் ஆற்றப்புகும் செயல்களுக்கும் இயற்கையில் நிகழும் நிகழ்வு களுக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதாக மனித மனம் கற்பித்துக்கொண்ட நிலையில் நிமித்தக் கூறுகள் உருவாகத் தொடங்கின. காலப்போக்கில் வாழ்வியலில் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு அவ்வியற்கை நிகழ்வுகள் இயைத்து நோக்கப் பட்ட நிலையில் அவை நிமித்தங்களாக வடிவெடுத்தன"[4] என்று காந்தியவர்கள் குறித்துள்ளார்.

சான்றாகப் 'பூனை குறுக்கே வந்தால்' நாம் செல்லும் காரியம் தடைபடும் என்ற நம்பிக்கை மக்களிடையில் எவ்வாறோ பதிந்துள்ளது. முதன்முதலில் மனிதன் ஒரு காரியமாகச் சென்றி ருப்பான்; அப்பொழுது பூனை தற்செயலாகக் குறுக்கே சென்றி ருக்கும். அக்காரியம் நிறைவேறாமல் இருந்திருக்கும். உடனே அது நிறைவேறாமல் போனதற்குக் காரணத்தைச் சிந்தித்திருப் பான். பூனை குறுக்கே சென்றமையைத் தன் காரியத் தடங் கலுடன் இணைத்து, காரியத் தடைக்குப் பூனை குறுக்கே வந்ததை மனித மனம், காரணமாகக் கொண்டிருக்கலாம். ஒரு வருடைய இவ்வகைப் பட்டறிவுகள் பலரிடம் பரவும்பொழுது சில நம்பிக்கைகள் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிடு கின்றன. இவ்வகையில் உருவானதே நிமித்தம்.

நிமித்தங்களின் பிரிவும் வகையும்:

நிமித்தங்களை, வினைகளின் விளைவுகளை வைத்து இரு வகையாகப் பிரிக்கலாம். அவை:

கோவிலூர் ஆதீனம்
2099
R65
கோவிலூர்-630 307

நிமித்தம்

நன்னிமித்தம் | தீநிமித்தம்

நன்னிமித்தம்:

மாந்த இனத்திற்கு மகிழ்வையும் நன்மையையும் அளிக்கும் நிமித்தம், நன்னிமித்தம் எனப்பட்டது. காலப்போக்கில் இவ்வகை நிமித்தங்கள் மாந்தனுக்குத் தன்னம்பிக்கையையும் செயலில் ஊக்கத்தையும் அளிப்பனவாக அமையலாயின.

தீநிமித்தம்:

'தீ' என்பது அனைத்தையும் சாம்பராக்கும் தன்மை கொண்டது. அதுபோல் தீநிமித்தம் ஒருவனுடைய தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் குன்றச்செய்து வினைத்திறனை நலியச் செய்து தோல்வியுறச் செய்யலாயிற்று.

நிமித்த வகை:

ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் காணும் செய்திகளை அடிப்படையாக்கொண்டு நிமித்தக் குறிகள் ஐந்து வகையின என்று க. காந்தி அவர்கள் கூறுகின்றார்.

1. வானத்தில் ஏற்படும் மாற்றங்களான இடி, மின்னல் மற்றும் விண்மீன்கள் வாயிலாக வெளிப்படுதல்.

2. பறவை நிமித்தங்கள். அவை பெரும்பாலும் பறவைகள் பறக்கும் திசைகள் மற்றும் அவற்றின் ஒலிகளின் அடிப்படையில் நிச்சயித்தல்.

3. மிருகங்கள் மற்றும் வாலுள்ள ஊர்வன வற்றின் ஓசை களிலிருந்து நன்மை தீமைகளை நிச்சயித்தல்.

4. இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் நிகழ்தல். அவை பெரும்பாலும் ஊறு விளைவிக்கக்கூடிய அறிகுறிகளாகத் தென் படுதல்.

5. பறவைகளுக்குத் தீனிபோடும் நிலையில் அவை தீனியைப் பெறும் தன்மை கொண்டு நன்மை தீமைகளை நிச்சயித்தல்''[5] என்பன.

முதுபெரு நூலான தொல்காப்பியமும் நிமித்த வகைகளைப் பகுத்துள்ளது.

"— ....
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங்கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே''[6]

என்று தொல்காப்பியர், நாள் நிமித்தம்; புள் நிமித்தம்; பிற நிமித்தம் என நிமித்த வகைகளைக் குறித்துள்ளார்.

நாள் நிமித்தம்:

''நாளென்செய்யும் வினைதான் என்செயுமெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென்செயும் ... ...''[7]

எனச் சமயச் சான்றோர் சாற்றியிருப்பினும் மக்களில் பெரும் பாலோர் நாளிலும் கோளிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர். இன்றும் இருக்கின்றனர்.

வானத்துக் கோள் நிலையையும் மீன் நிலையையும் வைத்து அதற்கு ஏற்ப நல்ல நாள்கள் என்றும் தீய நாள்கள் என்றும் பாகுபடுத்தினர்.

இன்றியமையா வாழ்வு நிகழ்ச்சிகளை நன்னாட்களில் தொடங்குதலே நன்று என நம்பித் தொடங்கினர்; இன்றும் அவ்வாறே வினை தொடங்குகின்றனர்.

'திருமணம்' வையக வாழ்வில் ஓர் அறச்செயல்; நற்செயல். நல்ல நாளும் கோளும் பார்த்துத் திருமணநாள் குறித்தல் மரபு.

"நன்னாள் வதுவைகூடி"[8] என்று நற்றிணை நன்னாளைக் குறிக்கின்றது.

"அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்
சகடமண்டிய துகள்தீர் கூட்டத்து
—— —— —— ——.... —— —— —— —— —— ... ——
வதுவை மண்ணிய மகளிர்........"[9]

எனும் அகப்பாடல், கோளும் மீனும் (திங்களும் உரோகிணியும்) கூடும்பொழுதில் தீமை தீர்கிறது (நலம் கூடுகிறது என்பது குறிப்புப் பொருளாகக் கொள்ளலாம்) என்று குறிக்கிறது.

நல்ல நாளில் மணமுடிக்கப்பெற்ற தலைவனும் தலைவியும் எது கருதியும் கவவுக்கை நெகிழாவண்ணம் நாளும் கோளும் காக்கும்; பிரிவைத் தடுக்கும் என்ற குறிப்பு, கலித்தொகையில் காணப்படுகிறது.

"—..........
ஆள்வினைக் கழிந்தோர் போறல் லல்லதைக்
கோள்பெருந்தகையோ டெவன்பல மொழிகுவம்
நாளுங் கோண்மீன் தகைத்தலுந் தகைமே;"[10]

நல்ல நேரத்தில் பிறந்தவன் வெற்றிபெற்றுப் பல்லாண்டு வாழ்வான் என்பது கரிகாற் பெருவளத்தானின் பிறந்தநாள் குறித்து முடத்தாமக்கண்ணியார் பாடிய பாடலின் உரைவழிப் புலனாகும்.

> ''உருவப்பஃறே ரிளையோன் சிறுவன்.
> ....
> தாய்வயிற்றிருந்து தாயமெய்தி''[11]

எனும் வரிகட்கு,

'தான் பிறக்கின்ற காலத்துப் பிறவாதே நல்ல முகூர்த்தம் வருமளவும் தாயுடைய வயிற்றிலேயருந்து பிறக்கையினாலே அரசுரிமையைப் பெற்றுப் பிறந்தென்றார்' என உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

நல்ல நாள் பார்த்தல் பற்றிய செய்தி சிலம்பில் உள்ளது. கோவலன் கண்ணகி இருவரின் திருமணமும் நல்ல நாளில் நிகழ்தலைக் கண்டு மகிழ விருப்பினர் என்பதை,

> ''இருபெருங் குரவரும் ஒரு பெருநாளால்
> மணவணிகாண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி''[12]

எனும் சிலம்பு அடிகள் தெரிவிக்கும்.

ஆழியிழைத்தல்:

எதிர்பார்ப்புகள் நிகழ்தல் வேண்டும் என்று மனம் அவாவுகிறது. நிகழ்தற்கிடையில் நினைப்பது நடக்கும் என்பதற்கு நற்குறிகளை நாடி ஓடுகிறது மனம்; தானே கற்பித்துக் கொண்ட செயல்களில் நற்குறிகிட்டுமா என்று முனைகிறது.

இவ்வகைச் செயல்களுள் ஒன்றே ஆழியிழைத்தல் என்பது.

தலைவனைப் பிரிந்த தலைவி துயருறும்பொழுது, அவன் வருவனோ அல்லனோ என்பதனை அறியக் குறிபார்க்கும் ஒரு குறிமுறையாகும் ஆழியிழைத்தல். இதனைக் கூடலிழைத்தல் என்றும் கூறுவர்.

இக்கூடலிழைத்தல் இருவகைப்படும். அவை:

ஆழியிழைத்தல்
|
கூடலிழைத்தல்

1) பெருவட்டத்துள் சிறு சுழிகள் வரைந்து ஒற்றையா இரட்டையா என்று எண்ணுதல்

2) கண்ணை மூடிக்கொண்டு ஒரு வட்டம் வரைதல்

“தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தமறியத் தரையில் சுழிக்கும் சுழிக்குறி எனத் தமிழ் லெக்சிகன் கூடலிழைத்தலுக்குப் பொருள் கூறுகிறது”[13]

“வீங்கிழை நெகிழ விம்மி — யீங்கே
எறிகட் பேதுற வாய்கோடிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்சே ணீங்க
வருவே மென்ற பருவ முதுக்காண்”[14]

என்று தலைவி தலைவன் வரவை கோடிட்டுக் காண்பதாக இலக்கியம் காட்டுகின்றது.

"செய்குறி ஆழிவைகறோறெண்ணி
எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்"[15]

என்று சுழிவரைதலை அகப்பாடல் காட்டுகின்றது.

"பொரிப்புறப் பல்லிச் சினைஈன்ற புன்னை
வரிப்புற வார்மணல் மேல் ஏறி, தெரிப்புறத்
தாழ்கடல் தண் சேர்ப்பன் தார்அகலம் நல்குமேல்
ஆழியால் காணாமே யாம்"[16]

என்று ஐந்திணைஐம்பது பாடல் ஆழியிழைத்தலைக் கூறுகின்றது. ஆழியிழைத்தலாகவும் கூடலிழைத்தலாகவும் இருந்த நம்பிக்கை இன்று பூ முடித்தல், திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்தலாக உள்ளதைக் களஆய்வின் மூலமாக அறிய முடிகின்றது.

புள் நிமித்தம்:

தன் செயலில் நற்குறி காணுதலுடன் மனம் அமைதி கொள்வதில்லை. ஏனைய உயிரினங்களின் செயல்களிலும் நற்குறிகாண மனம் அவாவுகின்றது.

புள்ளினங்கள், விலங்குகளின் செயல்களில் நற்குறி, தீக்குறி களைக் காண முற்படுகின்றது.

"மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[17]

என்பது தொல்காப்பிய நூற்பா. அய்யறிவுயிரில் ஒருவகை, பறவை. இளம்பூரணர்,[18] நச்சினார்க்கினியர்[19] இருவரும் புள் என்பதற்குப் பறவை என்றே பொருள் கூறுகின்றனர்.

புள் என்ற சொல்லின் பொருள்:

சங்க இலக்கியத்தில் 'புள்' என்ற சொல் பறவை என்ற பொருளையும், நிமித்தம் என்ற பொருளையும் குறிக்கும். புள் நிமித்தம் என்பது பறவை நிமித்தமாகவும் மாறும்.

"நல்ல நல்லோர் வாய்ப்புள் ——"[20]

என வரும் முல்லைப் பாட்டில் பெண்டிருடைய நற்சொல் புள் நிமித்தமாகக் கொள்ளப்பட்டதை அறியமுடிகின்றது.

புள் நிமித்தம் நன்னிமித்தமாகவும் தீநிமித்தமாகவும் அமைதல் உண்டு. தீமை விளைவிக்கும் புள் நிமித்தத்தைப் புட்பகை என்று குறிப்பர்.

"புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புறல் அறியாவேமக் காப்பினை"[21]

எனும் புறப்பாடல், புதுப்புள்ளின் வருகையும் பழம்புள்ளின் செல்கையும் தீநிமித்தத்தைக்குறிக்கும்.

பொதுக்கடன் ஆற்றும்பொழுது புட்பகை தோன்றினும் அது கருதித் தம் செயலூக்கங்குன்றாது வினை மேற்செல்வர் என்பதும் தெரிகின்றது.

"உட்பகையொரு திறம் பட்டெனப் புட்பகைக்
கேவானாகலிற் சாவேம் யாமென"[22]

எனும் புறநானூற்று அடிகள் போருக்குப் புறப்படு முன்னர் 'புள் நிமித்தம்' பார்க்கும் நம்பிக்கை நிலவியதைப் புலப் படுத்தும்.

இரவலர், புரவலரை நாடிச் செல்லுங்காலத்தும் நாளும் புள்ளும் பார்த்தல் வழக்கில் இருந்து வந்துள்ளது.

நாளுக்கும் புள்ளுக்கும் கடந்த நிலையில் ஈத்துவக்கும் வள்ளியோரும் இருந்துள்ளனர்.

"நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குந ரல்லர் நெறிகொளப்
பாடான்றிரங்கு மருவிப்
பீடுகெழு மலையற் பாடியோரே"[23]

எனும் கபிலர் பாடல் இவ்வுண்மையை இயம்பும்.

பரிசில் பெற நினைத்துப் பாவலன் ஒருவன் வரையாது வழங்கும் காவலனை நாடிச் செல்கின்றான்; ஆனால் அப்பொழுது எண்ணிவந்த வண்ணம் பரிசில் பெற இயலாது போகின்றது. அந்நிலையிலும் காவலன் பழியெனக் கூறாது புள்ளையும் போழுதையுமே பழிக்கிறான்.

— ....
"புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர் பழியல ரதனாற்
...—— — —— — —— ...."[24]

இதுவரை புள் பற்றிய பொதுவான நம்பிக்கைகளை இலக்கியங்கள் வாயிலாக அறிந்தோம். இனி, காக்கை நம்பிக் கையைப் பற்றி அறியலாம்.

காக்கை நம்பிக்கை

இந்து சமயப் புராணங்கள் சில தெய்வங்கட்கு ஊர்திகள் கூறுகின்றன. சனிக்கு ஊர்தி காக்கை. சனி, கோள்களுள் ஒன்று.

அதன் பார்வைக்கு ஆளானோர் இன்னல்களுக்கு ஆளாவர்; எனினும் சனியின் ஊர்தியான காக்கை கரைதல் விருந்தினர் வருவர் என்ற நற்செய்தியை அறிவிப்பதாக நம்புகின்றனர்.

விருந்தினர் வருவர் என்று காக்கை கரைந்ததாகக் கூறும் குறுந்தொகைப் பாடலொன்றுள்ளது.

"..............

பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"[25]

தலைவனுடன் தலைவி உடன் போக்காய்ச் சென்று விட்டாள் என்பதை அறிந்து வருந்தும் நற்றாய், தலைவனும் தலைவியும் திரும்பி வந்ததும் மணம் முடித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறாள்; காக்கையை அதற்கு நன்னிமித்தமாகக் கரையும் படி வேண்டுகிறாள். அவ்வாறு கரைந்தால் பலிக் கடன் தந்து மகிழ்வுறுத்துவதாகவும் கூறுகிறாள்.

"மறுவில்தூவிச் சிறுகருங் காக்கை
யன்புடை மரபினின் கிளையோடாரப்
பச்சூன் பெய்த பைந் நிணவல்சி
....
அஞ்சி லோதியை வரக்கரைந்தமே"[26]

காக்கை கரைவதை எள்ளக்கூடாது என நம்பினர்.

"கள்ளிய கலும் கருங்காக்கைச் சொல்லும்போல்
எள்ளற்க யார்வாயின் நல்லுரையை"[27]

எனும் பழமொழிநானூறு பாடலில் இடம் பெறும் பாடல் இதைப்புலப்படுத்துகிறது.

காக்கையின் பலியுணவு:

'சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்' எனும் நூல் காக்கைக்குப் பலியுணவிடுவதை வகைப்படுத்தியுள்ளது.

இப்பலி இருவகையின.

"1. நெய் கலந்த வெண்ணெல் வெஞ்சோறு; இது புலவின்றி ஆக்கப்பெறும் சைவ உணவு.

2. பச்சிறைச்சியிடப்பட்ட நிணத்தால் சமைத்த நல்லுணவு. இது புலவு கலந்த அசைவ உணவு"[28] என்கிறார் நூலாசிரியர்.

ஆந்தை:

காண்போர்க்கு அச்சத்தையும் அருவருப்பையும் தரும் ஆந்தை, பெரும்பாலும் காட்டிடை வாழும். பகலில் கண் தெரியாது; இரவில் நன்கு கண் தெரியும். ஆந்தையைத் தீமையின் நிமித்தமாக மக்கள் கருதினர். ஆந்தையின் அலறலைத் தீ நிமித்தமாகவே இலக்கியங்கள் சுட்டுகின்றன.

"கவலை வெண்ணரி கூஉமுறை பயிற்றிக்
கழுங்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய் மகள் வழங்கும்
பெரும்பா ழாகுமன்னிய தாமே"[29]

கூகை குழறுதல் நாட்டிற்கு வரும் அழிவை உணர்த்தும் தீய நிமித்தமாக மேலே உள்ள பாடல் சுட்டுகின்றது.

இதே கருத்தமைந்த பாடல் பின்வருமாறு:

“என்னைமார்பிற் புண்ணும் வெய்ய

— — — — — — — — —

அஞ்சுவரு குராஅற்குரலுந்தூற்றும்”[30]

பல்லி நிமித்தம்:

விலங்கு, ஊர்வனவற்றில் நிமித்தம் பார்க்கும் பழக்கத்தை இலக்கியங்கள் காட்டுகின்றன. பல்லி, ஓந்தி, ஆமா, யானை, குதிரை, பன்றி, நரி போன்றவற்றில் நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருந்திருக்கிறது.

அவ்வழக்கங்களுள் பல்லி நிமித்தம் காணும் வழக்கம் பற்றி இங்கு கூறப்படுகின்றது.

பல்லிஒலித்தலை நிமித்தமாகக் கருதுதல் சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ் மக்களிடம் இருக்கும் ஒரு வழக்கமாகும். சங்க இலக்கியத்தில் பல்லியின் ஒலி நன்னி மித்தமாகக் கூறப்படுகின்றது.

நாட்டார் வழக்காற்றில் பல்லியைக் ‘கெவுளி’ என்று குறிப்பர். பல்லியின் ஒலி நல்லொலியாக இருப்பதை வைத்து அவற்றைக் கணிவாய்ப்பல்லி, முதுவாய்ப்பல்லி என்று அழைத்துள்ளனர்.

"உயர் புகழ் நல்லில்ஒள் சுவர்ப் பொருந்தி
நயவருகுரல பல்லி
நள்ளென் யாமத் துள்ளுதொறும்படுமே"[31]

என்றும்,

"மணி யோர்த்தன்ன தெண்குரற்
கணிவாய்ப்பல்லி காடிறந்தோரே"[32]

என்றும்,

"நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரை நிலை நடுகற் பொருந்தி இமையாது
இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப்பல்லி"[33]

என்றும்,

"ஓங்கிய நல்லில் ஒரு சிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்று புகுமாலை நின்றோள்எய்தி"[34]

என்றிவ்வாறு பல்லியொலி நன்னிமித்தமாக உள்ளதை அறியமுடிகின்றது.

மங்கலச்சொல் கேட்டல் (அல்லது) நற்சொல் கேட்டல்

நற்பணி ஒன்றுக்குத் திட்டமிடும்பொழுதிலோ, நற்பணி தொடங்கும்பொழுதிலோ, எதிர்பாரா இடத்திலிருந்தோ, பிறரிடமிருந்தோ மங்கல ஒலியோ சொல்லோ பிறக்கக்

கேட்டால் அவற்றை நற்குறியாகக் கொள்ளுதலும், மேற்கொண்ட செயல் நன்கு முடியும், நற்பயன் விளையும் என்று நம்புதலும் வழக்கத்தில் உள்ளன. மேலும் ஏதேனும் ஒரு செயலைத் தொடங்கும்பொழுது அம்முயற்சி எவ்வாறு நிறைவேறும் என்பதை முன்கூட்டியே அறியமுனையும் மன உந்துதல், குறிகேட்கமுந்தும். மாந்தர்படும் துன்பம் நீங்கும் காலம் விரைந்து வருமா என்று நற்சொல் எதிர் பார்த்திருத்தலும் உண்டு. அவ்வகை முயற்சியை 'விரிச்சி கேட்டல்' என்று பழந்தமிழ் மக்கள் சுட்டினர்.

பிரிவிடைச் சென்ற தலைவன் வரவை எதிர்ப்பார்த்துள்ளாள் தலைவி.

தலைவியின் பிரிவுத் துயர் நீங்கவும் தலைவனின் விரைந்த வருகையுங் குறித்துத் தோழியர் விரிச்சி கேட்டு நிற்கின்றனர். அப்பொழுது, கயிற்றால் கட்டுண்டு வருந்தி இருந்த கன்றுகள் தாய்ப் பசுக்கள் வரவை நோக்கியிருந்தன. ஆயர்கள் பசுக்களை ஓட்டிக் கொண்டு இப்பொழுதே வந்து விடுவார்கள் என்று ஆயமகள் கூறினாள்.

விரிச்சி கேட்க விருப்புற்று நின்ற தோழியர் செவியில் 'இப்பொழுதே வந்து விடுவர்' என்ற சொற்கள் விழுந்தன; அவற்றையே நற்சொல்லாகக் கொண்டு தலைவியிடம் சென்று 'நல்லோர் வாய்மொழி' கேட்டோம் என்று கூறி அவள் வருத்தம் தணிவிக்க முயல்கின்றனர்.

"அருங்கடிமூதூர் மருங்கிற் போகி
யாழிசைஇனவண்டு ஆர்ப்பநெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய்க்கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவ...லசைத்த கையள், கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள்"[35]

என வரும் முல்லைப்பாட்டுப் பகுதி தலைவியின் பிரிவுத் துயர் நீங்க விரிச்சி கேட்டலை/மங்கலச் சொற் கேட்டலை உணர்த்தும்.

தலைவன் குறித்த காலத்தில் வராமையால் கவலையுற்றிருந்த தலைவியிடம் தோழி விரிச்சி கேட்டு வரும்பொழுது அண்டை வீட்டுப் பெண் தன்னியலாக 'அவன் இப்பொழுது வருவான்' என்று மற்றொரு பெண்ணிடம் கூறிக் கொண்டிருந்தமையை மங்கலச் சொல்லாகத் தலைவியிடம் கூறுகிறாள்.

"அமுத முண்கநம் அயல் இல்லாட்டி"

—·——,——,——·———————

பெருமலை நாடனைவருஉம்என்றோளோ"[36]

எனும் நற்றிணை அடிகள் இந்நம்பிக்கையைப் புலப்படுத்தும்.

நற்சொல் கேட்டல் அல்லது விரிச்சி கேட்டல் என்பதனை அசரீரி என்பதோடு தொடர்பு படுத்துவர். "அவ்வாறு தொடர்பு காட்டுவது ஏற்புடைய தாகத் தோன்றவில்லை. ஏனெனில் அசரீரி என்பது உருவமற்ற வானவெளியில் எதிர்பாராமல் தோன்றும் குரலாகும். ஆனால் விரிச்சி என்பது வழிப்போவோர் கூறும் சொற்களின் நிமித்தமாகக் கொள்ளும் முறையிலும் நற் சொல்லை எதிர்நோக்கி நிற்கும் நிலையிலும் அசரீரியிலிருந்து வேறுபட்டு விளங்கக் காண்கிறோம். எனவே மேற்கூறிய வேறுபாடுகளினின்று விரிச்சி வேறு; அசரீரி வேறு; என்பது தெளிவாகின்றது. மேலும் அசரீரி பற்றிய செய்தியினைச் சங்க இலக்கியத்தில் காண முடிவதில்லை. முதன் முதலில் காப்பியத்தில் தான் இது பற்றி, குறிப்புக் காணக்கிடக் கின்றது. அசரீரி என்பதனை இன்று தெய்வவாக்கு என கூறப்படுவதனோடு ஒப்பிடலாம்"[37] என்கிறார் காந்திய வர்கள்.

சிலம்பில் மதுரை மூதூர் மக்களிடம் என் கணவன் கள்வனா என்று கேட்கும்பொழுது விண்ணிலிருந்து ஒரு குரல் தோன்றியது; அது அசரீரி; அது, "மாதே நின் கணவன் கள்வனல்ன்; அவனைக் கள்வனென்ற இவ்வூரினை விளக்கம் பொருந்திய தீ உண்ணும்" என்று கூறிற்று.

"பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்
கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ் வூரென்ற தொருகுரல்"[38]

இந்த அசரீரி வாக்கைத் தெய்வவாக்காகக் கருதி அவை வெளிப்படுமிடங்களைப் பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் எனும் நூல் தெரிவிக்கின்றது.

"1. மணியோசை கேட்டல்
2. எல்லாம் நன்மையாக முடியும் என்று வழிப்போக்கர் கூறுவது.
3. இனிமேல் கவலை வேண்டாம் என்று பிறர் கூறுவது.
4. கழுதை கத்தல்"[39]

என்று இந்நூலாசிரியர் நற்சொல்லையே தெய்வவாக்காகக் கூறுவது எண்ணத்தக்கது

மங்கலப் பொருட்களில் நம்பிக்கை:

தமிழர்கள் சில வகைப் பொருட்களை மங்கலப் பொருள்களாகக் கருதியுள்ளனர். மங்கலப் பொருட்கள் என்று இன்றுள்ள தமிழர்கள் குங்குமம், மஞ்சள், பூ போன்றவைகளைக் கருதுவர்.

பழந்தமிழ் மக்கள் நெல்லும் மலரும் நன்மையின் சின்னங்கள் என நம்பினர். வாழ்த்துவதற்கும், இறைவனைப் போற்றி வழிபடுவதற்கும் நெல்லையும் நீரையும், நெல்லையும் மலரையும் கொண்டு வாழ்த்தி வழிபட்டமையை இலக்கியங்கள் காட்டுகின்றன.

மலரும் நெல்லும், நெல்லும் நீரும் கொண்டு வாழ்த்துவதால் தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பும், வளமைப் பெருக்கமும் உண்டு என்று நம்பினர்.

நெல்லும் மலரும் தூவி வழிபட்டமையும், வாழ்த்தியமையும்,

"—— .... ——......... - ———
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடுதியங்க
வதுவை நன்மணம் கழிந்தபின்றை"[40]

எனும் அகநானூற்றுப் பாடல் அடிகளும்,

"யாழிசை இனவண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழிகொண்ட நறுவீ முல்லை"[41]

என்ற முல்லைப் பாட்டு அடிகளும் தெரிவிக்கும்.

ஆனால் இன்று நெல்லிற்குப் பதிலாக மஞ்சள் கலந்த அரிசியுடன் மலரும் சேர்த்துத் தூவி வாழ்த்துவதிலும் வழிபடுவதிலும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தாலி பற்றிய நம்பிக்கை:

தாலியை இன்றைய தமிழர்கள் புனிதமான ஒன்றாகக் கருதுகிறார்கள். பண்டைய நாட்களில் தாலி என்பதைக் காப்பணியாகக் கருதி, சிறுவர்கட்கு இவ்வணியை அணிவித்திருக்கிறார்கள். சங்க இலக்கியங்களில் தாலி பற்றிய குறிப்பு இன்று குறிப்பிடும் பொருளில் இல்லை. அன்று திருமணத்தில் தாலி இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

தாலி சொற்பொருள்:

தாலி என்பதற்கு "கீழ்க்காய்நெல்லி, மங்கல நாண், கணவன் மணந்ததற்கு அடையாளஉரு, ஐம்படைத் தாலி, சிறுவர் கழுத்திலணியும் ஆபரணவிசேடம், ஆமைத்தாலி"[42] என்ற பொருள்களைத் தருகின்றது, அகராதி. இதிலிருந்து மங்கல நாண் திருமணத்தின் அடையாளம்; ஐம்படைத்தாலி சிறுவர்கள் கழுத்தில் அணியும் ஒரு வகை அணி என்றும் கொள்ளலாம்.

தாலியின் வகை:

தாலியை இருவகையாக இலக்கியங்கள் காட்டுகின்றன. அவை:

தாலி
- புலிப்பல்தாலி
- அய்ம்படைத்தாலி

புலிப்பல்தாலி:

சிறுவர்கட்கு வீரத்தின் அறிகுறியாகவோ ஆற்றலைப் பெருக்கும் காப்பணியாகவோ புலிப்பல்தாலியை மார்பில் அணிவித்தனர்.

"பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு மதன்தலைப்
புலிப்பற் தாலிப் புதல்வற் புல்லி
அன்னா வென்று மன்னையு மன்னோ"[43]

எனும் குறுந்தொகைப் பாடல் இதனைப் புலப்படுத்தும்.

சிறுமியர் பொன்னுடன் சேர்த்துச் செய்யப்பட்ட புலிப்பல் தாலியை அணிந்தனர்.

"..............
புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி
...............[44]

எனும் அகநானூற்றுப் பாடலடி இதனைப் புலப்படுத்தும்.

ஐம்படைத்தாலி:

இளம் பருவத்தில் ஆண் குழந்தைகள் கழுத்திலணியும் ஒருவகை அணி ஐம்படைத்தாலி. ஐம்படைத்தாலி பற்றிய செய்திகள் "மணிமேகலையிலும், திணைமாலை நூற்றைம்பதிலும் வருகின்றன"[45] என்கிறார் காந்தியவர்கள்.

ஐம்படைத்தாலி ஒரு விளக்கம்:

ஐம்படையையும் பஞ்சாயுதம் என்று அழைப்பர். 'பஞ்ச' என்றால் ஐந்து என்று பொருள்படும். ஐம்படை என்பது ஐந்து படைக்கலன்கள். அவை "சக்கரம், வில், வாள், தண்டு, சங்கு"[46] என்பன.

இவ்வைந்துருவங்களும் அமைந்த அணிகளைச் சிறுவர்கள் அணிவர்.

இச்செய்தி இலக்கியங்களில் வருகின்றது.

"விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சு மைம்படைத் தாலி
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
..............................."[47]

எனும் பாடலும்,

"வல்வருர்; காணாய் — வயங்கிரமுருக்கு எல்லாம்,
செல்வர் சிறார்க்குப் பொற் கொல்லர்போல், நல்ல
பவளக் கொழுந்தின்மேல் பொன்-தாலி பாஅய்த்
திகழக் கான்றிட்டன, தேர்ந்து"[48]

எனும் பாடலும் அய்ம்படைத்தாலி அணியும் வழக்கம் நிலவியமையைப் புலப்படுத்தும்.

இவ்வணிகள், அணிவோர்க்கு வீரம் ஊட்டுவனவாகவும் காப்பளிப்பனவாகவும் நம்பப்பட்டன.

மாந்தர் மாந்த உறுப்புகளில் நம்பிக்கை:

நாள், கோள், புள், விலங்குகள் இவற்றின் அடிப்படையில் மட்டுமே நம்பிக்கைகள் அமைந்தன என முடிவு கொள்ளுதற்கு இல்லை.

மாந்தர்களின் வருகை, செல்கை, உரையாடல் போன்ற செயல்களும் மாந்த உறுப்புகளின் செயல்களும் குறிகளாக - நிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன.

1. மாந்தர் எதிர்ப்படுதல்
2. கண்ணிமை துடித்தல்
3. தும்முதல்
4. வளைசெறிதல்

எனும் செயல்கள் அவற்றுள் சில. இவ்வகைச் செயல்களும் நன்மை தருவனவும் உள; தீமை தருவனவும் உள என நம்பினர்.

மாந்தர் எதிர்ப்படுதல்:

பலவகை மாந்தர்கள் உள்ளனர். ஒரு காரியமாக செயலுக்காக வெளியே செல்லுகையில் சிலர் எதிர்ப்பட்டால் தீமை என்றும் சிலர் எதிர்ப்பட்டால் நன்மை எனவும் மனம் நினைக்கின்றது.

இவ்வாறு எதிர்ப்படுதலையும் பழந்தமிழர் நிமித்தமாகக் கருதியுள்ளார்.

மாந்தர் எதிர்ப்படுதல்

நன்மை | தீமை

குழல் விரிந்த ஒருத்தி வழிப்போக்கரின் எதிர்வர அது தீ நிமித்தமாகக் கருதப்பட்டதை,

“வளரத் தொடினும் வெளவுபு திரிந்து
விளரி யுறுதகுந் தீந்தொடை நினையாத
தளரு நெஞ்சந் தலைஇ மனையோள்
உளருங் கூந்தனோக்கிக்களர”[49]

எனும் அடிகள் புலப்படுத்தும்.

பரிசில் பெற்று வருவோனைப் பரிசில் பெறப்போவோன் எதிரில் பார்த்தலை நன்னிமித்தமாகக் கருதினர் என்பதை,

“.... ....
நன்னன்சேய் நன்னற்படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறிர் ஆயின் பொழுது எதிர்ந்த
புள்ளினர் மன்ற வெற்றாக் குறுதலின்..........”[50]

எனும் அடிகள் புலப்படுத்தும்.

மேற்கூறியவற்றிலிருந்து விரிகுழலாள் எதிர்ப்படுதல். தீ நிமித்தமாகவும் பரிசில் பெற்று வருவோன் எதிர்ப்படுதல் நன்னிமித்தமாகவும் கருதப்பட்டமை புலனாகின்றது. ஆண், பெண் என இருபாலரும் நிமித்தமாகக் கருதப் பட்டனர் என்றும், அவர்களின் செயல்களும், செல்லும் நிலைகளுமே எதிர்வருபவர்களுக்கு நம்பிக்கையைத் தோற்று விப்பனவாக உள்ளதை அறிய இயலுகின்றது.

கண் துடித்தல்:

கண் இமைத்தல் என்பது இயல்பு நிகழ்ச்சி. ஆனால் கண்ணிமை துடித்தல் எப்போதேனும் நிகழ்வது. பெண் களுக்கு இடக்கண் துடித்தல் நன்மையைத் தரும்; வலக்கண் துடித்தல் தீமையைத் தரும் என்று மக்கள் நம்பினர் என்பதை இலக்கியங்கள் குறிக்கின்றன.

பிரிவுத் துன்பத்தில் உழலும் தலைவிக்கு ஆறுதல் கூறும் தோழி, ''இடக்கண் துடிக்கின்றது. தலைவன் வருதல் உறுதி'' என்று நிமித்தங்கூறி ஆற்றுவிக்கின்றமையை,

> ''இணை நலமுடைய கானஞ் சென்றோர்
> புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
> பல்லியும் பாங்கொத் திசைத்தன்
> நல்லெழி லுண்கணு மாடு மாலிடனே''[51]

எனும் கலித்தொகைப் பாடல் காட்டும்.

மாதவிக்குப் பிரிவும் கண்ணகிக்குக் கூட்டமும் நிகழும் என்பதை நிமித்தக் குறிப்பால் உணர்த்தும் வகையில்

"..................
கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
....
எண்ணுமுறை இடத்திலும் வலத்தினுந்துடித்தன"[52]
என்று சிலம்பின் அடிகள் ஒலிக்கின்றன.

தும்முதல்:

தும்முதல் எனும் செயல் மூலம் தன்னை விரும்புபவர்கள் நினைக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினர்.

"இந் நம்பிக்கையைச் "சங்க இலக்கியங்களில் காண முடியவில்லை"[52] என்று காந்தியவர்கள் தெரிவிக்கிறார். ஆனால், இந்நம்பிக்கை, தமிழ் மக்களின் வாழ்வில் நிமித்த மாகக் கொள்ளும் வழக்கம் ஆழமாகப் படிந்துள்ளது.

"..................
உள்ளிய தன்மையர் போலும் – அடுத்துஅடுத்து
ஒள்ளிய தும்மல் வரும்"[53]

எனும் பாடல் தலைவன் தலைவியை நினைக்கத் தலைவிக்குத் தும்மல் வரும் எனும் நம்பிக்கை நிலவியமைக்குச் சான்று.

ஒருவர் தும்மினால் தும்மியவரை அவருக்கு வேண்டியவர்கள் நினைக்கிறார்கள் என்னும் கருத்து வரும் குறட்பாக்கள்:

"தும்முச் செறுப்ப அழுதாள் நுல்மருள்ள
எம்மை மறைத்திரோ வென்று"

"வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீரென்று"[54]

இந்நம்பிக்கையை இன்றும் தமிழரிடைக் காணலாம்.

வளை செறிதல்:

வளை செறிதலை நன்னிமித்தமாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால் இந்நம்பிக்கை இன்று மக்களிடையே காணப்படவில்லை. வளை செறிதல் பற்றி இலக்கியங்களில் வருகின்றது.

"............
சுரிவளைப் பொலிந்த தோளுஞ்செற்றும்
வருவர்............ "[55]

எனும் பாடல் இதனைப் புலப்படுத்தும்.

வழிபாட்டில் நம்பிக்கை:

மனிதன் தொல்பழங்காலத்தில் இயற்கையைக் கடவுளாக வணங்கினான். அறிவு வளர்ச்சி பெற்ற காலத்தில் தன்னைப் போன்றே இறைஉருவங்களைச் செய்து வணங்கினான். இறை வழிபாடு வளர்ச்சியடைந்த காலத்தில் சிறுதெய்வம் பெருதெய்வம் என்ற பிரிவுகள் தோன்றின. இவ்விரு தெய்வங்களின் வழிபாட்டு முறைகளும் மாறின.

இலக்கியங்கள் மாந்த இனத்தின் இறை நம்பிக்கையையும் வழிபாட்டு நம்பிக்கையையும் காட்டும்.

வழிபாட்டு முறை வகைகள்:

மதத்திற்கு மதம் வழிபாட்டு முறைகள் மாறுகின்றன. மக்கள் வழிபடும்பொழுது தம் குறைகளை நீக்கிய இறைவனை மகிழ்விக்கும் பொருட்டுப் பலவகை வழிபாட்டு முறைகளால் நன்றியைத் தெரிவித்துக் கொள்வர். நன்றி தெரிவிக்கும் வழிபாட்டு முறைகள் பல. அவற்றுள்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)

1. பலியிடுதல்
2. வலம் வருதல்

என்பன சில.

பலியிடுதல்:

வழிபாட்டு வகையில் மிகத் தொன்மையானது பலியிடுதல். தெய்வத்தை அமைதிப் படுத்துவதற்காகப் பலியிடப்பட்டது. பலியிடுதல் இருவகையின; அவை,

பலியிடுதல்

உயிர்ப்பலி | மலர்ப்பலி (மலரால் பூசித்தல்)

என்பன.

உயிர்ப்பலி மிகத் தொன்மைக்காலச் சமுதாயத்தில் நிலவியது என்பது மானுடவியலாளர் கருத்து. இது முற்றிலும் ஏற்புடையது என்றாலும், சிறு தெய்வ வழிபாட்டில் இன்றும் இப்பலியிடும் முறை உள்ளது. இவ் வுயிர்ப் பலியின் வளர்ச்சி நிலையாக மலர்ப்பலியையைக் கூறலாம். எல்லாத் தெய்வங்களுக்கும் மலர்ப்பலியிடுதல் இன்று வழக்கில் உள்ளது.

உயிர்ப்பலி வகைகள்:

இலக்கியங்கள் பல்வகை உயிர்ப்பலிகளைக் குறிக்கின்றன.

தலைவியின் மாற்றங் கண்டு அவள் நோய் நீங்குவதற்கு வெறியாட்டயர்ந்தால் நன்மை விளையும் என்று நற்றாய்

நம்புவள்; வெறியாட்டில் மறிப்பலி தருவள் எனும் செய்தியை,

"—————— அன்னை
வெறியயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறியுயிர் வழங்கா அளவை ——————"[56]

எனும் பேரிசாத்தனாரின் பாடல் அடிகள் பேசுகின்றன.

அறிவுடைய பெண்டிரும், வெறியாட்டில் குருதியுடன் தினைப் பலிதரின், தலைவியின் துன்பம் நீங்கப்பெறும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதை,

"முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
——————"[57]

எனும் வெறிபாடிய காமக்கண்ணியாரின் பாடல் அடிகள் புலப்படுத்தும்.

வலம் வருதலில் நம்பிக்கை:

வலம் வருதல் என்பது திருக்கோவிலையோ புனிதத் தீயையோ வலப்பக்கமாகச்சுற்றி வருதல் ஆகும். வலம் வருதல், வலம் வருவோர்க்குத் தீங்கு நீக்கி நலம் பயக்கும் என்று நம்பினர். வலம் வருவோரைக் காணலும் நற்பேறு என்று நம்பினர்.

வலம்: சொற்பொருள்

பேரகராதி வலம் என்பதற்கு "இடம், ஏழனுருபு, கை-வலத்தியாழ், கனம், சேனை, மேல், வலப்பக்கம், வலி வெற்றி, பிரதட்சிணம், பவ்வீ"[58] என்ற பொருள்களைத் தருகின்றது.

வலம் என்பதன் சிறப்பு:

எந் நற்செயலாயினும், எவர்க்கேனும் ஒரு பொருளைத் தருவதாயினும், வலமே முதலிடம் பெறுகின்றது.

"மனிதனின் இரண்டு கால்களில் இரண்டு கைகளில் இடது கால், கைகளைவிட வலதுகால், கைகள் பலம் வாய்ந்தவை.

'சக்தியோடுவாழ' நிரந்தரமாக எதிலும் 'வலப்புறமாக வருவது நன்று' என இந்துக்கள் நம்பினார்கள்; நம்பு கிறார்கள்.

'வலம்' என்பது நாம் வலிமையுடையோம் என்னும் பொருள் தருகிறது.

'வலியோம், வல்லோம், வல்லம், வலம் இந்த நான்கு சொற்களும் ஒரே பொருள் உடையவை.

தனது வலிமையின் மீது நம்பிக்கை வைத்து வாழ்வ தற்கே வலது காலை முதலில் எடுத்துவைக்கச் சொன்னார் கள் இந்துக்கள்"[59] என்கிறார் அர்த்தமுள்ள இந்துமதத்தின் ஆசிரியர் கண்ணதாசன்.

"அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில்", வலம், வெற்றியை அளிக்கும், ஆக்கத்தைத் தரும், என்ற நம்பிக்கை மக்களின் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது"[60] என்கிறார் காந்தி.

இலக்கியத்தில் 'வலம் வருதல்'

"........ எல்லா
கடவுட்கடி நகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் ....."[60]

என்று திருக்கோயில் வலம் வருதல் பற்றியும் இளநாகனாரின் மருதக் கலிப்பாடல் அடிகள் புலப்படுத்தும்.

"சாலியொருமீன் தகையாளைக் கோவலன்

தீவலம் செய்வது காண்போர்க ணோன்பென்னை
-----------------------------------"[63]

எனும் சிலப்பதிகார அடிகள் வலம் வருதலைக் காணுதல் நோன்பினால் பெற்ற பேறு என்பதைக் குறிக்கும்.

தமிழிலக்கியங்கள் பல. அவற்றுள் வரும் நம்பிக்கைகள் எண்ணில! அவற்றுள் ஒருசில நம்பிக்கைகள் பற்றி மட்டுமே இங்கு கூறப்பட்டுள்ளன.

தொட்டனைத் தூறும் மணற்கேணி; நூல்கள் நவில் தொறும் நலம் பயக்கும். அது போன்றே இலக்கியங்களைப் பயில்தொறும் பயில்தொறும் நம்பிக்கைகள் பலவற்றைக் காணல் இயலும்.

1. சில நாளிலும் பொழுதிலும், கோளிலும், மீனிலும் தொடர்ந்து நல்லன நிகழ்ந்தமையை நோக்கிய

மாந்தன் அவற்றை நல்லன என்றும், தீயன நிகழ்ந்தமையை நோக்கி அறிந்தபொழுது அவற்றைத் தீயன என்றும் எண்ணும் வழக்கத்திற்கு ஆட்பட்டான். எனவே நல்லன தொடங்கும்பொழுது முந்தைய பட்டறிவின் அடிப்படையில் நாளும் பொழுதும் கோளும், மீனும் கண்டு வினை தொடங்கினான்.

2. செல்லும் நோக்கம் பயன்தரு முறையில் நிறைவுற வேண்டும் என்ற ஆர்வம் நிமித்தம் காணலில் முனைந்தது.

3. நலன் வேட்டும், தீயன அஞ்சியும் மாந்த மனம் இயற்கை நிகழ்ச்சிகள், பறவைகள், விலங்குகள், ஊர்வன ஆகியவற்றின் செயல்களிலும் நற்குறி, தீக்குறிகள், நன்னிமித்தம், தீ நிமித்தங்கள் காணத் தலைப்பட்டது.

4. எதிர்பார்க்கும் செயல்கள் எதிர்பார்க்கும் வண்ணம் நிகழ்தல் வேண்டும் எனும் ஆர்வ உணர்வாலும் பதைப்பாலும் மாந்த மனம் நன்முடிவுக்கு ஏங்கியதன் விளைவால் மங்கலச் சொல்லை எதிர்பார்த்தல் உண்டாயிற்று.

5. தொடக்கத்தில் தாலி இன்று வழங்கும் பொருளில் இல்லாமல் சிறுவர்களுக்குக் காப்பணியாக இருந்தது புலனாகின்றது.

6. வலம் வருதல், பலியிடுதல் என்பன கற்பித நம்பிக்கைகளாக மாந்தர் மனத்தில் பதிந்தன. வலம் வெற்றியை அளிக்கும் என்றும் பலியிடுதல் இறையின் சீற்றத்தைத் தணிக்கும் என்றும் நம்பினர்.

7. வலம் வருபவர்களைக் காண்டல் இன்னல்களைத் தடுக்கும் என நம்பினர்.

அடிக்குறிப்புகள்:

1. Tamil Lexicon, Vol. IV, p. 2254.
2. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 111
3. தொல்காப்பியம் (பொருளதிகாரம்) நூல். 88:16-17
4. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கை களும், ப. 110
5. மேலது., ப. 113
6. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), நூ. 88: 16-20
7. ராதாதியாகராஜன், கந்தரலங்காரம், பா. 38
8. நற்றிணை, பா. 125, 7
9. அகநானூறு, பா. 136:4-6
10. கலித்தொகை, பா. 5:7-9
11. பொருநராற்றுப்படை, அடி: 130-133
12. சிலப்பதிகாரம், கா. 1, அடி: 41-42
13. Tamil Lexicon, Vol. II, p. 1068.
14. குறுந்தொகை, பா.
15. அகநானூறு, பா. 351;10-11
16. அய்ந்திணை அய்ம்பது, பா. 43:1-4
17. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), நூ. 576
18. ,, ,, இளம், பக். 153-154
19. ,, ,, நச், பக். 293-296
20. நப்பூதனார், முல்லைப்பாட்டு, அடி. 18

21. புறநானூறு, பா. 20:18-19
22. மேலது, பா. 68:11-12
23. புறநானூறு, பா. 124:1-5
24. மேலது., பா. 204: வரி 10-14
25. குறுந்தொகை, பா. 210:5-6
26. ஐங்குறுநூறு, பா. 391
27. பழமொழி, பா. 87
28. சுசீலா கோபாலகிருஷ்ணன், சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள், ப. 27
29. பதிற்றுப்பத்து, பா. 22:34-38
30. புறநானூறு, பா. 80:1-5
31. நற்றிணை, பா. 338:10-12
32. அகநானூறு, பா. 151:14-15
33. மேலது., பா. 387:14-16
34. மேலது., பா. 9:18-20
35. நப்பூதனார், முல்லைப்பாட்டு: 7-18
36. நற்றிணை, பா. 65:1-9
37. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், பக். 117-118
38. சிலப்பதிகாரம், கா. 18:50-53
39. சாமிசிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், பக். 100-115
40. அகநானூறு, பா. 86:15-17
41. நப்பூதனார், முல்லைப்பாட்டு, 8-9

42. மதுரைத்தமிழ்ப் பேரகராதி, ப.
43. குறுந்தொகை, பா. 161:1-4
44. அகநானூறு, பா.
45. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 200
46. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.
47. மணிமேகலை, கா. 7:55-59
48. திணைமாலை நூற்றைம்பது, பா. 66:1-4
49. புறநானூறு, பா. 260:1-4
50. திணைமாலை நூற்றைம்பது, பா. 64:2-4
51. கலித்தொகை, பா. 11:19-22
52. சிலப்பதிகாரம், கா. 5:237-239
53. அய்ந்திணை எழுபது, பா. 40:3-4
54. திருக்குறள், குறள். 1317, 1318
55. குறுந்தொகை, பா. 260:3-4
56. அகநானூறு, பா. 242:11-13
57. மேலது., பா. 22:7-10
58. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.
59. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம் (முதல்பாகம்) ப. 75
60. க. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் ப. 232
61. கலித்தொகை, பா. 84:5-7
62. மேலது., பா. 69:13-17
63. சிலப்பதிகாரம், கா. 1:51-53

வாழும் தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள்
கள ஆய்வுப் பகுதியில்

எச்சமுதாயத்திலும் நம்பிக்கைகள் இடங்கொண்டு இருத்தல் இயல்பு. நம்பிக்கைகள் நிலவாத சமுதாயம் இல்லை. இக் காலத் தமிழர்களின் வாழ்விலும் பல்வகை நம்பிக்கைகள் நிலவுகின்றன. இந் நம்பிக்கைகளின் அடிப்படையில் இச் சமுதாயத்தின் அறிவுத் தரத்தைக் கணித்தறியும் முயற்சியே இவ்வியல்.

ஒரு மனிதனிடம் உள்ள நம்பிக்கைகள் பல. எனினும், வினாநிரல் மூலமாக மக்களிடம் நிலவும், சில நம்பிக்கை களையும் மனநிலையையும் அறிதல் கூடும்; எனவே, புதுவை வெங்கட்ட நகர்ப் பகுதி, ஆய்விற்குரிய அடிப்படைக் களமாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

சாதி:

சாதிகள் பேச்சளவில் இல்லை என்று கூறினாலும் நடைமுறையில் சமுதாயத்தில் நிலவவே செய்கின்றன. எனவே தகவலாளர்களின் விவரம் சாதிகள் அடிப்படையில் பிரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	சமூகப் பெயர்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	பிராமணர்	10	40%
2.	வைசியர்	5	20%
3.	அய்யங்கார்	4	16%
4.	முதலியார்	3	12%
5.	வேளாளர்	1	4%
6.	யாதவர்	1	4%
7.	மீனவர்	1	4%

மிகப்பலர் சாதி உணர்வுடையோரே; ஆனால் சாதிவெறி கொண்டிலர். உரையாடுங்கால், 'பேதமில்லை' என்று கூறிக்கொள்கின்றனர். நம்பிக்கைகள் என்பது சாதிக்கு ஏற்றாற் போல் அமைகின்றன; என்றாலும் இங்குப் பொதுவான நம்பிக்கைகளை மட்டுமே கேட்டதனால் சிலர் ஆர்வமுடனும் சிலர் ஆர்வமின்றியும் விடையளித்தனர்.

தொழில்:

ஆடவரும், மகளிரும் வேலைக்குச் சென்றால்தான் நிம்மதியாக வாழஇயலும்; பொருளாதாரத்தில் மேன்மை பெறமுடியும் என்பதை இங்குள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் உணர்ந்து வேலைக்குச் செல்வதைக் காணமுடிகின்றது. இல்லத்திலிருப்பவர்களும் வீட்டிலேயே தங்களுடைய நேரத்தை வருவாய்க்குப் பயனுடையதாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

வரிசை எண்	தொழில்	எண்ணிக்கை	விழுக்காடு
1.	வேலைக்குச் செல்லும் பெண்கள்	6	24%
2.	வேலைக்குச் செல்லும் ஆண்கள்	4	16%
3.	படிப்பவர்கள்	3	12%
4.	இல்லத்தரசிகள்	12	48%

நாள் நம்பிக்கை:

தமிழர்களின் பண்பாட்டில் எந்த ஒரு நற்செயலையும் நாளும் கோளும் பார்த்துச் செய்யும் வழக்கம் இருக்கின்றது.

திருமணம், பெயர் சூட்டு விழா, கோவில் திருவிழா போன்றவை நிகழ்தற்கு நல்ல நாள் பார்க்கும் பழக்கம் இருக்கின்றது. நல்ல நாள் பார்த்துச் செய்வதால் வாழ்வு சிறக்கும்; இன்பம் பெற்று வாழ முடியும் என்று நம்பு கின்றனர்.

தனி மனித விழாவாயினும், ஊர்ப் பொது விழா வாயினும் நல்ல நாளும் கோளும் பொழுதும் பார்த்துத் தொடங்கினால் விழா இனிது முடியும்; நலம் விளையும்; நன்மை தொடரும் என்று நம்புகின்றனர்.

தனிப்பட்ட முறையில் நம்பிக்கையில்லை என்று கூறுவோரின் இல்லத்து நிகழ்ச்சிகள் கூட நல்ல நாள், கோள், பொழுது பார்த்தே தொடங்கப் பெற்று நடத்தப் பெறுகின்றன. இத்தகைய முரண் ஏன் என்று வினவிய பொழுது, சமுதாய நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்-களையும் மீறி நடத்தற்குரிய இல்லச் சூழலோ சமுதாயச் சூழலோ இன்னும் ஏற்படவில்லை என்று கூறினர்.

அவர்கள் கூறிய மறுமொழி ஆழ்ந்து எண்ணுதற்கும் ஆய்தற்கும் உரியது.

தனி மனிதச் சிந்தனை முடிவுகளைச் செயற்படுத்த இயலாத சமுதாய ஆதிக்கம், செல்வாக்கு, தனி மனிதன் மீது இரும்புப் பிடியாக இருக்குகிறது என்பதை அறிய இயல் கின்றது.

(இன்றும் நல்ல நாளில் திருமணம் நிகழ்கிறது என்பதற்குப் பின்னிணைப்பில் திருமண அழைப்பிதழ் சான்றாக உள்ளது).

கிழமைகள் பற்றிய நம்பிக்கை:

சிலர் குறிப்பிட்ட கிழமைகளில் நற்செயல்கள் தொடங்கினால் நலமாக முடியும் என்றும் குறிப்பிட்ட கிழமைகளில் தொடங்கினால் அல்லல் ஏற்படும் என்றும் நம்புகின்றனர். சிலருடைய அனுபவங்களே பின்னாளில் நம்பிக்கைகளாகின்றன என்பதற்கு ஏற்ப இவர்களின் அனுபவங்களே இவர்களுக்கு முந்தையோர் நம்பிக்கைகளில் அசையா நம்பிக்கையை உண்டாக்கி இருக்கின்றன.

கிழமைகளில் புதனும் வியாழனும் சிறந்த கிழமைகளாக நம்புகின்றனர். 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்ற பழமொழி புதன் கிழமை பற்றி மக்கள் மனதில் ஆழப் பதிந்திருப்பதினை உணர்த்துகிறது. வெள்ளிக்கிழமை அடுத்த நிலையைப் பெறுகின்றது.

காக்கை கரைதல்:

மக்கள் தம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருட்களின் மாற்றம், செயல் முதலியவற்றை வைத்தும் நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்கிறார்கள். அவற்றுள் ஒன்று காக்கை பற்றிய நம்பிக்கை.

நம்பவில்லை என்றவர்கள் அறிவியல் முன்னேற்றம் இருக்கும் இக்காலத்தில் விருந்தினர் வருகையைத் தெரிவிக்க தொலைபேசி, தந்தி, அஞ்சல் போன்ற வழிகளின் மூலம் தெரிவித்துத்தான் வருவார்கள் என்று கூறுகிறார்கள்.

நம்புவோரிடம் ஏன் நம்புகிறீர்கள் என்ற வினா வினை எழுப்பியபொழுது, 'நான்கைந்து முறை காகம் கரைந்தது; எங்கள் வீட்டிற்கு விருந்தினர் வந்தார்கள் எனவே நம்புகிறோம்'' என்று தெரிவித்தனர்.

கல்வி வளர்ச்சியும், தகவல் தொடர்பில் முன்னேற்றமும் இவ்வகை நம்பிக்கையில் மாற்றம் இடம்பெறச் செய்து வருகின்றன என்று கொள்ளலாம்.

காக்கைக்கு உணவிடும் பழக்கம்:

தாங்கள் சமைத்த உணவினை எவரும் உண்ணுதற்கு முன் காக்கைக்கு இடும் வழக்கம் இங்குள்ளோரிடை நிலவு கிறது காக்கைக்கு உணவிடும் வழக்கத்தினால் பிராமணர் களும், வைசியர்களும் பெரும்பான்மையினர். ஏனையோர் அமாவாசையன்று மட்டுமே உணவிடுகிறார்கள். சிலர் எஞ்சிய உணவினை காக்கைக்கு இடுகின்றனர். சிலர் தங்கள் முன்னோரின் நினைவு நாள்கள் சிறந்த விழா நாள்களில் முதலில் காக்கைக்கு உணவிடுகிறார்கள்.

முன்னோர் காக்கையுருவில் வந்து உணவினை உண்டு ஆசி வழங்குகிறார்கள் என்று நம்புகின்றனர். சிலர் காக்கைக்கு உணவிடுதல் ஒரு பிராமணனுக்கு உணவிடுத லுக்கு ஒப்பாகும்; இதனால் நலன்வரும் என்று நம்புகின்றனர். இன்னும் சிலர் உணவில் நச்சுத்தன்மை இருந்தால் காகம் அதை உண்ணாது; அதிலிருந்து நாம் அந்த உணவில் நஞ்சு உள்ளது என்று அறியலாம் என்கின்றனர்.

காக்கைக்கு வைக்கும் உணவை அண்டங்காக்கை உண்ணக்கூடாது; அப்படி முதலில் உண்டால் தமக்குத் தீமை வரும் என்று நம்புவதாகக் கூறினார்கள். மணிக்காக்கை (சாம்பர் நிறக் கழுத்துடையது) உணவினை உண்டால்தான் நலம்பயக்கும் என்று நம்புவதாகத் தெரிவித்தனர்.

ஆழியிழைத்தலில் நம்பிக்கை:

ஆழியிழைத்தல் என்றால் என்ன என்று தகவலாளர்கள் ஆய்வாளரையே வினவினர். ஆழியிழைத்தல் பற்றிக் கூறிய பிறகு, ''இது எல்லாம் நாங்கள் செய்வதில்லை; ஆனால் இறைவன் திருமுன் திருவுளச்சீட்டுப் போட்டுப் பார்த்தல் பூக்கட்டிப் போட்டுப்பார்த்தல் என்று நல்ல செயல்களுக்கு இறைவனின் அருளைப் பெறுவோம்'' என்று ஒரு சிலர் தெரிவித்தனர்.

ஆந்தை ஒலியில் நம்பிக்கை:

இங்கு ஒருமுறை கூட ஆந்தை வந்ததில்லை; எனவே அதைப் பற்றித் தெரியாது என்று அனைவரும் கூறினர்; ஆனால் 'ஆந்தை ஒலித்தாலோ அல்லது வீட்டுக் கூரையின் மேல் அமர்ந்தாலோ தீமை என்று கூறுவதைக் கேட்டுள்ளோம்; ஆனால் எங்களுக்கு அதுபற்றித் தெரியாது'' என்று தெரிவித்தனர்.

பல்லி சொல்லும் பலனில் நம்பிக்கை:

பல்லியை ஊர்வன வகையில் சேர்க்கலாம். இதன் ஒலியில் நன்மையும் தீமையும் வரும் என்று நம்புகின்றார்கள். இவ்வழக்கம் இன்றும் உள்ளதைக் களஆய்வு மெய்ப்பிக்கிறது.

பல்லி இருக்கும் நிலையில் நம்பிக்கை:

பல்லி ஒலிக்கும் இடத்தை வைத்து நன்மை தீமைகள் கூறப்படுகின்றன. இருக்கும் நிலையில் நம்பிக்கை உண்டு, இல்லை என்றும் தெரிவிக்கிறார்கள்.

நம்புகிறோம் என்று கூறியோரும் ''இப்பொழுது பலன் பார்ப்பதில்லை. எங்கள் முன்னோர்கள் இதைச் சொல்லிச் சென்றார்கள். எனவே இருக்கும் நிலையில் நம்பிக்கை உண்டு ஆனால் விளக்கமாகத் தெரியாது'' என்றனர்.

பல்லி சொல்லும் திசையில் நம்பிக்கை:

''பெரும்பாலும் சொல்லும் திசை வைத்து நன்மையா தீமையா என்று முன்னோர்கள் அறிந்தார்கள். அதனால் அவர்கள் நன்மை, தீமை என்று கூறியவற்றில் ஒருசில மட்டுமே நினைவிலிருந்தாலும் பார்ப்பதில்லை'' என்றனர்.

பல்லி விழும் பலனில் நம்பிக்கை:

பல்லி தலையில், கையில், உடல்மேல், விழுந்தால் ஒவ்வொன்றிற்கும் பலன் உண்டு என்று நம்புகின்றனர். பெரும்பான்மையினர் பல்லி உடலில் விழுந்தால் நன்மை என்றும் தலையில் விழுந்தால் கலகம் அல்லது கெட்ட செய்திகள் வரும் என்றும் நம்புகின்றனர். பஞ்சாங்கத்தில் பல்லி விழும் பலன் போடப்பட்டிருக்கிறது. அதில் குறித்துள்ள படி சிற்சில வேளைகளில் நடக்கும்; பெரும்பாலும் நிகழ்வதில்லை என்றனர்.

பல்லி விழுவதில் நம்பிக்கை:

பெரும்பாலோர் பல்லி உடலில் விழுந்தால் நன்மை என்றும் தலையில் விழுந்தால் கெடுதல் என்றும் நம்புதல் தெரிகின்றது.

நற்சொல்லில் நம்பிக்கை:

நல்ல சொற்கள் கேட்பதினால் தமக்கு நன்மையும் வாழ்வில் வளமும் மன அமைதியும் கிட்டும் என்று நம்புகின்றனர். சிலர் எச்சொல்லும் எங்களை ஒன்றும் செய்யாது; நம் கடமையைச் செய்தால் எத் தீச்சொல்லாயினும் சரி நற்சொல்லாயினும் சரி ஒன்றும் செய்யாது என்கின்றனர்.

தீயசொல்லில் நம்பிக்கை

தீயசொற்களைக் கேட்டால் தமக்குத் துன்பம் வரும் என்று பெரும்பாலோர் அஞ்சுகின்றனர். 'நீ நாசமாகப் போவாய்' என்று கூறி மணலைத் தூற்றினால் நிச்சயம் / உறுதியாக நடந்துவிடும் என்று நம்புகின்றனர். 'நீ உருப் படாமல் போவாய்' என்று கூறினாலும் 'உன் குடும்பம் விளங்காமல் போக' என்றாலும் அவ்வாறே ஆகிவிடும் என்று நம்புகின்றனர்.

மங்கலப்பொருட்களில் நம்பிக்கை:

பூ, மஞ்சள், மஞ்சள் கலந்த அரிசி, குங்குமம் ஆகியவற்றை மங்கலப்பொருள்கள் என்று தமிழர்கள் கருதுகின்றனர். வீட்டிற்குப் பெண்கள் வந்தால் அவர்களுக்குப் பூ, பழம் தந்து சிறப்பிக்கிறார்கள். அப்படிச் சிறப்புக்குரியவர்களைச் சுமங்கலிப் பெண்கள் என்று அழைக்கின்றனர். முன்னர் நெல்லுடன் மலரும் சேர்த்து வாழ்த்துவதற்குப் பயன்படுத்தியமையை இலக்கியங்களில் அறிகின்றோம். ஆனால், இன்று மஞ்சள் கலந்த அரிசியுடன் மலரும் சேர்த்து வாழ்த்துதற்கும் வழிபடுதற்கும் பயன்படுத்துகின்றனர் என்பதை அறிகின்றோம்.

தாலி நம்பிக்கை

வேலைக்குச் செல்லும் பெண்டிர் தாலியைப் புனிதமாகக் கருதவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் தாலியை அணிந்திருக்கிறார்கள். ஏன் இவ்வாறு அணிந்திருக்கிறார்கள் என்று வினவியதற்கு அணியவில்லை என்றால் சமூகம் மதிக்காது என்பது மட்டுமன்றி இழிவாகவும் பேசும் என்று கூறினார்கள். இங்கும் சமுதாய நம்பிக்கையின் ஆதிக்கத்தை அறியலாம்.

அய்ம்படைத்தாலி கட்டுதலில் நம்பிக்கை:

அய்ம்படைத்தாலி பற்றித் தெரியாதென்றே அனைவரும் கூறினர். ஆனால் புலிப்பல்தாலி தெரியும் என்றனர். எனினும் அதை வீரம், காப்புணர்வினை விளைவிக்கும் அணியாக எண்ணவில்லை; அழகு சேர்க்கும் அணியாகக் கருதுவதாகத்தான் தெரிகிறது.

வலதுகண் துடித்தலில் நம்பிக்கை:

பெண்டிர்க்கு வலதுகண் துடித்தல் நன்மையைத் தரும் என்று பெரும்பான்மையோர் நம்புகின்றனர். இதனால் பயன் பெற்றதாகவும் கூறுகின்றனர்.

மக்கள் எதிர்வருதல்:

முக்கியமான விழா, நல்ல செயல் ஆகியவற்றிற்காகச் செல்கையில் நிமித்தம் பார்க்கும் வழக்கம் மக்களிடையே இன்று குறைந்து வருகின்றது. முன்பு கைம்பெண் (விதவை) எதிரில் வந்தால் செயல் நடக்காது என்று நம்பினர். இக்காலத்தில் இவற்றில் மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை.

மூவர் மட்டும் வண்ணான், நாவிதன், ஒற்றைப் பார்ப்பனன் கைம்பெண் (விதவை), தலை விரித்த கூந்த லுடன் இருப்பவர் இவர்களைத் தீய நிமித்தமாகக் கருதினர். பிறவற்றை நன்னிமித்தமாகக் கருதினர்.

விலங்குகள் எதிர்வருதலில் நம்பிக்கை:

நற்காரியத்திற்குச் செல்கையில் சில விலங்குகள் எதிர்ப் படுதல் நன்னிமித்தமாகாது என்று நம்புகின்றனர்.

அறுபத்து நான்கு விழுக்காட்டு மக்கள் தீய நிமித்தமாக எருமை, பூனை இவற்றைக் கருதுகின்றனர். நன்னிமித்த மாக பசு, காக்கை, மாடு இவற்றைக் கருதுகின்றனர். பாம்பு, ஆடு பற்றிய எந்தக்குறிப்பும் இல்லை.

வேண்டுதலில் நம்பிக்கை:

இறைவன்தான் தனக்கு எல்லாம், அவனுடைய சீற்றத் திற்கு ஆளானால் துன்பம் விளையும் என்று அன்றும் மக்கள் நம்பினர்; இன்றும் மக்கள் நம்புகின்றனர். இதன் விளைவால் இன்று புதுப்புது வேண்டுதல்கள் தோன்றிவருகின்றன.

பலியிடுதலில் நம்பிக்கை:

உயிர்ப்பலியிடுதலில் பெரும்பாலோர்க்கு நம்பிக்கை இல்லை. ஓர் உயிரைக் கொல்லுதல் என்பது பாவம். வாயில்லா உயிரைத் துன்புறுத்தல் மிகவும் கொடிய செயல் என்ற கருத்தையே கூறினர்.

சுருங்கக் கூறின்:

1. அவரவர் மனநிலைக்கு ஏற்ப நம்பிக்கைகளில் நம்பிக்கை வைக்கின்றனர்.

2. இலக்கிய நம்பிக்கைகளில் இன்று ஆழியிழைத்தல், அய்ம்படைத்தாலி, ஆந்தை ஒலி முதலிய நம்பிக்கைகள் வழக்கொழிந்துவிட்டதை அறிய இயலுகின்றது.

3. ஆழியிழைத்தல் தெரியாது என்றனர் அனைவரும். ஆனால் பூக்கட்டிப் பார்த்தல், திருவுளச் சீட்டில் முடிவுகளைக் காணுதலில் நம்பிக்கைக் கொண்டுள்ளதை அறிய இயலுகின்றது.

4. தாலியைப் புனிதமாக நம்பும் மன்ப்பான்மை மாறி வருவதைக் காணமுடிகின்றது.

5. அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் மங்கலப்பொருட்களில் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் நெல்லுக்குப் பதிலாக மஞ்சள் கலந்த அரிசியை இறைவழிபாட்டிலும், முன்னோர் வழிபாட்டிலும், வாழ்த்துதலிலும் பயன்படுத்துகின்றனர்.

6. தொன்றுதொட்டு இன்றுவரை மகளிரின் வலதுகண் துடித்தல் நன்மையைத் தரும் என்று நம்புகின்றனர்.

7. மாந்தர் எதிர்ப்படுதலில் நம்பிக்கை இப்பொழுது மக்களிடையில் குறைந்துவருகின்றது.

8. பலியிடுதலை இன்றைய மக்கள் வெறுப்பதுடன் நம்பிக்கையும் கொள்ளவில்லை.

சமுதாயப் பின்புலனும் நம்பிக்கைகளும்

முகப்புரை:

சமுதாயத்தில் தோன்றி, நிலவி, மெலிந்து நலியும் நம்பிக்கைகளும் அவற்றைச் சார்ந்து நிகழும் நிகழ்ச்சிகளும் சமுதாயத்தின் கல்வியறிவு நிலை, பொருள்நலநிலை, பழக்கவழக்க மரபு நிலைகள், கலை நிலை ஆகியவைகளுக்கு ஏற்ப அமைகின்றன.

கல்வி அறிவும் அறியாமையும்:

கல்வி அறிவிற்கேற்ப அஞ்சுவதற்குரிய பொருள்களும் மாறின.

பருவங்களைக் கணித்தறியும் அறிவு பெற்ற சமுதாயம் மழை, வெள்ளம், வறட்சி பற்றிய அச்சத்தைப் பெரிதும் கொள்வதில்லை; மழையையும் வெள்ளத்தையும் சமுதாயப் பயனுக்கு மடைமாற்ற முனைந்தது; பயிர்த்தொழிலும் கலைகளும் தழைத்தன. அச்சத்தால் எழுந்த நம்பிக்கை கல்வி அறிவினால் நீங்கி மனித முயற்சியில் நம்பிக்கை கொள்ளச் செய்தது.

இருப்பினும் எதிர்பாராப் பருவமாற்றங்களால் ஏற்படும் பெருமழை, கடுங்காற்று, பேரூழி வெள்ளம் வருங்கால் அஞ்சி நடுங்குகிறான் மனிதன். இயற்கையின் பேராற்றலை நம்புகிறான்; அஞ்சிப் பணிகிறான்; எனினும் அறிவுவழி கண்ட கருவிகள், முறைகள் வழி அழிவுக்கு ஆட்பட்டுத் துன்புற்றிருக்கும் சமுதாயத்தை மீட்கும் முயற்சியில் முனைகிறான்.

கல்வித் தரத்தில் உயர்நிலையடைந்துள்ள சமுதாயத்தில் வழிவழி வந்த நம்பிக்கைகள் நலிவுறுகின்றன; மெலிவுறுகின்றன. தன்னம்பிக்கையும் முயற்சியும் பெருகிப் பயன் விளைவிக்கின்றன.

வளமையும் வறுமையும்:

வளமும் வறுமையும், மக்கள் கொண்டுள்ள செயல்களில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

வளமுடையவராயினும் வறியராயினும் எதிர்ப்பார்ப்பு என்பது அவர்களிடையே நிலவும் பொது இயல்பு; ஆனால் எதிர்பார்க்கும் பயனின் அளவில் மாறுபடும்; எதிர்பார்க்கும் பயன் கிட்டிவிட்டால் அவர்கள் இயற்றும் நேர்த்திக்கடன்களின் அளவும் மாறுபடும்.

வளமையுடையவன் தன் தொழிலில் எதிர்பார்த்த இலாபம்/ஆதாயம் கிடைத்துவிட்டால் அவன் இயற்றும் நேர்த்திக்கடன் பெரும் பொருட் செலவினதாகவும் ஆரவாரம் மிக்குடையதாகவும் அமையும்.

ஆனால், வறுமையுடையவன். நாட்கூலிக்கு வேலை செய்வோன் அன்றைய பொழுதுக்கு வேலையும் உரிய கூலியும் கிடைத்தால் போதும் என்று எதிர்பார்க்கிறான்; தான் வணங்கும் தெய்வத்திடம் வேண்டிக்கொள்கிறான்; வேலையும் கூலியும் கிடைத்துவிட்டால் கோவிலில் தேங்காய் உடைப்பதாக நேர்ந்து கொள்கிறான்.

வளமுடையவன் எதிர்பார்ப்பு, பெரிய அளவில் பொருள் ஆதாயம்; ஆனால் வறியவன் எதிர்பார்ப்பு அன்றாட வயிற்றுப் பாட்டுக்குரிய தீர்வு.

நேர்த்திக்கடன் ஆற்றுவதிலும் இவ்விரு நிலையினரிடமும் பெருத்த வேறுபாடுள்ளது.

வழிபடுமுறைகளிலும் படையல்களிலும் சமுதாயத்தில் நிலவும் பழக்கங்களின் தாக்கம் காணப்பெறுகின்றது.

சைவ உணவு (மரக்கறி) உண்போர், மரக்கறி உணவு வகைகளை பொங்கல், பாயசம், பானகம், பழம், வெற்றிலை, பாக்கு போன்றவற்றை வழிபாட்டில் படையலாக வைக்கின்றனர். எலுமிச்சம் பழத்தையும் பூசணிக்காயையும் குங்குமம் தடவி அறுத்துப் பலியிடுகின்றனர்.

புலால் (ஊன்) உணவுண்போர் ஆடு, கோழி, மீன் போன்றவற்றின் இறைச்சிகளையும், கள், சாராயம் போன்ற குடிப் பொருள்களையும் படையலாக வைத்து வழிபடுகின்றனர்.

ஆடு, கோழி போன்ற உயிரினங்களைப் பலியிடுகின்றனர்.

கலையும் நம்பிக்கையும்:

கல்வி நலமும் கலை நலமும், பொருள் நலமும் பெற்றுச் சமுதாயத்தில் மேநிலையிலிருப்போர் எடுக்கும் விழாக்களில்

நாதசுரம், பாடல் அரங்குகள், நாட்டிய நிகழ்ச்சிகள், இசைச் சொற்பொழிவுகள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்து கின்றனர்.

முற்குறித்த நலங்களின்றிச் சமுதாயத்தில் கீழ் நிலையிலிருக்கும் மக்கள் எடுக்கும் விழாக்களில், பறைக்கொட்டு, உடுக்கையடித்தல், கைச் சிலம்பாடல், கரகாட்டம், தெருக் கூத்து போன்ற நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர்.

இருசாரரும் தாங்கள் பெற்ற நலன்களுக்குத் தெரிவிக்கும் நன்றியுணர்வின் வெளிப்பாடுகளே அவர்கள் நடத்தும் திருவிழா நிகழ்ச்சிகள்; எனினும் அவர்களிடையே நிலவும் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அவர்களுடைய விழாக் களிலும் இடம் பெறுகின்றன.

கடவுளர் கதைகளிலும் பெயர்களிலும் இயல்புகளிலும் கூட இவ்வகை வேறுபாடுகளைக் காணலாம்.

சிவபார்வதி, திருமால் திருமகள் பிரமன் சரசுவதி, இராமன் சீதை, கண்ணன்–ருக்மணி போன்ற கடவுளர் களையும் கடவுட் கதைகளையும் முற்குறித்த மேநிலைச் சமுதாயத்தினர் படைத்துள்ளனர்.

கருப்பண்ணசாமி, காத்தவராயன், காட்டேரி, காளியாத்தாள், மாரியாத்தாள், முனியாத்தாள் போன்ற

கடவுள்களையும் கதைகளையும் சமுதாயத்தின் கீழ்நிலை மக்கள் படைத்துள்ளனர்.

எனவே சமுதாயத்தின் கல்வியறிவுநிலை, கலைநிலை, பழக்கவழக்க – மரபுநிலைகளுக்கு ஏற்பச் சமுதாயத்தில் நம்பிக்கைகளும் அவை சார்ந்த நிகழ்ச்சிகளும் அமைகின்றன எனும் மெய்ம்மையை அறியலாம்.

நிறைவுரை

இலக்கியச் சான்றுகளும் களஆய்வும் நம்பிக்கை பற்றிய சில கருத்துக்களைத் தருகின்றன. அவை வருமாறு:

1. அறிஞர்கள் பலரும், நம்பிக்கைக்கு அடிப்படையான காரணங்களாக அச்சம், விருப்பம், தன்னலக்காப் புணர்வு இவற்றையே கூறுகின்றனர். அவர்களுடைய சொல்லும் பாங்கில்தான் மாற்றம்; கருத்தில் மாற்றமில்லை.

2. நம்பிக்கையில் மாற்றம் என்பது நம்புவோரின் புறச் செயல் மாற்றத்தையே குறிக்கின்றது. அடிப்படை மாற்றத்தையன்று, ஏனெனில் அடிப்படையில் மாற்றம் இல்லை.

3. மனித சமுதாயம் உள்ளவரையில் நம்பிக்கைகள் இருந்து கொண்டுதான் இருக்கும்; அவை இறவாத் தன்மையன.

4. நாளிலும் கோளிலும், நிமித்தங்களிலும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். மாந்தர் எதிர்ப்படுதலில் இன்றைய மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் விலங்குகள் எதிர்ப்படுதலில் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

5. தீய சொற்களுக்கும் தீய நிமித்தங்களுக்கும் இன்றும் மக்கள் அஞ்சும் போக்கைக் காணமுடிகின்றது.

6. அவரவர் மன நிலைக்கு ஏற்ப நம்பிக்கைகளில் நம்பிக்கை வைக்கின்றனர்.

7. தாலியைப் புனிதமாக நம்பும் மனப்பான்மை மாறி வருவதைக் காணமுடிகின்றது.

8. அன்றுமுதல் இன்றுவரை மகளிரின் இடதுகண் துடித்தல் நன்மையைத் தரும் என்று நம்புகின்றனர்.

9. நம்பிக்கைகள், வாழும் சமுதாயத்திற்கு ஏற்பச் சில வழக்கொழிந்தும் சில வழக்கிலும் உள்ளன. சில புதிய நம்பிக்கைகளும் உருவாகிக்கொண்டு இருக்கின்றன.

10. நம்பிக்கைகள் கல்வியறிவு, பொருளாதாரம் போன்றவைகளின் மூலம் மாறுபடுகின்றன.

11. நம்பிக்கைகள் எண்ணில. அவற்றுள் மிகச்சிலவே ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் ஆய்வு செய்வதற்குரிய நம்பிக்கைகள் பல உள. மகளிர் பற்றிய நம்பிக்கை, குழந்தை பற்றிய நம்பிக்கை, விழா பற்றிய நம்பிக்கை, வாழ்வியல் தொடர்பான நம்பிக்கைகள் எனப் பல நம்பிக்கைகள் இருக்கின்றன. இனிவரும் ஆய்வாளர்கள் மேற்கூறியவற்றை ஆய்வு செய்யலாம்.

மேற்கூறிய நம்பிக்கைகள் சிற்றூர்களிலும் நகரிலும் எவ்வாறு இருக்கின்றன என்று ஒப்பிட்டு எவ்வகை மக்களிடம் இந்நம்பிக்கைகள் மிகுதி; ஏன் அவர்களிடம் மிகுதியாக இருக்கின்றன என்ற ஆய்வினையும் மேற்கொள்ளலாம்.

பகுதி—II

இராகுகால பூசையும் நம்பிக்கையும்

இராகுகால பூசையும் நம்பிக்கையும்

முன்னுரை

மக்களின் ஆசைகள் மிகப் பல. முயன்று பெறுவன பல; முயன்றும் கிட்டாது போவன பல. தன் சக்தியால் பெறுவதற்கு இயலாது போயினும் இறையருளால் பெற முயற்சி செய்வோமே என்ற உந்துதலின் விளைவே பல்வகை வழிபாட்டு முறைகள்; பூசைகள்.

எவ்வளவு உறுதியான நெஞ்சம் படைத்தோரும் எண்ணியது முயன்றும் கிட்டாது போனால் மனவலிமை இல்லாதவராகி இறைவனருளை வேண்டுதற்கு இதயத்தில் இடம் கொடுக்கின்றனர். இறையருள் வேண்டும் பலவகை வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

'கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' எனும் விவிலிய மொழியும் 'வேண்டும் முழுதும் தருவோய் நீ' எனும் திருவாசகத் திருமொழியும் இவை போன்ற பிற மொழிகளும் மனிதரினத்தை வழிபடு முறைகளில், நாட்டம் கொள்ளச் செய்கின்றன.

இக் கட்டுரை முன்னுரை, முடிவுரை நீங்கலாக மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

'இராகு ஓர் அறிமுகம்' எனும் தலைப்பில் இராகுவைப் பற்றிய பல்வேறு சொற்பொருள் விளக்கங்களும், இராகுவைப் பற்றிய தோற்றம், புராண இலக்கியச் செய்திகள், வடிவம், குணம், செயல் முதலியவை பற்றிய செய்திகளும் தரப் பட்டுள்ளன.

'இராகுகால பூசையும் பூசைசெய்யும் முறையும்' எனும் இரண்டாவது தலைப்பில் இராகு காலம் பற்றிய விளக்கம், இராகுகால பூசையின் தோற்றக் கதை, தோன்றிய காலம்; பூசை நடைபெறும் கோவில்கள், ஒவ்வொரு கிழமையிலும் இராகுகால நேரம், நூல்களில் கூறப்பெற்றுள்ள பூசை செய்யும் முறை ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

'இராகுகால பூசையில் நம்பிக்கையின் நிலை' எனும் மூன்றாவது தலைப்பில் புதுவை வெங்கட்ட நகரில் உள்ள மகளிர் மேற்கொள்ளும் பூசை குறித்தும், கள ஆய்வில் பெற்ற செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் தருகின்றது. திட்டப் பணிக் கட்டுரையில் வடமொழிச் சொற்களும், மேற்கோளும் வந்தவாறே எடுத்தாளப்பட்டுள்ளன. இம்மூன்று இயலில் பெற்ற முடிவுகள், தொகுக்கப் பெற்று ஆய்வு முடிவுகளாகத் தரப்பட்டுள்ளன.

இராகு ஓர் அறிமுகம்

மனித வாழ்வில் முதன்மை பெறுவது திருவிழாக்கள், பூசைகள் போன்றவை. இவை மதத்திற்கு மதம் மாறுபடும் தன்மையன. தமிழர்களுடைய வாழ்வில் விழாக்களும், சிறப்பு நிகழ்ச்சிகளும் மிகுதியாக உள்ளன. அறிவியல் எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக வளர்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு விழாக்களும், இறை நம்பிக்கையும் மிகுதியாகக் காணப்படுகின்றன. வழிபடு முறைகளும் பூசைகளும் தனி மனிதனும் சமுதாயமும் பெற்றுள்ள தெளிவுக்கேற்பவும் ஆசைகளுக்கு ஏற்பவும் அமைகின்றன.

இவ்வழிபாடு பற்றிய தகவல்கள் சொற்பொருள் விளக்கம், வடிவ அமைப்பு, புராணங்களிலும், இலக்கியங் களிலும் இராகுவைப் பற்றிய செய்திகள், எனும் பகுப்புகளில் கூறப்பட்டுள்ளன.

இராகு-சொற்பொருள்:

இராகு பொதுவாகப் பாம்பு, அரவு, கரை, வரம்பு, உரகம், நாகம், என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. ஆனால் இராகு என்பதற்கு "கரும்பாம்பு, கோமேதகமணி"[1] என்ற பொருளும், "நவக்கிரகங்களுளொன்று"[2] என்ற பொருளும் உள்ளன. இராகு என்பதற்குக் கரும்பாம்பு, நவக்கிரகங்களுளொன்று என்பனவே இங்கு ஏற்பாக உள்ளன.

இராகுவின் தோற்றம்:

"கிரகபதமடைந்தவர்களில் ஒருவன் இவன். தந்தை விப்ரசித்தி; தாய் சிம்மிகை; தம்பி கேது. இவர்களிருவரும்

கர்பருக்குப் பேரன்மார். விஷ்ணுமூர்த்தி சகன்மோ கினியுருக்கொண்டு தேவர்களுக்கு அமுது பகுத்தளித்த காலத்தில் இராகு தேவவுருக்கொண்டு சூரிய சந்திரர் இருவருக்கும் இடையிலிருந்து வாங்கிப் புசித்தனன். இவ்விரு வரும் இராகுவை விட்டுணுமூர்த்திக்குக் குறிப்பித்தனர். மோகினியுருக்கொண்ட விட்டுணு இராகுவைத் தலையிற் சட்டுவத்தாலடித்தார். பிரிந்த சிரம் இராகுவென்றும், மற்ற தேகம் கேதுவென்றும் பெயருற்றுச் சூர்ய சந்திரர் தங்களைக் குறிப்பித்த காரணத்தால் அவர்களின் மேற்பகைமை கொண்டு தவவன்மையால் மறைப்பர் என்பர். இவர்கள் தவத்தால் கிரகபதமடைந்தனர். இவர்கள் விட்டுணுவையெண்ணித் தவமியற்றிக் கரும்பாம்பு செம்பாம்பின் உருவாயினர். இராகு கேதுக்கள் முறைப்படி கிரகங்கள் அல்ல. இந்துக்கள் இவற்றைச் சாயாக்கிரகம் என்பர். ஆயினும் இவை சூரியனை ஒருமுறை சுற்றிவர $18\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகின்றன என்பர்”[3]

தமிழ் இலக்கியத்தில் இராகு உருவானதைப் பின்வரும் பாடலில் அறியலாம்.

“மருந்து தேவர் அருந்திய மாலைவாய்
இருந்த தானவர் தம்மை இரவிமுன்
பெருந்தின் மாயற்கு உணர்த்திய பெற்றியின்
தெரிந்து காட்டினன், நம்பி சினத்தினான்”[4]

சைம்மிகேயன் என்னும் அசுரன் தேவவுருக்கொண்டு அமுதுண்டான். சூரிய, சந்திரர் அவனைத் திருமாலுக்குக் காட்டினர். இதன் விவைவால் அமுது பகிர்ந்தளித்த அகப்பையால் தாக்க அவன் தலைவேறு, உடல்வேறு ஆயினான் என்பதும் இறவாநிலை எய்தி இரண்டுடல் பெற்று இராகு, கேது ஆயினான் என்பதும் புராணம்.

இராகுவின் வடிவும் குணமும் செயலும்:

இராகுவின் வடிவு பற்றிப் பல கருததுக்கள் நிலவுகின்றன. இராகுவின் வடிவம் கரும்பாம்பு என்பதனை அகராதி தருகின்றது.

"இராகு மனிதத் தலையும் பாம்பு உடலும் கொண்டவன்; எனவே இவனைப் போக காரகன் என்றழைப்பர்"[5] என்றும்,

"இராகு பொதுவாகப் பெண் அமைப்பை உடையவர். இவர் கருமை நிறத்தவர் நீண்டு நெடியவர். இவர்குரூரமான குணம் படைத்தவர்"[6] என்றும்,

"ஐந்து தலையும் மனித உடலும் கொண்ட இக்கிரகம் அற்புதமான செயல்களை உருவாக்கிக் காட்டக் கூடியது"[7] என்றும்,

"திருநாகேசுவரத்தில் ராகு இரு தேவியருடன் உள் பிரகாரத்தில் தனிக்கோவில் கொண்டுள்ளார்"[8] என்றும், பலவகையான கருத்துக்கள் நிலவி வருகின்றன. இராகு வழிபாட்டிற்குச் சிறப்பிடமாகவும் முதலிடமாகவும் விளங்கும் திருநாகேசுவரர் ஆலயத்தில் இராகு மனித உருவம் கொண்டிருப்பது ஆய்விற்குரியது.

"இராகு நிழல் கிரகம்; எனவே உருவம் இதற்கு இல்லை. இருளை உமிழ்பவர். இருளாக இருப்பதால் அச்சத்தையும், நோயையும் துன்பத்தையும் விளைவிக்கும்"[9].

நவக்கிரகங்களில் இராகு கேதுக்களுக்கென்று தனித்து வீடில்லை; எந்த வீட்டில் இருக்கின்றனவோ அந்த

வீடுகளின் குணத்தைப் பாதிக்கும். இராகுவும், கேதுவும் சூரியனுடைய பாதையும் பூமியினுடைய பாதையும் வெட்டும் இடத்தில் இருக்கும் (Nodes) நிழற்கோள்களாகும். இவை இரண்டும் சூரியனைச் சுற்றும் பாதையில் எதிரெதிரே 180° பாதையில் உள்ள கற்பனைப் புள்ளிகள்.

"ராகு கேதுக்கள் வக்ரமாக வலம் வருபவர்; ஒரு ராசியில் இருந்து ஒரு ராசியை அடைய சுமார் 1 வருடம், 6 மாத காலம் ஆகும்—"[10]

மிகவும் கெடுதலைத் தரும் கெட்ட குணம் உடைய கிரகம் இராகு என்பது அனைவரின் கருத்துமாகும்.

இராகுவின் குணம், செயல் பற்றியும் வடிவமாற்றம் பற்றியும் பல கருத்துக்கள் நிலவினும், இராகுவின் குணம் மிகவும் தீமை தருவது என்பதனை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

இராகு பிற கோளுடன் சேர்வதால் ஏற்படும் நிலை:

"பன்னிரு ராசிகளில் நெருப்புத் தன்மை கொண்டவை, மண் தன்மை கொண்டவை; நீர்த்தன்மை கொண்டவை; காற்றுத்தன்மை கொண்டவை என்றுள்ளன.

மூன்று இராசிகள் மேலே கூறிய தன்மைகளில் ஒன்றின் தன்மையைப் பெற்றிருக்கும் என்றும் இதில் நெருப்புத் தன்மையுடன் சனி சேர்வதால் இராகு பாதிக்கும் என்றும், இதனைச் சோதிட நூல் மூலம் அறியலாம் என்றும் தெரிவித்தார்.

அ. குருவுடன் இராகு சேர்வதால் நல்ல பலன் விளையும்

ஆ. புதனுடன் இராகு சேர்வதால் நல்ல பலன் விளையும்

இ. சூரியனுடன் இராகு சேர்வதால் பாதிப்பு விளையும்

ஈ. சந்திரனுடன் இராகு சேர்வதால் பாதிப்பு விளையும்

உ. சனியுடன் இராகு சேர்வதால் பாதிப்பு விளையும்

எனத் தகவல்"[11] தெரிவித்தார்.

1.5. இராகுவைப் பற்றிய இலக்கியச் செய்திகள்:

தமிழிலக்கியத்தில் இராகு பற்றிய செய்திகள் வந்துள்ளன. இலக்கியங்களில் இராகு என்ற சொல் வந்திலது; அரவம், பாம்பு, கோள் எனும் சொற்கள் இராகுவைக் குறிக்கும் வகையில் வந்துள்ளன.

"—— —— —— ——
திங்கள் அரவுறின் தீர்க்கலாராயினும்
—— —— —— ——"[12]

திங்களை அரவு/பாம்பு சென்று மறைப்பதாக உவமை வந்துள்ளது.

"—— —— —— ——
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்
வையெயிற் றுய்ந்த மதியின் மறவர்
கையகத் துய்ந்த கன்றுடைப் பல்லான்
—— —— —— ——"[13]

என்று உவமையாக வந்துள்ளது.

"— — — — —
பனிசேர் விசும்பல் பான்மதி
கோள் விடுத்தானிடம்
— — — — ...."[14]

"வாள்வாயு மின்றிவடி வெங்கணை வாயுமின்றிக்
கோள்வாய் மதியநெடியான் விடுத்தாங் குமைந்தன்
தோள்வாய் சிலையினொலி யாற்றொறு மீட்கு
மீள்வான்
நாள்வாய் நிறைந்த நகைவெண்மதி செல்வதொத்
தான்"[15]

இராகுவின் வாய்ப்பட்ட சந்திரனைத் திருமால் மீட்டன ரென்பது சைனர்கள் கூறும் கதை.

"வேயுறு தோளி பங்கன்
விடமுண்ட கண்டன்
— — — — — — — — —
ஞாயிறு திங்கள் செவ்வாய்
புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே"[16]

பாம்பிரண்டும் என்று சம்பந்தர் குறிப்பது இராகு கேது என்பனவற்றையாம்.

"ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
— — — — — — — — — —"[17]

ஒரு பக்கம் பாம்பு (கிரகணம்) பற்றிக் கொண்டாலும் என்று வருகிறது.

"நாளென்செயும் வினைதான் என்செயுமெனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென்செயும் குமரேசரிரு..."[18]

நாள், வினை, கோள் இவை கேட்டினை விளைவிக்கும் என்ற நம்பிக்கை இருந்தமையை அறிய இயலுகின்றது.

இராகுவைப் பற்றிய ஒரு பழம்பாடல்:
"வாகுசேர் நெடுமால் முன்னம் வானவர்க்கு அமுதம்ஈய
ஏகினாநடு இருப்ப இருசிரம் அற்றுவீழ
பாகுசேர் மொழியாள் பங்கன் பரங்கையில் சிறமே பெற்ற
இராகுவே உனைத் துதித்தேன் இரட்சிப்பாய் இரட்சிப்பாயே"[19]

கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் சாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கணக் கொத்து எனும் நூலில்தான் "இராகு" எனும் சொல்லாட்சி முதன்முதலாக வந்துள்ளது என்று தி.வே. கோபாலையர் தெரிவித்தார்.

அடிக்குறிப்புகள்:

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. உ௨ க
2. Tamil Lexicon, Vol. I
3. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, பக். 177-178
4. ——கம்பராமாயணம், யுத்தகாண்டம், ஒற்றுக் கேள்விப் படலம், பா. 63

5. தகவ. திரு. ஆர். இராமையா, வயது 48, புதுவை, நாள் 02.03.90

6. ஸ்ரீதுர்க்கைச் சித்தர், பலன்தரும் ராகு காலபூசை, ப. 7

7. ஆரூர் செயராமதாசு, பௌர்ணமி இதழ், ப. 27

8. இரா. புவனேசுவரன், தாய், ப. 8

9. தகவ. பி. என். கோபாலகிருட்டிணன், வயது 50, புதுவை நாள் 21—03—90

10. விட்டலர்புரம் ராசன், நாகதோசமும் நிவர்த்தி பரிகாரமும், ப.9

11. தகவ. திரு. ஆர். இராமையா, வயது 48, புதுவை நாள் 02—03—90

12. கலித்தொகை, பா. 140

13. புறம், பா. 260

14. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பா. 454

15. சீவகசிந்தாமணி, பா. 454

16. திருஞானசம்பந்தர், கோளறு திருப்பதிகம், பா. 1

17. சுந்தரசண்முகனார், நாலடியார் நயவுரை, பா. 148

18. அருணகிரிநாதர், கந்தரலங்காரம், பா. 38

இராகு கால பூசையும், பூசை செய்யும் முறையும்

வழிபாடுகள் அனைத்தும் நம்பிக்கையின்பாற்பட்டவை. இந்நம்பிக்கைகள் மக்கள் வாழ்வை நெறிப்படுத்தவும், வளப் படுத்தவும் உதவுகின்றன. மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் இந்நம்பிக்கைகள் களைகின்றன. மக்களின் மனத்தில் மகிழ்ச்சியையும், நிறைவையும் விளைவிக்கின்றன. வழிபாட்டு முறைகள் புதுப்புது வகைகளில் தோனறிக் கொண்டேயிருக்கின்றன. மனிதனின் எதிர்பார்ப்புகளே பல புதிய வழிபாடுகள் தோன்றக் காரணமாக இருக்கின்றன. எதிர்பார்ப்பின் விளைவால் தோன்றியதே இராகு கால பூசையாகும்.

இராகு காலம் – விளக்கம்:

தொல்காப்பியர் நிலத்தையும், பொழுதையும் முதற் பொருள் எனப் பிரித்துக் கூறியிருக்கிறார். இப் பொழுதையும் நிலத்திற்கு ஏற்றாற் போலப் பெரும்பொழுது, சிறுபொழுது என மேலும் பிரிக்கிறார்.

ஒருநாளில் இராகு காலம், எமகண்டம், நல்ல நேரம், குளிகை என்று பிரிவினைகளைச் சோதிடர்கள் செய் துள்ளனர்.

ஒருநாளில் இராகு காலம் என்பது ஒன்றரை மணி நேரம் வரை இருக்கும். இந்த நேரத்தில் எந்தவிதமான நற்செயல் களையும் தொடங்குதல் கூடாது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் இருக்கிறது.

இராகுகால பூசைத் தோற்றம், கதை:

இராகுகால வழிபாட்டுமுறை அண்மைக் காலத்தில் தோன்றியது. எனவே இதற்கு இலக்கியச் சான்றுகள் காணல் இயலாது. ஆனால் இந்துப் பண்டிகையில் எந்தவொரு வழிபாட்டிற்கும் ஒரு கதை இருத்தல் மரபு. பலரை அணுகிக் கேட்டபொழுது இராகு கால பூசைக்குக் கதை இருப்பதாகத் தெரியவில்லை என்றனர். இராகுவிற்கும் இராகு காலத்திற்கும் தொடர்பில்லை என்றனர். ஆனால், இராகுவிற்கும் இராகுகாலத்திற்கும் தொடர்புள்ளது என்பதனைப் பின்வரும் கதை வெளிப்படுத்துகின்றது.

"ஒருசமயம் மகிசாசூரன் உள்ளிட்ட பல அரக்கர்கள் மும்மூர்த்திகளிடம் பெருந்தவம் புரிந்து பல வரங்களைப் பெற்று, பெற்ற வரங்களைக் கொண்டு தேவர்களையெல்லாம் துன்புறுத்தி அழிக்கவும் தலைப்பட்டனர். அதனால் தேவர்கள் அனைவரும் மும்மூர்த்திகளிடம் ஓடிவந்து முறையிட்டனர்.

பெற்ற வரங்களை வைத்துக் கொண்டு அசுரர்கள் ஆட்டம் போடுவதால் அவர்களை அழிப்பது எப்படி என்பதை முடிவெடுத்தனர். அதன்படி அவர்கள் இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகிய முச்சக்திகளையும் ஒன்றாக்கினர். அந்த மூன்று சக்திகளும் சேர்ந்து மகா துர்க்கையானாள்.

துர்க்கையாக மாறிய சக்தி அசுரர்களையெல்லாம் அழித்தாள். மகிசாசூரன் உள்ளிட்ட அசுரர்களையெல்லாம் அழித்தது கண்டு தேவர்கள் துர்க்கையைத் துதித்து மகிசாசூரமர்த்தினிப் பாடல்களைப் பாடினார்கள். இதனால்

துர்க்கை என்றாலே துன்பங்களை அழிப்பவள் என்ற பெயரும் ஏற்பட்டது. அசுரர்களை வதைத்துத் தேவர்களின் துன்பத்தைப் போக்கிய காலம் ராகு காலம். அதனால்தான் துர்க்கையை வழிபடும் சிறந்த நேரமாக ராகு காலத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்''[1]

இராகு கால பூசை தோன்றிய காலம்:

இராகு கால பூசை தோன்றிய காலத்தைப் பற்றி நிலவும் கருத்துகள் பல.

''இராகு கால பூசை இருபது, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியது''[2] என்றும்,

''பத்து பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு தோன்றியது இந்த வழிபாடு; இதனைத் தொடக்கி வைத்தவர் காஞ்சி சகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள்''[3] என்றும்,

''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அஷ்டகிரகங்கள் ஒன்று சேர்ந்த பொழுது மக்களுக்கு இக்கிரகங்களினால் வரும் துன்பம் விலக வேண்டுமெனில் இராகு கால பூசையைச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளினை விடுத்தார் சகத்குரு ஜெயந்திர சரசுவதி சுவாமிகள்''[4] என்றும்,

''கோளறு பதிகத்திலேயே பாம்பு தீமையை விளைவிக்கும் என்ற குறிப்பின் மூலம் இராகு கால வழிபாடு வந்திருக்கின்றது. ஆனால் இடைக் காலத்தில் சிறிது நாட்கள் மறைந்திருந்து இப்பொழுது ஒரு பன்னிரண்டு வருடமாக புகழ் பெற்றிருக்கிறது''[5] என்றும் பலவிதமாகக் கூறப்படுகின்றது.

"பிப்ரவரி 16, 1980 ..... கிரகணம் ஏற்பட்டது .... சகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் எல்லா இந்து மக்களையும் கிரகணத்தின் போது தானம் செய்யும் பொருளுடன் வரும் படிக் கூறினார் — சில பகுதிகளில் மக்கள் பூசாரிகளுக்கும், பிராமணர்களுக்கும், பாம்புகளுக்கும் பரிசு வழங்கினர். ஒரு சமயம் கிரகணத்தின் போது இராகுவுக்குத் தியாகம் செய்வதற்காக இந்திரன் இரண்டு பாம்புகளைக் கொண்டு வந்ததாகப் புராணம் கூறுகிறது. தங்கத்தாலும், வெள்ளியாலும் செய்த பாம்புகளைப் பரிசளிப்பதும் உண்டு"[6].

கிரகணத்தின்போது தோன்றிய வழிபாடே பின்நாளில் இராகு கால பூசையாகத் தோன்றுவதற்கும் வாய்ப்பாக இருந்திருக்காலம்.

இப்பூசையின் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் இருப்பதினால் தெளிவான முடிவிற்கு வர இயலவில்லை.

"இந்த இராகுகால பூசை என்பதைத் தொழில்முறைச் சோதிடர்களே செய்யச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் படித்த சோதிடர்கள் செய்யச் சொல்வதில்லை"[7] என்று கூறப்படுகின்றது.

குருக்களும், சோதிடருமாக உள்ள தகவலாளர் ஒருவர் தாமும் திருமணக் காலத்தாழ்வுக்கு ஆளாகும் அனைவரையும் இராகு காலத்தில் பூசை செய்ய வேண்டும் என்று சொல்வதாக் கூறினார்"[8]

இராகுகால பூசை நடைபெறும் கோவில்கள்:

சிவன் கோயில்களின் திருச்சுற்றின் இடப்பகுதியில் துர்க்கைக் கருவறை இருக்கும். துர்க்கைக்குத்தான் இராகு கால பூசை நிகழும். வைணவக் கோயில்களில் வைணவத் துர்க்கை இருக்கிறது. அங்கு இந்த இராகு கால பூசை நிகழாது.

"சைவக் கோயில்களில் முன்பு சிவன் கோயிலில் மட்டுமே துர்க்கை இருந்தது. இன்று அங்காளம்மன், விநாயகர், முருகர் போன்ற கோவில்களிலும் இருக்கின்றது. ஆகம விதிப்படி விநாயகர் கோவிலில் துர்க்கையை வைக்க மாட்டார்கள்; ஆனால் இக்காலத்தில் விநாயகர் கோவில் களிலும் துர்க்கையின் கருவறையை அமைக்கிறார்கள்"[9]

கிழமைகளும் இராகுகால நேரங்களும்:

ஒருவாரத்தில் உள்ள ஏழுநாள்களிலும் இராகுகாலம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நேரத்தைப் பஞ்சாங்கங்கள் கணிக்கின்றன. அதனையே மக்களும் பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு நாளும் சூரியன் எப்பொழுது உதயமாகிறதோ அந்த நேரத்தை வைத்தே இராகுகாலம் கணிக்க வேண்டும்"[10] என்றும், இராகு காலத்தில் பயணம் மட்டுமே செல்லுதல் கூடாது என்றும், இதனைத் தவறாகப் புரிந்து கொண்டு மக்கள் இந்த நேரத்தில் எந்த நல்ல செயலையும் செய்தல் கூடாது என்ற எண்ணம் வளர்ந்தது என்றும் தகவலாளர் தெரிவித்தார்.

இராகுகால நேரங்கள் பின்வருமாறு:

	கிழமை	பொழுது	நேரங்கள்
1.	ஞாயிறு	மாலை	4–30 மணி முதல் 6–மணி வரை
2.	திங்கள்	காலை	7–30 மணி முதல் 9–மணி வரை
3.	செவ்வாய்	மதியம்	3–00 மணி முதல் 4-30 மணி வரை
4.	புதன்	நண்பகல்	12–00 மணி முதல் 1–30 மணி வரை
5.	வியாழன்	மதியம்	1–30 மணி முதல் 3–மணி வரை
6.	வெள்ளி	காலை	10-30 மணி முதல் 12–மணி வரை
7.	சனி	காலை	9–00 மணி முதல் 10-30 மணி வரை

மிகவும் சிறப்பான இராகுகால பூசைக்குரிய நாள் செவ்வாய்; ஏனெனில்,

"செவ்வாய்க் கிழமையன்று வரும் ராகு காலத்தில் செய்யப்படும் துர்க்கை பூசைக்கு உடனடிப் பலன் கிடைப்பதைச் சித்தர்களும், உபாசகர்களும் அனுபவ பூர்வமாகக் கண்டறிந்துள்ளனர். ஏனெனில் செவ்வாய்க் கிழமைக்குரிய அங்காரகன் துர்க்கையை மங்கள சண்டிகையாக வழிபட்டுப் பலனடைந்தவனாவான்"[11] என்றும்,

—நவக்கிரகங்களில் மிகவும் வலிமை பொருந்திய ராகு பகவான் மங்கள வார ராகு காலத்தில் துர்க்கையைப் பூசித்து மகிழ்ச்சியான முகத்துடனும் நிறைந்த மனதுடனும் விளங்குவதால்தான் மங்களவார ராகு காலத்தில் துர்கையைப் பூசை செய்ய வேண்டுமென்று சித்தர்கள் சொல்கிறார்கள்"[12] என்றும்,

இராகு துர்க்கையை வணங்கி மகிழ்ந்ததனாலேயே இன்று இராகுவின் பெயரில் துர்க்கையை மகிழ்வித்தால் இராகு மகிழ்வான் என்ற நம்பிக்கையில் துர்க்கைக் கருவறையில் இராகு கால பூசை நிகழ்வதாகக் கொள்ளலாம் என்றும்,

"செவ்வாய், வெள்ளி இவையிரண்டும் மகளிருக்கு மங்களகரமான நாள்"[13] என்றும் குருக்கள் தெரிவித்தார்.

இராகு கால பூசை செய்யும் முறை:

பூசை என்பது வழிபடும் முறையாகும். இராகுகால பூசை செய்யும் முறை பற்றிய செய்திகள் வருமாறு:

"வீட்டினிலே செய்பவர்கள் எந்திரத்தையோ**.அல்லது படத்தையோ ஒரு தூய்மையான இடத்தில் வைத்து ராகு கால வேளைக்குச் சற்று முன்பாகக் குளித்து ஆசாரத்துடன் பூசையைச் செய்ய வேண்டும். வீட்டினில் செய்தாலும், ஆலயத்தில் செய்தாலும் நல்ல முறையில் இருக்கும். (காயாகவும் இல்லாமல் அதிகமாகப் பழுத்தும் இல்லாமல்) ஐந்து எலுமிச்சம்பழத்தை இரண்டிரண்டாகத் துண்டாக்கிக் கொள்ள வேண்டும். பத்துத் துண்டில் ஒரு துண்டைத் தனியே எடுத்து வைத்து மற்ற ஒன்பது துண்டுகளையும் சாறு போகப் பிழிய வேண்டும். (பூசை முடிந்தவுடன் சாற்றைப் பானமாக ஆக்கிக் குடிக்கலாம்) பிழிந்த மூடிகளை உள்பக்கம் வெளிப்புறம் வருமாறு திருப்பி, குழிவாய் இருக்கும் மஞ்சள் பகுதியில் நெய், எள் எண்ணெய் தேங்காய் எண்ணெய் ஆகிய மூன்றையுமோ அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றையோ ஊற்றித் திரியிட்டு விளக்கேற்ற வேண்டும். எந்திரம் அல்லது படத்தை மலர்களால் அலங்கரித்து நமது பிராத்தனையைத் துர்க்கையிடம் சமர்ப்பித்துப் பூசையை ஆரம்பிக்க வேண்டும்.

—அஷ்டோத்தரத்தால் அர்ச்சித்து ஸ்தோத்ரம் கவசம், போன்ற அனைத்தையும் பாராயணம் செய்து பாடல்களைப் பாட வேண்டும். துர்க்கைதேவிக்கு அவல் பாயாசத்தையோ அல்லது அவரவர்கள் சக்திக்கேற்ப உளுந்துவடை, பழவகைகள், சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றையோ நிவேதனமாகப் படைக்கவேண்டும்"[14]

எந்தத் தகவலாளரும் மேற்குறித்த பூசை முறையினை மேற்கொள்ளவில்லை.

இராகுகால பூசை வகைகள், பயன்கள்:

இராகுகால பூசை என்பது ஒரே வகைதான் என்று பூசை செய்து வரும் தகவலாளர்கள் கருதுகிறார்கள். பூசைக்குச் செல்வோர் பூசை வகைகளைப் பற்றித் தெரிந்திலர். பூசைக்கு என்று உள்ள புத்தகங்களைப் பற்றி அவர்கள் ஏதும் அறிந்திலர். வழிவழிக் கேட்டதைச் செய்வதாக அனைத்துத் தகவலாளரும் தெரிவித்தனர்.

“இராகு பூசைக்கென்று சில சங்கல்பங்கள் (உறுதிப்பாடுகள்) செய்து பக்தர்கள்குறையை நீக்கலாம் என்றும்,

அவை,

1. திருமணத் தடையை நீக்குதல்
2. வழக்குகளில் வெற்றி பெறுதல்
3. குடும்பச் சிக்கல்களை நீக்கல்

என்றும் அனைத்திற்கும் தனித்தனி மந்திரங்கள் இருக்கின்றன என்றும் கூறியவர் மந்திரங்களைச் சொல்ல மறுத்து விட்டார்”[15]

‘பலன்தரும் இராகுகால பூசை’ எனும் நூலில் பூசை வகைகள் கூறப்பட்டுள்ளன.

வகைகள்	பயன்கள்
1. இராகுகால அஷ்டமி பூசை	குறைவற்ற வாழ்வைப் பெறுதல்
2. இராகுகால மங்கலவார பூசை (செவ்வாய்)	திருமணத் தடங்கல் நீக்கப் பெறுதல்

3.	சுக்கிரவார பூசை (வெள்ளி)	நல்ல புகழ்த் தருதல், எதிர் பார்ப்பில் வெற்றி கூடுதல்
4.	மாங்கல்ய பல ராகு பூசை (வெள்ளிக் கிழமை)	திருமண நாளின் பலம் கூடுதல்
5.	சிவாஸ்தான இராகுகால சாந்தி பூசை (திங்கட் கிழமையில் மட்டும் செய்ய வேண்டும்)	சுபகாரியத் தடங்கல் மனோ வியாகூலம், சிவதோசம், சாபம் முதலியவை நீங்கல்
6.	சர்ப்பதோச நிவாரண பூசை.	பாம்புதோசம் நீங்கல்
7.	வியாபார இலாப இராகு கால பூசை	வியாபாரத் துவக்கத்தில் செய்யப் படுதல்"[16]

இராகுகால பூசையில் தானங்கள்:

மக்கள் கொண்டாடும் விழா, செய்யும் பூசை, நேர்ன்பு இவற்றின் நோக்கம்; வறியவர்க்கு உணவு, உடை, போன்றவற்றைத் தந்து மகிழ்விப்பதே ஆகும். அதனடிப் படையிலேயே இராகுகால பூசையிலும் தானங்கள் வழங்கப் படவேண்டும் என்ற குறிப்புகள் உள்ளன.

"1. முழுச்செம்பு நிறைய பசுவின் பால்தானம் செய்ய லாம்
2. முழு உளுந்தும் தானத்திற்கு ஏற்ற பொருள்
3. கருப்பு மொச்சை, தர்ப்பாசனம் இவைகளைத் தானம் செய்யலாம்.
4. தேங்காய் மூடி, தனது வயதின் அளவு தட்சணை, பானகம், தேன், வஸ்திரம் ஆகிய ஐந்து பொருட் களையும் தானம் செய்யலாம்.

5. ——பல வண்ணத்துணி, கொள்ளு, உளுந்து இவைகளைத் தானம் தரலாம்"[17]

வசதி இருப்பவர்கள் தானம் செய்யலாம்; இல்லாதவர்கள் துர்க்கையை மனதால் நினைத்தாலே போதும். ஆனால் இன்றைய நிலையில் பெரும்பான்மையோர் தானங்கள் ஒன்றும் செய்யாமல் கோவிலுக்கு மட்டும் சென்று வருகின்றனர்.

அடிக்குறிப்புகள்:

1. அம்மன்சத்தியநாதன், ஸ்ரீதுர்காதேவிஸ்தோத்திர மாலை, பக். 5-6
2. தகவ. திரு. ஆர். இராமையா, வயது 48, புதுவை, நாள்: 02—03—90
3. தகவ. திரு. பி. என். கோபாலகிருட்டிணன், வயது 50, புதுவை, நாள்: 09—03—90
4. தகவ. திரு. டி. எஸ். தியாகராச குருக்கள், வயது 48, புதுவை, நாள்: 15—03—90
5. தகவ. திரு. கே. சாமிநாத குருக்கள், வயது 57, முத்தியால்பேட்டை, நாள்: 19—03—90
6. விதாலி ஃபுரினீக்சா, பிறப்பு முதல் இறப்பு வரை, பக். 127-130
7. தகவ. திரு. ஆர். இராமையா, வயது 48, புதுவை, நாள்: 02—03—90
8. தகவ. திரு. கே. சாமிநாத குருக்கள், வயது 57, முத்தியால்பேட்டை, நாள்: 19—03—90

9. தகவ. திரு. ஆர். இராமையா, வயது 48, புதுவை, நாள்: 02—03—90

10. தகவ. திரு. மேலவர்

11. ஸ்ரீதுர்க்கைச் சித்தர், பலன்தரும் இராகுகால பூசை, ப. 31

12. மேலது.

13. தகவ. திரு. டி.எஸ். தியாகராச குருக்கள், வயது 48, புதுவை, நாள்: 15—03—90
**மந்திரச் சொற்களும் சக்கரமும் வரையப்பட்டுள்ள செப்புத்தகடு

14. அம்மன் சத்தியநாதன், ஸ்ரீதுர்கா தேவிஸ்தோத்திர மாலை, பக். 6-7

15. தகவ. திரு.டி.எஸ். தியாகராச குருக்கள், வயது 48, புதுவை, நாள்: 15—03—90

16. ஸ்ரீதுர்க்கைச் சித்தர், பலன்தரும் இராகுகால பூசை, பக். 12-29

17. மேலது, ப.25

இராகுகால பூசையில் நம்பிக்கை
(கள ஆய்வுச் செய்திகள்)

மிகவும் புனிதமும், போற்றத்தக்கதுமாகிய பூசைகள் மனிதனுக்குத் தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் தரவல்லன. எந்தப் பூசைக்கும், இலக்கியங்களும், புராணங்களும் ஆதாரமாக உள்ளன என்பர். மக்கள் மத்தியில் இராகு கால பூசை பெற்றுள்ள இடத்தினையும், மக்களின் மனநிலையினையும் அறிய முற்படுகிறது இப்பகுதி.

பக்திக்குப் பெண்கள் முதன்மை தருகின்றனர். துன்பங்கள் நீங்க இவர்கள் இறைவனையே நம்புகின்றனர். இன்றும், திருமணத்திற்கு முன் தந்தையின் அரவணைப்பிலும் பிறகு கணவனின் பாதுகாப்பிலும் உள்ளனர். அண்மைக் காலத்தில் தோன்றியது என்று கூறப்படும் இராகுகால பூசையைச் செய்து கொண்டிருக்கும் அவர்கள் போக்கு, மனநிலை, நம்பிக்கை முதலியவைகளை அறிதல் நலம். எனவே, புதுவை வெங்கட்ட நகர்ப் பகுதியில் பூசைக்குச் செல்வோர் கள ஆய்விற்குரிய அடிப்படையாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

வயது :

இருபத்தைந்து வயதிலிருந்து அறுபத்தாறு வயது வரை உள்ள மகளிரே இக்கள ஆய்விற்குத் தகவலாளர்களாக அமைந்துள்ளனர். தகவலாளருள் திருமணமானோர் 96 விழுக்காடு. திருமணமாகாதோர் 4 விழுக்காடு.

சாதி:

இராகுகால பூசை செய்பவர்களில் பெரும்பாலோர் ஐயர் சமூகத்தினரே.

இவர்கள் சாதியில்லை என்றவர்களும் மனிதசாதி என்று குறித்தவர்களும், 'நாம் சாதியை ஒழிக்கப் புறப்பட்டால் தான் அரசு விழிக்கும்; நீங்களும் இனிமேல் சாதியைப் பற்றிக் கேட்காதீர்கள்' என்றனர்.

கல்வி நிலை:

இங்கு உயர்கல்வி பெற்றவர்கள் மிகுதியாக இருப்பதால், குறைவாகப் படித்தவர்கள் தங்கள் படிப்பை வெளியே கூற நாணுகின்றனர். சிலர் எவ்வளவு கேட்டும் தங்கள் கல்வியைக் கூற விரும்பவில்லை.

தொழில்:

ஆடவரும், மகளிரும் உழைத்தால்தான் இன்றைய தேவைகளைப் பெற்று வாழ்க்கை நடத்த இயலும் என்பதை இருபாலரும் அறிந்திருக்கிறார்கள். கிடைத்த தகவலில் வேலைக்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்குக் காரணம், இராகுகால நேரத்தில் அவர்கள் வேலைக்குச் செல்ல நேர்வதே. வேலைக்குச் செல்வோரிலும் ஒரு சிலருக்கே இப்பூசை செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்பதனைப் புள்ளி விவரம் காட்டுகின்றது.

இராகு, இராகுகாலம்:

இராகு கால பூசை செய்பவர்களுக்கு இராகு காலத்தின் சிறப்பு தெரிந்திருக்கும் அளவிற்கு இராகுவைப்பற்றித் தெரியவில்லை.

தெய்வம்:

இராகுகால பூசைக்குரிய தெய்வம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. வெங்கட்ட நகரில் உள்ளவர்கள் அதனைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதனை அறியவும், எத்தெய்வம் முதன்மை பெறுகிறது என்பதை அறியவும், செய்த முயற்சியில் துர்க்கையே முதன்மையினை வகிக்கின்றது என்பது பெறப்பட்டது.

திருநாகேசுவரத்தில் இராகுவிற்குப் பூசை செய்யப்படுகின்றது; ஆனால் புதுவையில் இராகு காலத்தில் துர்க்கைக்குத் தான் வழிபாடு நடைபெறுகிறது. அவ்வாறு இருக்கையில் நாகேந்திரன், ஆஞ்சநேயர் என்று கூறியவர்கள் ஏன் கூறினார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பூசை நாள்:

ஏழுநாள்களிலும் இராகு காலப்பகுதி இருக்கிறது என்றாலும் சிறப்பாகச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் மிகுதியானவர்கள் வருகிறார்கள். தகவலாளருக்கு ஏன் இந்த இரண்டு நாள்களிலும் செல்கிறார்கள் என்பது பற்றிய காரணம் தெரியவில்லை.

பூசையில் பங்கு பெறுபவர்கள்:

மங்கல வினைகளில் மங்கல மகளிர்க்கே முதலிடமும் சிறப்பிடமும் தருதல் நம் சமுதாயத்தின் இயல்பாக இருந்து வந்துள்ளது. மங்கல வினைகளில் இரண்டு, மூன்று, நான்காம் நிலைகளில் முறையே சிறுவர், முதியவர், ஆண்கள் பங்கு கொண்டனர்.

மங்கல வினைகளில் அமங்கல மகளிர் இடம்பெறல் இல்லை. ஆயினும் இப்பூசையில் அமங்கல மகளிரும் (விதவை) பங்கு கொள்ளுதலை ஆய்வில் அறிய முடிந்தது.

கோவிலில் குருக்களை அணுகிக் கேட்டபொழுது அவர் கூறியது.

“தாமே பூசையில் பங்குபெற இயலாத நேரங்களில் அவர்கள் சார்பாக வேறொருவர் செய்யலாம். அந்த வகையில் அமங்கலி செய்கிறார்”

அமங்கல மகளிரை அணுகிக் கேட்டபொழுது, மகளின் திருமண நிகழ்விற்காகச் செய்கிறேன். அவள் வேலைக்குச் செல்வதால் தான்வந்து செய்வதாகக் கூறினார்.

குருக்கள் கூற்றும், அமங்கல மகளிர் கூற்றும் தத்தம் செயல்களுக்கு அமைதி கூறுவதாகவே தெரிகிறது. சமுதாய மனமாற்றத்தைத் தெரிவிப்பதாகவே தெரிந்திலது.

மங்கல–அமங்கல மகளிர் பற்றி வழிவழி வந்துள்ள சமுதாய நம்பிக்கையை ஒப்புதல் போன்றே தோன்றுகிறது.

இப்பூசையை ஆடவர்களும் செய்கின்றனர் எனும் தகவல் கோயில் குருக்கள் வாயிலாகக் கிடைத்தது; ஆனால் அவர்களை நேர்காணும் வாய்ப்புக் கிட்டிலது. பூசைக்கு வரும் ஆண்கள் அர்ச்சனை மட்டும் செய்துவிட்டுச் செல்கின்றனர்; எலுமிச்சை விளக்கு ஏற்றுவதில்லை என்ற தகவலைத் தந்தார் குருக்கள்.

பூசை செய்வதால் எதிர்பார்க்கப்படும் பயன்கள்

எந்தவொரு வழிபாடும் இன்று பலன் கருதியே செய்யப்படுகிறது. இராகுகால பூசையும் அதற்கு விதிவிலக்கன்று.

இராகுகால பூசையில் மிகுதியான இடத்தை வகிப்பது குடும்ப நலன் 68% ஆனால் இராகுகால பூசை செய்தால் திருமணம் நடக்கும் என்றும், அதற்காகவே இராகுகால பூசையைத் தொடங்கினர் என்றும் கூறப்படும் கருத்து, இங்குள்ள புள்ளி விவரத்தைப் பார்க்கையில் ஏற்பாக இல்லை.

இராகுகால பூசை செய்தல்:

இப்பூசையை வீட்டில் செய்யலாம் என்று இருந்தாலும் தகவலாளர்கள் அனைவரும் கோவிலிலேயே செய்கின்றனர். கோவிலுக்குச் சென்று குருக்களிடம் தாங்கள் கொண்டு வந்த தேங்காய், பழம், பூ, கற்பூரம், வெற்றிலைப்பாக்கு குங்குமம் முதலியவற்றைக் கொடுத்துவிட்டுத் தாங்கள் கொண்டு வந்த எலுமிச்சம்பழத்தை இரண்டாகப் பிளந்து அவற்றைச் சாறு போகப் பிழிந்து விடுகிறார்கள். ஒரு சிலர் வீட்டில் சாற்றினைப் பிழிந்து வைத்துவிட்டு எலுமிச்சம் தோலினை மட்டும் எடுத்து வருகிறார்கள். பூசை முறைப் படி ஒன்பது விளக்கு ஏற்றுவதில்லை. அவரவர் வசதிக்கேற்ப நான்கு, மூன்று, இரண்டு பழங்களில் விளக்கேற்றுகிறார்கள். பிழிந்த எலுமிச்சம் பழத்தின் வெளிப்புறம் உட்புறமாகத் திருப்பி அதில் நல்லெண்ணெய் அல்லது நெய்யை ஊற்றித் திரியிட்டு விளக்கேற்றிய பிறகு துர்க்கையிடம் வந்து சிலர் அம்மன் பெயருக்கே அர்ச்சனை செய்யச் சொல்கிறார்கள். சிலர் தங்களின் கோத்திரம், பெயர், நட்சத்திரம் போன்ற வற்றைக் கூறி அர்ச்சனை செய்யச் சொல்கின்றனர். தனித் தனியாகவும் சில சமயங்களில் கூட்டாகவும் அர்ச்சனை நடைபெறுகிறது என்றனர்.

எலுமிச்சம்பழத்தில் விளக்கேற்றுதல்:

இராகுகால பூசையில் சிறப்பிடம் பெறுவது எலுமிச்சம் பழ விளக்கேற்றுதல். இதன் காரணம் கேட்டதற்குத் தெரிய வில்லை என்று சொன்னவர் மிகுதி. ஓரிருவர் மட்டுமே காரணம் கூறினர்.

1. சிறு தெய்வ வழிபாட்டில் பலியிடுதல் நிகழ்ச்சி நடை பெறுகிறது; அதுபோல எலுமிச்சம்பழம் இங்குக் காவு கொடுக்கப்படுகின்றது என்றனர்.

2. சிலர் எலுமிச்சம்பழத்தைச் சாறுபோகப்பிழிவதால் தங்களுக்கு வரும் துன்பங்களும் பிழிந்த சாறுபோலச் சென்று விடும் என்று நம்புகின்றனர்.

3. எலுமிச்சம்பழ விளக்கேற்றும் பழக்கம் இல்லை என்று கூறியவர்களும் உண்டு.

சாமிநாத குருக்கள் என்பார், "எலுமிச்சம்பழத்தில் தான் ஏற்ற வேண்டுமென்பதில்லை. புதிய அகலிலும் விளக் கேற்றலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் புதுப்புது அகலில் ஏற்றவேண்டும்" என்றார். ஆனால் தகவலாளரிகளில் ஒருவர் கூட அகல்விளக்கு ஏற்றவில்லை.

விளக்கேற்றும் பழக்கம் இல்லை என்போரி அர்ச்சனை மட்டும் செய்கிறார்கள்.

பூசை தொடர்பான புத்தகம் படிக்கும் பழக்கம்:

பூசையில் மனத்தை ஒருமுகப்படுத்துவதற்குப் பூசை தொடர்பான புத்தகங்கள் படித்தல் அல்லது மனனம் செய்து சொல்லுதல் இன்றியமையாதது. பூசைக்குச் செல்

வோரில் பெரும்பாலோர், வீட்டிலும் சரி, கோவிலிலும் சரி, பூசைத் தொடர்பான புத்தகங்கள் (தோத்திரப் பாடல்கள்) படிப்பதில்லை என்பதிலிருந்து அவர்களின் பக்தியும் நம்பிக் கையும் தெளிவாகின்றன.

செல்லும் கோவில்:

மக்கள் தங்கள் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்றவாறு அருகிலோ, தொலைவிலோ உள்ள கோவிலுக்குப் பூசைக்குச் செல்லும் பழக்கத்தைப் பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. வழிபாட்டு நெறிமுறைகளைச் சிறிதும் வழுவாது –பிறழாது செய்யும் போக்கு மாறியுள்ள நிலைமையையும் அறிய முடிகின்றது.

தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு:

பூசை செய்வதற்குரிய வரையறுக்கப்பட்ட நெறிமுறைகள் உள்ளன. ஆனால் இராகுகால பூசைக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லை என்றவரே மிகுதி. வேண்டுதல் நிறை வேறிய பிறகும் பூசையைத் தொடர்வோம் என்று சொன்ன வர்கள் மிகுதி; ஏனெனில் அடுத்த வேண்டுகோள் தயாராக இருக்கும் என்றனர்.

இப்பூசைக்கென்று சிறப்பு விரதம், உணவு வகை உண்டு எனக் கூறியவர் எவருமிலர். ஆனால் பூசை முறையில் விரதமும் உணவு வகைகளும் உண்டு என்கிறார்கள்.

இராகுகால பூசையில் சிறப்பிடம் பெறும் தெய்வம் துர்க் கையே என அனைவரும் கூறினர்.

பிற செய்திகள்:

இராகுகாலம் தொடங்குவதிலிருந்து முடியும் வரை பூசைக் காலத்தில் கோயிலில் இருக்க வேண்டும் என்னும் முறையை எத்தகவலாளரும் நிறைவேற்றிலர்.

பூசை செய்யும் குருக்களுக்குத் தட்சணை அவரவர் விரும்பியவாறு தரலாம் என்றனர் அனைவரும்.

அம்மனுக்குச் சிகப்பு நிறப்பூவும், குங்குமமும் மிகவும் உகந்தவை என்ற கருத்தைத் தெரிவித்தனர். துர்க்கைக்குச் சிகப்பு நிறம் முதன்மை பெறுவதற்குக் காரணம் யாது? என்று பூசைக்குச் செல்லும் எவரும் அறிந்துள்ளதாகத் தெரிவித்திலர்.

சிகப்பு உயிர்ப்புச் சக்தியைக் குறிக்கும் குறியீடாக ஆய்வாளர் கருதுகிறார். எனவே. அம்மனுக்குச் சிகப்பு நிறப்பூ, குங்குமம் முதலியவை முதலிடம் பெறுகின்றன.

நிறைவுரை

இவ்வாய்வு வழிக்கண்ட முடிவுகள்

1. இராகுவைக் குறித்தற்குத் தமிழ் இலக்கியத்தில் பல சொற்கள் பயின்று வந்துள்ளன.
2. திருமாலின் அகப்பையினால் அடிவாங்கி ஈருடலாகிய அசுரனின் ஒருடலே பாம்புருவாகிய இராகு.
3. இராகுவின் உருவினைப் பற்றிய தெளிவான கருத்தை அறிய இயலவில்லை.
4. சைனர்கள் கதையில் இராகுவின் பிறப்பு பேசப் பட்டிருக்கிறது.
5. இலக்கியங்களில் உவமையாகக் கையாளப்பட்டிருக் கிறது.
6. 17-ஆம் நூற்றாண்டில்தான் இராகு என்ற சொல் பயின்று வந்துள்ளது.

7. இராகு என்றாலே ஒருவகை அச்சத்தை மக்கள் நடுவில் பரப்பின இலக்கியங்களும், புராணங்களும். இது இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

8. இராகுவிற்கும், இராகு காலத்திற்கும் தொடர்பிருக்கிறது.

9. அசுரர்கள் அழிந்த காலமே இராகு காலம்.

10. பூசை முறைகளைக்கூடப் பூசை செய்பவர்கள் அறிந்திலர்.

11. இராகு துர்க்கையை வழிபட்டதன் விளைவாகவே இன்று இராகுகால பூசை துர்க்கைக்கு நிகழ்கின்றது.

12. இராகுகால பூசையின் தோற்றம் பற்றிக் கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன.

13. பூசை செய்பவர்கள் கூட வகைகளையும் பயன்களையும் அறிந்திலர்.

14. வீட்டிலும், கோவில்களிலும் இப்பூசையைச் செய்யலாம். ஆனால் பெரும்பாலும் கோவில்களிலேயே பூசை நிகழ்கிறது.

15. பூசைக்கென்று விரதங்கள் சிறப்பு உணவு வகைகள் இருந்தாலும் அவைகளை எவரும் கடைப்படிப்ப தில்லை.

16. பூசை தொடர்பான புத்தகங்கள், தானங்கள் இருந் தாலும் எவரும் கடைபிடிப்பதில்லை.

17. வசதியுள்ளவர்கள் மட்டும் இப்பூசையைச் செய்கிறார் கள்.

18. இராகு கால பூசையில் சிறப்பிடம் பெறும் தெய்வம் துர்க்கை என்று கூறியோர் நூறு விழுக்காட்டினர். ஆனால் ஆஞ்சநேயர் நாகேந்திரருக்கு ஏன் இராகு காலத்தில் பூசை செய்கிறார்கள் என்பது தெரியவில்லை.

19. திருமணமாகாதவருக்கு இராகு காலத்தில் பூசை செய்தால் திருமணம் நிகழும் என்ற நம்பிக்கையில் ஏற்பட்ட இப்பூசை, இன்று பல்வேறு துன்பங்களைப் போக்கும் என்ற நம்பிக்கையைத் தருவதைக் கள ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே, நம்பிக்கை என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தமைவது என்பது தெளிவு.

20. ஆடவர், மகளிர், இளையோர், முதியோர், அமங்கல மகளிர் போன்றோர் பூசையில் கலந்து கொள்கின்றனர்.

21. இப்பூசைக்கென்று எலுமிச்சம்பழம் விளக்கேற்றுகின்றனர். எலுமிச்சைக்குத் துன்பத்தைப் போக்கும் ஆற்றல் உள்ளது என்ற நம்பிக்கை அடிப்படையாயுள்ளது.

22. பூசைகள் தன்னலக்காப்புணர்வை மிகுதியாக வளர்க்கின்றன.

23. 'நன்மை வந்தெய்தும்; தீதெலாம் நலியும்' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மக்களிடம் இராகு கால பூசை வேரூன்றிக் கொண்டு வரும் போக்கை அறிய முடிகின்றது.

துணைநூற் பட்டியல் - 1

தமிழர் பண்பாட்டில் நம்பிக்கைகள்

1. அகராதிகள்

அய்யன்பெருமாள் கோனார் : **கோனார் தமிழ்க்கையகராதி**,
பழனியப்பா பிரதர்ஸ், சென்னை
முதற் பதிப்பு, டிசம்பர், 1955.

பவானந்தம்பிள்ளை திவான் பகதூர். ச., : **தற்கால தமிழ்ச்சொல்லகராதி**
மதராஸ் மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட்.,
மறுபதிப்பு, 1952.

கழகப் புலவர்குழு, : **கழகத்தமிழ் அகராதி**
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
சென்னை-600 001
பதிப்பு, 1980.

தொகுப்பு : **மதுரைத்தமிழ்ப் பேரகராதி**,
இ.மா. கோபாலகிருஷ்ணன் கோன் வெளியிட்டது
வெளியீடு, 1937.

——————— : **மணிமேகலைத் தமிழ் அகராதி**,
மணிமேகலைப்பிரசுரம்
சென்னை – 600 017
முதற்பதிப்பு, ஜனவரி 1979.

2. இலக்கிய நூல்கள்:

சாமிநாதையர், உ.வே., (குறிப்புரை)	: பதிற்றுப் பத்து மூலமும் பழைய உரையும், சென்னை. நான்காம் பதிப்பு, 1945.
சாமிநாதையர், உ.வே.,	: புறநானூறு மூலமும் உரையும், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1935.
சாமிநாதையர், உ.வே.,	: ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், ஸ்ரீ தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1957.
————————	: குறுந்தொகை, ஸ்ரீ தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு-1962.
————————	: மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், ஆறாம் பதிப்பு, 1965.
நாராயணசாமி அய்யர், அ.,(உரை)	: நற்றிணை சைவ வித்தியானு பாலயந்திர சாலை, சென்னை, வெளியீடு, 1915.
பதிப்பாசிரியர்குழு	: பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை-600 098, இரண்டாம் பதிப்பு, 1981.

——————— : பதினெண் கீழ்க்கணக்கு,
நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பி.லிட்.,
சென்னை-600 098,
இரண்டாம் பதிப்பு, 1981.

பாரதிதாசன், : அழகின் சிரிப்பு,
சென்னை–600 001,
பதினெட்டாம் பதிப்பு, 1987.

ராதா தியாகராசன் : கந்தரலங்காரம் (பொழிப்புரை)
வானதி பதிப்பகம், சென்னை–17
முதற்பதிப்பு, 1986 (ஆகஸ்ட்)

வேங்கடசாமி நாட்டார், ந மு., : சிலப்பதிகாரம் மூலமும் உரையும்,
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
சென்னை – 600 001
மறுபதிப்பு, 1968 (மார்ச்சு)

வேங்கடசாமி நாட்டார் ந.மு., வேங்கடாசலம்பிள்ளை, ரா., (பதவுரை, விளக்கவுரை) : அகநானூறு,
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
சென்னை – 600 001
மறுபதிப்பு, 1968 (மார்ச்சு)

———— : கலித்தொகை
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
சென்னை - 600 001
மூன்றாம் பதிப்பு, 1949

———— : திருக்குறள் மூலமும்
பரிமேலழகர் உரையும்,
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக்
கழகம்
சென்னை - 600 001
முதற்பதிப்பு, 1987 (பிப்ரவரி)

3. நூல்கள்:

கண்ணதாசன், : அர்த்தமுள்ள இந்து மதம்
(முதல் பாகம்)
வானதி பதிப்பகம்
சென்னை - 600 017
இருபத்துஅய்ந்தாவது பதிப்பு,
1987

காந்தி.க., : தமிழர் பழக்கவழக்கங்
களும் நம்பிக்கைகளும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை - 600 020
முதற்பதிப்பு, 1980 (டிசம்பர்)

காந்தி.க., (தொகுப்பு) : தமிழர் எண்ணங்கள்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
பதிப்பு, 1983 (மார்ச்சு)

கைலாசபதி, க., : **பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்**
மக்கள் வெளியீடு,
சென்னை, பதிப்பு, 1978

சிதம்பரனார், சாமி., : **பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்**
இலக்கிய நிலையம்
சென்னை - 600 024
இரண்டாம் பதிப்பு, 1964
(மார்ச்சு)

சுசீலா கோபாலகிருஷ்ணன் : **சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்**
பாலாஜி பதிப்பகம்
மதுரை - 625 020
முதற்பதிப்பு, 1987 (பிப்ரவரி)

சோமலெ, : **தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்**
நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
மறுபதிப்பு, 1981

தமிழ்நாட்டுவரலாற்றுக் குழு : **தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் - வாழ்வியல்**
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை - 600 006
முதற்பதிப்பு, 1983

நாசீர்அலி, மீ.அ.மு., : நாட்டுப்புறப் பண்பாட்டியல்
இக்ரஹ் பப்ளிகேஷன்ஸ்,
திருச்சி - 620 021
முதற்பதிப்பு, 1987

யோகீசுவரன், பி., : தமிழ்க் கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்
நீலா பதிப்பகம்
சென்னை - 600 090
முதற்பதிப்பு, 1985 (ஏப்ரல்)

லூர்து, கே. (பதி.ஆ.) : நாட்டார் வழக்காற்றியல்
பாரி வேள்பதிப்பகம்
திருநெல்வேலி - 7
முதற்பதிப்பு, 1981

வெரிஜின் சிகாமணி, து., : அடிப்படை அரசியல் கோட்பாடுகள்
தமிழ் நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை
முதற்பதிப்பு, 1978 (பிப்ரவரி)

4. இலக்கண நூல்கள்:

———————— : தொல்காப்பியம் சொல்லதிகாரம் மூலமும் சேனாவரையமும்,
இரண்டாம் பதிப்பு, 1955

———————— : தொல்காப்பியம் பொருள
திகாரம் நச்சினார்க்
கினியர்
கழகவெளியீடு,
திருநெல்வேலி, 1966

———————— : தொல்காப்பியம் பொருள
திகாரம்
இளம்பூரணருரை,
கழக வெளியீடு,
சென்னை, 1967

துணைநூற் பட்டியல் - II

இராகுகால பூசையும் நம்பிக்கையும்

அ. அகராதிகள்

1. சிங்காரவேலு முதலியார், அ., — அபிதான சிந்தாமணி, ஏசியன் எசுகேசனல் சர்வீஸஸ், புதுடெல்லி-16.
2. தொகுப்பு, — மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ.மா. கோபாலகிருட்டிணக் கோன் வெளியிட்டது, வெளியீடு, 1937.

ஆ. நூல்கள்:

1. அம்மன் சத்தியநாதன் (தொகுப்பு) — ஸ்ரீ துர்காதேவி தோத்திரமாலை, அம்மன் பதிப்பகம், சென்னை-14, முதற்பதிப்பு, 1985.
2. கம்பர் — கம்பராமாயணம். (யுத்தகாண்டம்), கம்பன்கழகம், சென்னை, மறுஅச்சீடு, 1977
3. சாமிநாததேசிகர், கோபாலையர், தி.வே (பதி) — இலக்கணக் கொத்து மூலமும் உரையும், தஞ்சை சரசுவதி மகால், கி.பி. 1973.

4. சுந்தரசண்முகனார் — **நாலடியார் நயவுரை,**
புதுவைப் பைந்தமிழ்ப்பதிப்பகம்,
புதுச்சேரி–1 பதிப்பு, 1970.

5. திருஞானசம்பந்தர் — **கோளறு திருப்பதிகம்,**
திருவாவடுதுறை ஆதீனம்,
பதிப்பு, 1961.

6. திருத்தக்கதேவர் — **சீவகசிந்தாமணி மூலமும்
நச்சினார்க்கினியர்
உரையும்**
உ.வே.சா. பதிப்பு,
ஐந்தாம்பதிப்பு–1949.

7. விட்டலாபுரம்ராஜன் — **நாகதோசமும் நிவர்த்தி
பரிகாரமும்,**
ஸ்ரீ இந்து பப்ளிகேசன்ஸ்
சென்னை–17
இரண்டாம் பதிப்பு, 1987

8. ஜம்புலிங்கம் பிள்ளை, சே.வெ. (தொகுப்பு) — **முருகமஞ்சரி**
நாசனல் ஆர்ட் பிரஸ்,
சென்னை-18 பதிப்பு, 1952

9. ஸ்ரீ துர்க்கைச் சித்தர் — **பலன் தரும் இராகுகால
பூசை,**
பைலட் பப்ளிகேசன்,
சென்னை-1,
முதற்பதிப்பு, 1988

10. ———— கலித்தொகை,
திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி,
மூன்றாம் பதிப்பு, 1949.

11. ———— புறநானூறு மூலமும்
உரையும்
சென்னை லாஜர்னல் அச்சுக்
கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றன.
மூன்றாம் பதிப்பு, 1935.

12. ———— ஸ்ரீ நாலாயிரத் திவ்வியப்
பிரபந்தம் (பாகம்–1)
தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
சென்னை, மறுஅச்சு, 1980

இ. மொழி பெயர்ப்பு நூல்:

விதாலி ஃபுர்னிக்கா, முகம்மது செரீபு.நா., (தமிழாக்கம்) — பிறப்பு முதல் இறப்பு
வரை,
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்,
சென்னை–98,
முதற்பதிப்பு–1986.

ஈ. இதழ்கள்:

1. ———— பௌர்ணமி இதழ்
தஞ்சை, மலர். 1, இதழ் 7,
தேதி 14—10—89.

2. பெயர் தெரியாத இதழ்

பின்னிணைப்பு

தமிழ் மக்களிடையில் இன்று நிலவும் நம்பிக்கைகள் பின்வரும் தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன

1. ஆடவர் நம்பிக்கை;

1. ஆண்கள் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்துஆசிபெற வேண்டும்.
2. ஆண்களுக்கு வலதுகண் துடித்தால் நல்லது நடக்கும்.

2. இறப்பில் நம்பிக்கை:

1. பிண ஊர்வலம் எதிரே வந்தால் நல்ல சகுனம்.
2. பெண் பார்க்கப்போகும் இடத்தில் பக்கத்து வீட்டிலோ வழியிலோ இறப்பு இருக்கும் என்றால் அந்தப்பெண் வரும் இடம் நன்றாக இருக்கும்.
3. இறப்பு ஊர்வலத்தில் பொரி இறைத்துவரும் முறத்தை முறிப்பர். இது இறந்தவர் செய்தபாவங்கள் அழிக்கப்படுகின்றன என்ற நம்பிக்கையில் செய்யப்படுவது.
4. சனிப்பிணம் துணை தேடும் என்ற நம்பிக்கை.

3. கனவு நம்பிக்கை:

1. கனவில் திருமணம் நடந்தால் வீட்டில் யாராவது இறப்பர்.
2. இறப்பதுபோன்று கனவு கண்டால் வீட்டில் திருமணம் நடக்கும்.

3. கோவில் கும்பாபிஷேகம் நடந்தால் வீட்டில் சாவு நிகழும்.
4. கனவில் சாமி ஊர்வலம் வந்தால் யாராவது சாவார்கள்.
5. கனவில் நட்சத்திரம் கீழே விழுந்தால் யாராவது இறப்பர்.
6. போலீஸ்காரன் கனவில் துரத்துவதாக இருந்தால் எமன் ஊரில் யாரையாவது பிடிப்பதாக அர்த்தம்.
7. கனவில் பாம்பு கடித்தால் சனியன் வருகிறது.
8. பாம்பு கனவில் துரத்தினால் சனியன் பிடிக்கின்றது.
9. கனவில் இரயிலில் பயணம் செய்வதாக இருந்தால் நன்மை நடக்கும்.
10. வீடு பற்றியோ வைக்கோல் போர் எரிவதாகவோ கனவு கண்டால் வீட்டில் உள்ளவர்களோ சொந்தக் காரர்கள் குடும்பத்திலோ பெண்கள் வயதுக்கு வருவார்கள்.
11. கருத்தரித்தவர்கள் கனவில் தங்கநகை வாங்குவதாகக் கனவு கண்டால் பெண் குழந்தை பிறக்கும்.
12. கனவில் காசு கிடைப்பதாகக் கண்டால் உடல் நிலை கெடும்.
13. கனவில் யாராவது சீட்டுக் கொடுத்தால் எமன் அவர்களின் ஆயுளை முடிப்பார்.
14. பெண்கள் அணியும் கால் மெட்டி, தாலி, கம்மல் இவற்றைக் கழற்றிக் கொடுப்பதாகக் கனவு கண்டால் கணவன் இறப்பான்.

4. குழந்தை நம்பிக்கை:

1. தலைச்சன் பெண் பிறந்தால் குடும்பம் நன்றாக இருக்கும்.
2. ஆண் குழந்தை பிறந்தால் தாய் தகப்பனுக்கு அடங்காது.
3. எட்டாம்பேறு ஆண் பிறந்தால் குடும்பம் நன்றாக இருக்கும்.
4. ஐந்தாம்பேறு பெண் பிறந்தால் பிறந்த இடம் சுகமாக இருக்கும்.
5. எட்டாம்பேறு பெண் பிறந்தால் எட்டிப்பார்க்கும் இடம் எல்லாம் பாழ்.
6. பத்தாம்பேறு குழந்தை பெற்றால் தாயையோ தந்தையையோ சாக அடிக்கும்.
7. மூன்றாம் குழந்தைப்பேறு தாய் வீட்டில் நிகழ்ந்தால் தாய்வீட்டிற்கு ஆகாது.
8. குழந்தைகள் கீழ் உதட்டைக் கடித்தால் நோய் வரும்.
9. குழந்தைக்கு மூக்கின்மேல் அழுக்கு சேர்ந்தாலும் நோய் வரும்.
10. குழந்தை மாலை போட்டுப் பிறந்தால் மாமனுக்கு ஆகாது.
11. குழந்தை பிறக்கும்போது (விலங்கு) போட்டுப் பிறந்தால் குடும்பம் சண்டைசாடியில் மாட்டி இருக்கும்.

12. ஞாயிற்றுக்கிழமை குழந்தை பிறந்தால் துடுக்காக இருக்கும்.
13. வியாழன் ஆண்பிள்ளை பிறந்தால் எந்த விதை போட்டாலும் நன்றாக விளையும்.

5. சாதி நம்பிக்கை:

1. ஒற்றைப் பிராமணர் எதிரில் வந்தால் சகுனம் சரியில்லை.
2. கிராமணி (மரம் ஏறுவர்) எதிரில் வந்தால் வெளியே போகக்கூடாது.
3. வாணியன் – (எண்ணெய் விற்பவன்) எதிரே வந்தால் சகுனத்தடை.

6. நாள் நம்பிக்கை:

1. வெள்ளிக்கிழமைதோறும் விளக்கு பூசை செய்ய வேண்டும்.
2. இராகுகாலத்தில் எந்த நல்ல காரியம் செய்யவோ வெளியூர்களுக்குப் போகவோ கூடாது.
3. செவ்வாய், வெள்ளி நாட்களில் பழைய துணிகளை யாருக்கும் தானம் செய்யக்கூடாது.
4. வெள்ளிக்கிழமைகளில் கடையில் எண்ணெய் வாங்கக்கூடாது.
5. அஷ்டமி, நவமி நாட்களில் எந்த நல்ல காரியமும் செய்தல் கூடாது.

6. வீடுகளில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கண்ணாடி உடைதல் கெட்டது.
7. இராகுகாலங்களில் கோயிலுக்குச் சென்று இராகு கால பூசையை மேற்கொள்ளுதல் நலம்.
8. விசேஷ நாட்களில் சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு கொடுக்கும்போது அமங்கலிகளைத் தவிர்ப்பது நல்லது.
9. செவ்வாய், வெள்ளி நாட்களில் பணத்தைப் பிறருக்குக் கொடுப்பதைத் தவிர்ப்பது.

7. பறவை நம்பிக்கை:

1. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர்.
2. வெளியில் செல்லும்போது காக்கை வலமிருந்து இடம்போதல் கெடுதல்.
3. காலைவேளையில் காக்கைக்கு அன்னம் இட்டு விட்டுத்தான் உண்ணவேண்டும்.
4. ஆந்தை உட்கார்ந்த வீடு விருத்திக்கு வராது.
5. கருடன் ஆகாயத்தில் பறக்கும்போது எந்த நாட்களில் பார்த்தாலும் நல்லது.
6. காக்கைக்கு உணவுவைத்த பின் கை கழுவ வேண்டும்.
7. காக்கை தலையில் அடித்தால் வீட்டிலோ உறவினரோ யாராவது இறப்பர்.
8. ஒரு அண்டங்காக்கையைப் பார்த்தல் துன்பம். இரண்டு அண்டங்காக்கையைப் பார்த்தல் மகிழ்ச்சி.

8. பயண நம்பிக்கை:

1. வெளியில் கிளம்பும்போது மங்கலமாக இருப்பவர் வந்தால் காரியம் கைகூடும்.
2. பூனை குறுக்கேவந்தால் பயணம் ஆகாது.
3. ஏகாலி எதிரேவந்தால் பயணத்திற்கு ஆகாது.
4. அம்பட்டன் எதிரே வந்தால் பயணத்திற்கு ஆகாது.
5. விறகு, செத்தை கட்டாக எடுத்துக்கொண்டு பயண நேரத்தின்போது வந்தால் போகும் காரியம் நிறைவேறாது.
6. பெண் பார்க்கப்போகும்போது கழுதை கத்தினாலோ எதிரே வந்தாலோ பெண் அமைவதோடு குடும்பத்திற்கு நல்ல பெண்ணாக அமையும்.

9. மகளிர் நம்பிக்கை:

1. பெண் குழந்தைகள் மல்லாந்து படுக்கக்கூடாது.
2. புதுமணப்பெண் முதன்முதலில் வலது கால் எடுத்து வைத்துத்தான் கணவன் வீட்டினுள் நுழைய வேண்டும்.
3. தாய் வீட்டில் பெண்கள் முந்தானை விரித்துப் படுத்தல் கூடாது.
4. கணவனை இழந்த தாய்மார்கள் நல்ல காரியங்களில் முன்னால் வருவது தவறு.
5. கர்ப்பிணிப் பெண்களை வெளியில் அனுப்பும் போதும் அவர்களுக்குப் பலகாரங்களைச் செய்து கொண்டு போகும்போதும் வேப்பிலைக் கொத்து வைத்தல் வேண்டும்.

6. பெண்கள் மாதவிடாய் நாட்களில் புண்ணியஸ் தலங்களுக்குப் போவதைத் தவிர்த்தல் வேண்டும்.
7. மாதவிடாய் நாட்களில் வாசனை மலர்கள் உள்ள செடிகளிடம் குறிப்பாகத் துளசிச் செடியிடம் நெருங்குவது தவறு.
8. இடதுகண் துடிப்பதால் பெண்களுக்கு நல்லது நடக்கும்.
9. பெண்கள் தலைமுழ்கி உடனே சீப்புப் போட்டுச் சீவினால் சகோதரர்களுக்கு ஆகாது.
10. பெண்கள் தங்களின் தாலியை நேருக்கு நேராக நின்று காட்டிக்கொண்டால் கணவருக்கு ஆகாது.
11. பெண்கள் ஐந்து சனிக்கிழமை தொடர்ந்து தலை முழுகினால் அவர்கள் செல்வாக்குக் குறைந்து விடும்.
12. மாசி மாதம் பெண் வயதுக்கு வந்தால் மங்கலத்தை இழப்பாள்.
13. சித்திரையில் பெண் பிறந்தால் மறு சித்திரைக்கு மங்கை நூல் இழப்பாள்.
14. செவ்வாயில் பெண் பிறந்தால் தோஷம் வரும்.
15. பெண்கள் குப்புறப் படுக்கக் கூடாது.
16. கர்ப்பிணிப் பெண்கள் முழுக்காயை உடைக்கக் கூடாது.
17. கர்ப்பிணிப் பெண்கள் சாப்பிட ஆசைப்பட்டதைச் செய்து தரவேண்டும்.

10. **மழை நம்பிக்கை:**

1. கோழி, இறக்கையை விரித்தால் மழை வரும்.
2. கறுப்பு எறும்பு, வரிசையாகச் சென்றால் மழை வரும்.
3. தும்பி பறந்தால் மழை வரும்.
4. கொடிக்கால் (சனி மூலை) மின்ன வெடிகாலம் (விடியற்காலை) மழை வரும்.
5. நாரை, கூட்டமாகப் பறந்துசென்றால் மழை வரும்.

11. **மாத நம்பிக்கை:**

1. கார்த்திகைப்பிறை தெரிந்தால் நெல் நாற்று நடுகையை நிறுத்திவைப்பது நல்லது. அந்த ஆண்டு மழை நன்றாகப் பெய்யும்.
2. ஆடி மாதம் பதினைந்தாம் தேதி மதியம், உச்சிப் பொழுது சூரியனை மேகம் மறைத்தால் அந்த ஆண்டு மழை நன்றாகப் பொழியும்.
3. தமிழ் ஆண்டு, சித்திரை முதல் தேதி, புதன்கிழமை பிறந்தால் அந்த ஆண்டு செழிப்பாக, வளம் நிறைந்து இருக்கும்.
4. ஆடிப்பிறையும் தைப்பிறையும் வடக்கே சாய்ந் திருந்தால் வரப்பெல்லாம் நெல்லாகவும், தெற்கே சாய்ந்திருந்தால் தெருவல்லாம் பஞ்சமாகவும் இருக்கும்.

12. **வாகன நம்பிக்கை:**

1. வாகனத்தின் வண்ண நம்பிக்கை
2. வாகன எண் நம்பிக்கை

3. வாகன எழுத்து நம்பிகை.
4. வாகனத்தைக் கிளப்பும்போது கடவுள் துதி நம்பிக்கை.
5. வாகனத்திற்குத் திருஷ்டிக்கயிறு, படிகாரம் இவற்றை அணிவிப்பது நம்பிக்கை.
6. முதலில் கிளம்பும்போது திசை பற்றிய நம்பிக்கை.
7. நீண்ட பிரயாணத்துக்கு முன்பும் பின்பும் கடவுள் துதி நம்பிக்கை.
8. வாகனத்தில் அமர்வார்களின் எண்ணிக்கையில் ஒரு நம்பிக்கை.
9. வாகன ஓட்டியின் ராசி நம்பிக்கை.
10. வாகனத்தைக் கிளப்பும்போது சகுன நம்பிக்கை.
11. நல்ல நேரத்தில் வாகனத்தில் செல்வதொரு நம்பிக்கை.
12. வாகனத்தில் உள்ளே கடவுள் படம் வைப்பது அல்லது வேறு நம்பிக்கைப் படம் வைப்பது.
13. உள்ளே வைக்கப்பட்டிருக்கும் படத்துக்கு மலர் அணிவிப்பது, ஊதுவத்தி கொளுத்துவது.
14. வாரம் ஒருமுறை வாகனத்துக்குத் திருஷ்டி கழிப்பது.
15. வாகனத்தின் முன்புறம் எலுமிச்சைப்பழம் தொங்க வைப்பது.
16. வாகனத்தின்முன் மிளகாய்ப்பழம், எலுமிச்சை தொங்கவிடுவது.
17. வாகனத்துக்குத் தினமும் கற்பூரதீபம் காட்டுவது.
18. வாகனத்துக்குத் தினமும் எலுமிச்சை சுற்றிப் போடுவது.

13. வாழ்வியல் நம்பிக்கை

1. சூரிய உதயத்திற்குள் வாசல் தெளித்துக் கோலம் போடவேண்டும்.
2. வாசலில் நின்று தலையை வாரக்கூடாது.
3. சாப்பிடும்போது ஈரத்துணியுடன் சாப்பிடவோ பரி மாறவோ கூடாது.
4. சாப்பிடும்போது தட்டில் சாதம் இடதுகை ஓரமாகவே வைக்கப்படவேண்டும்.
5. சுபகாரியத்தைச் செய்யச் சொல்லும்போது சகுனம் பார்த்தல்.
6. உள்ளங்கை அரித்தால் பண வரவு.
7. சாப்பாட்டில் கரித்துண்டு இருந்தால் விருந்துக்கு அழைப்பு வரும்.
8. விளக்கு வைக்கும் நேரத்திற்குமுன் வீட்டிலிருந்து பெண்களை – சுமங்கலிகளை – வெளியே அனுப்பக் கூடாது.
9. விளக்கு வைக்கும் நேரத்திற்குமுன் சாப்பிடக்கூடாது.
10. விளக்கு இல்லாமல், இருட்டில் சாப்பிடக்கூடாது.
11. விளக்கு வைத்தபின் (இரவில்) வீட்டைப் பெருக்கக் கூடாது. பெருக்கினாலும் குப்பையை வெளியே போடக்கூடாது.
12. ரோமம் விழுந்த தண்ணீரைக் குடிக்கக்கூடாது.

13. தண்ணீரில் முதலில் காலைவிடக் கூடாது.

14. இராத்திரிநேரத்தில் உப்பின் பெயரை வேறுபெயர் சொல்லித்தான் குறிப்பிடவேண்டும்.

15. சாதித் திருடர்கள் அமாவாசை அன்று திருட வர மாட்டார்கள்.

16. ஏணிப்படிக்கட்டுகள் ஒற்றை இலக்கத்தில் இருக்க வேண்டும்.

17. வாழைஇலையில் சாப்பிட உட்காரும்போது நுனி இலை இடதுபக்கம் வரும்படியாகப் போடவேண்டும்.

18. இரவில் தலை வாருதல் கூடாது. கண்ணாடி பார்க்கக்கூடாது.

19. ஒரு கையை ஊன்றிக்கொண்டு சாப்பிடக்கூடாது.

20. புரைஏறினால் யாரோ வேண்டியவர்கள் நினைக்கிறார்கள்.

21. ஒற்றைத் தும்பல் சகுனப்பிசகு.

22. பிறந்த கிழமையில் எண்ணெய் வைத்துத் தலை முழுகுதல் கூடாது.

23. வேண்டியவர்களை வழியனுப்பிவிட்டு வந்து தலை முழுகுதல் கூடாது.

24. வேண்டியவர்களிடமிருந்து செய்தி வந்த அன்று தலைமுழுகுதல் கூடாது.

25. உலையில் அரிசி போடும்போது சிந்தக்கூடாது.

26. சனி பகவான் கோவிலில் விழுந்து கும்பிடக்கூடாது.

27. எந்தப் பொருளையும் இடதுகையால் யாருக்கும் கொடுக்கக்கூடாது.

28. கண் துடித்தால் பார்க்காதவர்களைப் பார்க்க வாய்ப்பு ஏற்படும்.

29. காலையில் கண்விழித்ததும் கருங்குரங்கு முகத்தில் விழித்தல், உள்ளங்கையைப் பார்த்தல், பயிர் பச்சை முகத்தில் விழித்தல் இவை விசேஷம் நல்லது.

30. வீட்டிற்கு மாடு பிடிக்கும்போது கொம்பு விரித்தாற் போல் இருந்தால் அதைப் பிடித்துச்செல்லுதல் வீட்டிற்கு ஆகாது.

31. பிறந்த நாளில் தலை முழ்கினால் அது உடம்பிற்கு ஆகாது.

32. கதவில் துணியைப் போட்டால் வீட்டில் சண்டைசச் சரவு வரும்.

33. அரிசியைக் கழுவிக் கல்லை இறைத்தாலும் குடும்பத்தில் சண்டை வரும்.

34. ஒற்றைக்கல் மோதிரம் போடுபவர்கள் கால் மெட்டியை மிதித்தால் மிதிப்பவர்களுக்கு ஒத்தைத் தலைவலி வரும்.

35. நகத்தில் சொத்தை விழுந்தால் குடும்பத்திற்குக் கெட்டது.

36. சாப்பிடும்போது விளக்கு நின்றால் தரித்திரம்.

37. வாசலில் உட்கார்ந்துகொண்டு தும்மினால் தரித்திரம்.

38. வெள்ளிக்கிழமையில் கிழிந்த துணியைத் தைக்கக் கூடாது.

39. வியாழனில் புதுத்துணி கட்டினால் அதிகமாகத் துணி சேரும்.

40. அரிசி அளக்கும்போது படி சாய்ந்தால் அல்லது அரிசி சிந்தினால் விருந்தாளி வருவார்கள்.

41. கல்யாணச் சாமான்கள் வாங்கப் பட்டியல் போடும் பொழுது முதலில் மஞ்சள், குங்குமம் எழுதிய பிறகே பிறவற்றை எழுதுதல் வேண்டும்.

42. தினமும் அந்தி சாயும் நேரம் பின் கதவைத் தாளிட்டு விட்டுதான் சாமிக்கு விளக்கு ஏற்றவேண்டும்.

43. அந்தி சாயும் நேரத்தில் துர்தேவதைகள் பறந்து கொண்டு இருப்பதால் நல்ல சொற்களையே பயன் படுத்துதல் வேண்டும்.

44. விளக்கு வைத்தபின் அண்டை அசல் வீட்டிலிருந்து ஊசி, தயிர் போன்ற சாமான்கள் கடன் கேட்கக் கூடாது.

45. வீட்டுப் படிக்கட்டைவிட்டு இறங்கும்போது எதிரில் நல்ல சகுனம் பார்த்து இறங்குதல்.

46. ஒரு நல்ல காரியம் பேசப் போகும்பொழுது மூன்று நபர்களாகப் போகக்கூடாது.

47. நவராத்திரி ஒன்பது நாளும் பழைய துணிகளைத் தைக்கக்கூடாது.

48. விளக்கு வைக்கும் நேரம் வீட்டில் படுத்து உறங்குதல் கூடாது.

49. பிறந்த குழந்தையைப் பார்ப்பதற்கு யாராவது வந்து விட்டுப் போனபிறகும் வியாழன், ஞாயிறு நாட்களிலும் திருஷ்டி சுற்றுவது ஒரு நம்பிக்கை.

50. விளக்கு வைத்தவுடன் எள், ஊசி இவைகளைக் கடையில் விற்பனை செய்தல் கூடாது.

14. விலங்கு நம்பிக்கை:

1. நரி முகத்தில் விழித்தால் நன்மை.
2. கழுதை கத்தினால் நல்ல பயன்.
3. பல்லி சொல்லுக்கும் நல்ல பலன்.
4. கட்டிவைத்திருக்கும் மாடு தரையைப் புரண்டினாலும், துள்ளிக் குதித்தாலும் கட்டி இருக்கும் இடத்தைச் சுற்றி வந்தாலும் வீட்டிற்கு ஆகாது.
5. மாட்டிற்கு உடம்பில் சுழி இருந்தால் அதைப் பிடித்துச் செல்பவர்களுக்கு ஆகாது.
6. நாய் உதறிக்கொண்டு ஓடினால் நல்ல சகுனம்.
7. வளர்க்கின்ற வீட்டில் நாய் அழுதால் அந்த வீட்டில் யாராவது இறப்பர்.

8. ஆமை புகுந்தவீடு முன்னேறாது.
9. நாய் ஓலமிடக்கூடாது.
10. தெருவில் நடக்கும்போது பூனை குறுக்கே வந்தால் காரியத் தடையாகும்.

15. விவசாயத்தில் நம்பிக்கை:

1. வீட்டுப் பயிர் சாகுபடி நன்றாக விளைந்தால் அந்தக் குடும்பத்தில் யாராவது இறப்பார்கள்.
2. பயிர்ச் சாகுபடி செய்ய விதையிடும் போதோ நடவின் போதோ யாராவது இறந்த செய்தியைக் கொண்டு வருவார்கள் என்றால் அந்தப் போகம் மகசூல் நன்றாக விளையும்.

தமிழர் அன்றும், இன்றும் நம்பிக்கைகள் மேல் வைத்த நம்பிக்கையில் இருந்து விடுபடவில்லை என்பதை அருட்கலையின் ஆய்வேடு மெய்ப்பிக்கிறது. இதுவே ஆய்வேட்டின் வெற்றி.

க.ப. அறவாணன்

•

நூல்களில் கிடைக்கும் செய்திகளைத் தொகுப்பது ஓர் எளிய செயல் என்றே தோன்றும். ஆனால் அதில் புகும்போதுதான் அதில் உள்ள இடர்ப்பாடு புலனாகும். வழக்காற்றில் வேறு விதமான தகவல் கிடைக்கும். எனவே கள ஆய்வையும் மேற்கொண்டு இந்த நூலைத் திறம்பட யாத்திருக்கிறார் நூலாசிரியர்.

T.B. சித்தலிங்கையா

பிறப்பிலிருந்து சாகும் வரை உள்ள நம்பிக்கைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். நம்பிக்கைகளைத் திரட்டி வகைப் படுத்திப் பொருள்கூறிக் காரணகாரியங்களையும் சொல்லி ஓர் அகர முதலியையே உருவாக்கலாம். மானிடவியல் ஆய்வுக்கு இது பெரிதும் பயன்படும்.

கி. ராஜநாராயணன்

அருட்கலையிடம் உள்ள அறிவுத்தாகம் தொடர்ந்து பல ஆய்வுகளை நடத்தித் தமிழ்ஆராய்ச்சி உலகம் சிறக்க அவரை இயக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அந்த அளவிற்கு ஆய்விற்கே உரிய முறையியல் அவருக்குச் சரியாகப் பிடிபட்டுள்ளது.

க. பஞ்சாங்கம்